சக்தி மலர்

கு. 94

கா. ராமநாதன் செட்டியார்
(மொழிபெயர்ப்பு)

டால்ஸ்டாய்

3471

கட்டுரைகள்



PRESEN... V. PR. PL. K. KASIVISWA... P...

நவீன நாகரிகத்தில் ஆழ்ந்து, உலகாயத்தில் மயங்கிய மனித குலம், உத்தம வாழ்க்கையைக் கேலிசெய்து வந்தது. இதோ அதன் பலனை - கோரவிளைவுகளை - காண்கிறோம். ஞானி டால்ஸ்டாயின் லட்சிய வாழ்க்கையை விளக்கும் இந்தக் கட்டுரைகளை, வேறெப்போது கவனிக்கத் தவறினாலும், இப்போது நாம் கட்டாயம் படிக்க வேண்டும்

3471

94

3471

தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

Presented by

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

டால்ஸ்டாய் கட்டுரைகள்

டால்ஸ்டாய்

கட்டுரைகள்

வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

மொழிபெயர்ப்பாளர் :
கா. இராமநாதன் செட்டியார்

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி :: மதுரை

முதற் பதிப்பு: பிப்ரவரி 1943

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கு

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

பதிப்புரை

காந்தியடிகள் அரசியலில் தமக்குக் குருவாகக்கொண்ட பெரியார், ருஷிய ஞானி லியோ டால்ஸ்டாய். கொடும் போர் நடந்துவரும் இக் காலத்திலே, ருஷிய மக்கள் மட்டுமேயன்றி, உலக மக்கள் அனைவரும் டால்ஸ்டாயின் நூல்களை ஊன்றிப் படித்து வருகிறார்கள். அப் பெரியாருடைய அறிவுச் செல்வத்திலே தமிழ் மக்களும பங்கு கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு, அவர் கட்டுரைகளிலே சிறந்த ஐந்து கட்டுரைகளை இந்த மலரிலே வெளியிட்டிருக்கிறோம்.

வழக்கறிஞர் கா. இராமநாதன் செட்டியாரவர்கள் நல்ல முறையிலே இக் கட்டுரைகளை மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

சக்தி காரியாலயத்தார்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
க.	இன்னுமொரு வார்த்தை	1
உ.	செய்யாமை	21
௩.	முதல் படி	55
௪.	உணர்வழிக்கும் பொருளை உண்பதேன் ?	96
௫.	உழைப்பும் சோம்பலும்	119

இன்னுமொரு வார்த்தை

நான் 'க்ருசர் சுஞேதா' என்று ஒரு கதை யெழுதி யிருக்கிறேன். அக் கதையால் நான் அறிவிக்க வெண்ணிய போதனையை விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டு மென்று, எனக்குத் தெரியாத பலரிட மிருந்து கடிதங்கள் வந்தன; இன்னும் வந்துகொண் டிருக்கின்றன. என்னல் கூடியவரை அவர்களுக்குப் பதில் கூறுவேன். என் கதைமூலமாகச் சொல்ல நினைத்த போதனையைச் சுருக்கமாகக் காட்டுவேன். இவைகளே அக் கதையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய விஷ யங்கள்.

அக் கதையால் முதலில் தெரிவிக்க நினைத்தது என்ன? சமுதாயத்தின் எல்லா வகுப்பிலும் ஒரெண்ணம் வேரூன்றி நிற்கிறது. தவருன விஞ்ஞானக் கலையுணர்ச்சியே அதற்கு ஆதரவு. அவ்வெண்ணமாவது, 'ஆண் பெண் சேர்க்கை உடல் நலத்திற்கு இன்றியமையாதது' என்பதுதான். பணமின்மையால் கல்யாணம் செய்துகொள்ள முடியாத வர்கள், ஏதோ சொற்பச் செலவில் இவ்வாசையைப் பூர்த்திசெய்து கொள்வது இயல்பென்று கருதப்படுகி றது; இம்முறை சரி யென்றும் ஆமோதிக்கப்படுகிறது.

இவ்வெண்ணம் எங்கும் பரவி விட்டது; அழுத்த மாக வேரூன்றி விட்டது; டாக்டர்களும் இதைச் சொல் கிருர்கள். பெற்ருேர்களில் சிலரும் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த ஒழுங்கீனமான நடத்தைக்கு ஏற்பாடு செய்கிருர் கள். மக்கள் ஒழுங்காக நடக்க ஏற்பாடுசெய்யவேண்டிய வர்கள் அரசாங்கத்தார்; ஆனல் அவர்களே, 'தாசிகள் ஆடவர்களுக்குத் தேவை' என்று நினைத்து, தாசிகளுக்கு அனுமதி கொடுத்து, ஆடவர் ஒழுக்கத்தைக் கெடுக் கிருர்கள்; உடலையும் பாழாக்குகிருர்கள். மணமாகாத வாலிபர்கள் இதுவே நியாயமென்று கருதி இந்தப் படு குழியில் வீழ்கிருர்கள்.

இது தவறென்று காட்ட நினைத்தேன். சிலருடைய நன்மைக்காக மற்றவர்களின் உடலும் உயிரும் கெடலாகாது. சிலர் உடல் நலத்தோடிருக்க வேண்டுமென்று, வேறு சிலரது இரத்தத்தைக் குடிக்கக் கூடாது.

இத் தவற்றுக்கும் மோசத்துக்கும் நாம் ஆளாகக் கூடாதென்று தெரிந்துகொள்ள வேண்டும். பொய்யான விஞ்ஞான நூல்களைக் காட்டிய போதிலும், ஒழுங்கீனமான கொள்கைகளைத் தொலைத்துவிட வேண்டும். பெற்ற குழந்தைகளைக் கைவிடுவதும், குழந்தையைக் காப்பாற்றும் பொறுப்பைப் பெண்ணின் தலையிலே சுமத்தி விடுவதும், குழந்தை பிறவாமல் தடுப்பதும் சிறிதுகூட ஒழுங்கான காரியமன்று; இவை வெட்கக் கேடான செய்கைகள். இதனை நாம் நன்குணர வேண்டும். உணர்ச்சியும் மானமுமுள்ளவர்கள் இம்மாதிரி செய்யலாகாது.

இந்தப் படுகுழியிலிருந்து தப்ப, மக்கள் இயற்கையோடொட்டிய வாழ்க்கையை நடத்த வேண்டும். போதைப் பொருள்களை உண்ணலாகாது. புலாலுணவும் அளவுக்கு மிஞ்சிய உணவும் கொள்ளக் கூடாது. தேகப் பிரயாசையின்றிச் சோம்பியிருத்த லாகாது. இதற்காக, மல்யுத்தம் செய்ய வேண்டும் அல்லது விளையாட்டுகள் விளையாடவேண்டு மென்பதில்லை. உடலுக்குக் களைப்பைத் தருகிற வேலையைக் கண்டு பின்வாங்க லாகாது. மேலும், பெண்களைக் கூடுவதை மனத்தாலும் நினைக்கக் கூடாது. தன் தாய், உடன் பிறந்தாள், நெருங்கிய உறவினர், நண்பன் மனைவி—இவர்களுடன் கூடுவதை எப்படி ஒருவன் வெறுப்பானே அப்படியே அன்னியப் பெண்களுடன் கூடுவதையும் வெறுக்க வேண்டும்.

இவ்வாறு கட்டுப்பட்டிருத்தல் கூடியதொன்றே. ஒழுக்கங் கெட்டு அலைவதைவிட, இது கெடுதலன்று; கஷ்டமானதன்று. இதன் உண்மையை யறியவேண்டுமானால், உங்களைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான மக்களைப் பார்க்கலாம்.

இதுவே முதலாவதாக நான் சொல்ல நினைத்தது.

இரண்டாவது: கல்யாணத்துக்கு முன்பு காலியாய்த் திரிவது, உடல்நலத்துக்கு உகந்த தென்றும் இன்பந்

தருவதென்றும் சிலர் கருதுகிறார்கள்; இவ்வாறு இதனை நிலையான ஓர் இன்பமாகக் கருதுவதால், மணமானவர்களின் நடத்தையும் கெடுகிறது.

இவ்வொழுக்கம் தவறென்றே சொல்வேன். மக்கள் இவ்வாறு செய்யலாகாது. இவ்விஷயத்தில் அவர்களின் எண்ணம் மாற வேண்டும். காமம் பெரிய இன்பமன்று; உயர்ந்த நிலையன்று. மணத்திற்கு முற்பட்டதாயினும் சரி, பிற்பட்டதாயினும் சரி - காமநிலை இழிந்த நிலையே; வெறும் மிருகத்தன்மையுடையது. இதனைப் பெற்றோர்களும் பொதுமக்களும் அறிய வேண்டும். சிறுவர்களையும் சிறுமிகளையும் தூய எண்ணமுடையவர்களாகப் பழக்க வேண்டும். கல்யாணத்திலே மணமக்களிருவரும் ஒருவருக்ொருவர் செய்துகொடுக்கிற வாக்கைக் காப்பாற்ற வேண்டும். வியாபாரமுறையிலே மோசடி செய்வதையும், வாங்கினகடனைக் கொடுக்காதிருப்பதையும் எவ்வளவு இழிவாகக் கருதுகிறோம்? கல்யாணத்தின்போது கொடுத்த வாக்கினின்றும் பிறழ்வது அவைகளைவிட இழிவானதல்லவா? இழிந்த ஒழுக்கத்தை உயர்வாகப்பேசுவதும், கதைகளிலும், பாட்டுக்களிலும், கூத்திலும் அதைப் பெருமையாகச் சொல்லுவதும் கூடாது.

இதுதான் இரண்டாவது பொருள்.

மூன்றாவது பொருள் நம் சமூகத்தில் ஆண் பெண் கூட்டுறவைப்பற்றியுள்ள தவறான எண்ணத்தால் வருவது. கல்யாணத்தின் நோக்கமும் அதனால் விளையும் நன்மையும் சந்ததி விருத்தி யென்பதை மக்கள் மறந்து விடுகிறார்கள். மக்களைப் பெறுவது சிற்றின்ப லீலைகளுக்குத் தடையெனக் கருதுகிறார்கள். மணமானவர்களும் ஆகாதவர்களும், குழந்தை பிறப்பதைத் தடுப்பதற்குவேண்டிய உதவியைத் தேடுகிறார்கள்; மருத்துவம் கற்றோரிடம் அதற்கு வேண்டிய உதவியைப் பெறுகிறார்கள். இதனோடு, மற்றொரு வழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. வயிற்றில் குழந்தை இருக்கும்போதும், குழந்தை பால் மறக்கு முன்னரும், ஆணும் பெண்ணும் கூடுகிற கெட்ட வழக்கம் இப்போது பரவியிருக்கிறது. முன்னர் இவ்வழக்கம் கிடையாது. இப்போதும், உழவுத்தொழில் செய்கிற கௌரவமான பழைய குடும்பங்களில் இது கிடையாது.

இவ்விதச் சேர்க்கை மிகவும் கொடிதென்பது எனது எண்ணம்.

குழந்தை பிறப்பதைச் சில செயற்கை முறைகளைக் கொண்டு தடுப்பது தவறு. நான் இப்படிச் சொல்வதற்குக் காரணங்க ளிரண்டு. பெற்ற குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோருக்குள்ள சிரமமும் கவலையும், வெறும் காமத்தைப் புனிதப்படுத்துகின்றன. குழந்தை பிறப்பதைத் தடுத்துவிட்டால், காமம் அனுபவிப்பதில் ஈடுபடலாம் என்றெண்ணுவது முற்றிலும் பிழை. இது முதற் காரணம். இரண்டாவது: மனச்சாட்சிக்குப் பொறுக்கமுடியாத செய்கை, கொலை. பிறப்பைத் தடுப்பதும் கிட்டத்தட்டக் கொலை யாகாதா? குழந்தை வயிற்றி லிருக்கும்போதும், பால் மறக்கு முன்னரும், ஆணும் பெண்ணும் கூடுதல் தவறு. அது பெண்ணின் உடல் நலத்தையும் அவனது ஆன்ம பலத்தையும் அழிக்கிறது.

இதனால் ஏற்படுவது என்ன? இந்தத் தீய வழக்கங்களை ஒழிக்கவேண்டு மென்பது. இவைகளை ஒழிக்க நல்லொழுக்கம் வேண்டும். அந்த நல்லொழுக்கம் மணத்திற்கு முன்னரும் வேண்டும், பின்னரும் வேண்டும். ஒழுக்கம் விழுப்பந் தரும். அதனாலேயே மனிதருக்குப் பெருமை.

இதுதான் மூன்றாவது பொருள்.

நான்காவது: பெற்றோர் மக்களைத் தங்கள் காம இன்பத்துக்குத் தடையாகக் கருதுகிறார்கள்; அல்லது விதி வசமெனக் கருதிப் பொறுத்துக் கொள்ளுகிறார்கள்; அல்லது தாங்களிஷ்டப்பட்ட காலத்தில் குழந்தைகள் பிறக்க வேண்டு மென்றும், தாங்கள் நினைத்த எண்ணிக்கைக்கு மேல் பிறக்கக்கூடா தென்றும், குழந்தைகள் தங்களைச் சந்தோஷப்படுத்தவே பிறந்தன வென்றும் நினைக்கிறார்கள். குழந்தைகளை அறிவுடையவர்களாகவும் அன்புடையவர்களாகவும் கருதி, அவர்களுக்கு வேண்டிய பழக்கங்களைப் பயிற்றுவதில்லை. இதனால், மக்களாகப் பிறந்த குழந்தைகளும் மிருகங்களின் குட்டிகள்போல் வளருகின்றன. உடல் வளர்ச்சிக்கான பொய்யான நூல்களை நம்பி அதிக உணவை ஊட்டி மிருகங்களை வளர்ப்பதுபோல் குழந்தை

களைக் கொழுக்க வைக்கிறோம். அவர்களைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ள நினைப்பதில்லை.

இந்தச் செல்லக் குழந்தைகளுக்குக் காமப்பித்து அதிகம். சின்னஞ்சிறு வயதிலேயே இது உண்டாகிறது. அறிவுப் பருவம் நெருங்கும்போது தாங்க முடியாத கஷ்டங்க ளேற்படுகின்றன. அவர்களின் வாழ்க்கையிலுள்ளவை அனைத்தும்—ஆடை, புத்தகம், காணும் காட்சி, இசை, நாடகம், இனிய உணவு, பார்க்கும் படம்முதல் படிக்கும் கதை, பாட்டு வரை, ஒவ்வொன்றும்—இந்தத் தீய உணர்ச்சியை மேலும் வளர்க்கிறது. ஆதலால், சிறுவர்களும் சிறுமிகளும் கொடிய வழக்கங்களுக்காளாகி, பொல்லாத நோய்வாய்ப்பட்டு, துன்ப வாழ்க்கையே தங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுகிறார்கள். இந்தத் துன்பங்கள் அறிவுவந்த பின்னுந் தொடர்கின்றன.

இதுவும் தவறென்பது எனது எண்ணம். மக்களை மிருகக் குட்டிகளைப்போல் வளர்க்கலாகாது. மக்களை வளர்ப்பதில், அவர்களுடைய உடம்பைக் கவனிப்பதைவிட, வேறு உன்னத நோக்கங்களு மிருக்கவேண்டும்.

இதுதான் நான்காவது பொருள்.

ஐந்தாவது: இளங் காதலர்கள் ஒருவரை யொருவர் நேசிப்பதன் காரணம் உடலுணர்ச்சியே. மக்களின் முயற்சிகளுக்கு இதுவே உன்னத நோக்கமென்று இலக்கியத்திலும் கவிதையிலும் சொல்லப்படுகிறது; இதர கலைகளும் பாராட்டுகின்றன. இளவயதுடைய ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்க்கையிலே சிறந்த பருவத்தை வீணில் கழிக்கிறார்கள்; கல்யாணத்திற்காகவோ களவுக்காகவோ, இளைஞன், பெண்களை மறைந்து பார்க்கிறான், பின் தொடருகிறான், தேடிப் பிடிக்கிறான்; மனங்கவரும் மங்கை கிடைக்கும் வரை அலைகிறான். மங்கையும் மனங் கவருவதற்காகக் கண்ணடிக்கிறாள், வலையை வீசிப் பிடிக்கிறாள்.

பயனற்ற இந்தத் தீய வழியிற் செல்லும் முயற்சியிலே அனேக மக்களுடைய உயர்ந்த ஆற்றல்கள் பயனற்றுப் போகின்றன. அறிவற்ற ஆடம்பரம் தோன்றுவது இவ்வழியாலே. இதன் விளைவாகவே பெரும்பான்மை

யோர் சோம்பி யிருக்கிறார்கள். பெண்கள் நாணமிழந்ததும் இதனாலே. பெண்கள் தாசிகளைப்போல் உடை தரிப்பதும் இதனாலே. காமத்தை எழுப்புமாறு உறுப்புக்களை தெரியக் காட்டி ஆடை யணிவதும் இதனாலேதான்.

இது தவறு என்பது எனது எண்ணம்.

காதலர் தாங்கள் விரும்புகிறவர்களை மணத்தாலோ, மறைவாகவோ அடைய நாடும் வழிகளை எவ்வளவுதான் உயர்வாகச் சொன்னாலும், அந்த நோக்கம் உயர்ந்ததன்று. பல மனிதர்களுக்கு, இனிய உணவும் அதிகமான உணவும் தேடுவதே நல்ல காரியமாகத் தோன்றுகிறது. இவை இரண்டும் அரிய செய்கைகளல்ல.

இவற்றால் நாம் தெரிந்து கொள்வதென்ன? ஆண் பெண்ணாசையை உயர்ந்த நோக்கமாகக் கொள்ளலாகாது. இறைவன் பணியே உயர்ந்த நோக்கம். அதைச் சொல்லாவிட்டாலும், சமூகப் பணியும் தேசப் பணியும் இருக்கின்றன. விஞ்ஞானத்திலும் கலையிலும் ஈடுபட்டு உழைக்கலாம். காதலரிருவர் மணஞ் செய்துகொண்டாலும், அதில்லாமல் வேறுவகையில் கூடினாலும், மேற்கண்ட நோக்கங்கள் எப்படிக் கைகூடும்? இலக்கியம் எவ்வாறு புகழ்ந்தபோதிலும், காதலர் நேசமும் கூட்டமும் உன்னத நோக்கங்களுக்குத் துணையாகா; மனிதனுக்குத் தகுந்த எந்த நோக்கத்தை யடையவும் தடையாகும்.

இதுவே ஐந்தாவது பொருள்.

இவற்றையே நான் சொல்ல நினைத்தேன்; என் கதையில் சொல்லி விட்டதாக நினைத்தேன். மேற்சொன்ன விஷயங்களை ஒப்புக்கொள்ளாம லிருக்க முடியாது. ஆனால், நான் குறிப்பிட்ட கெடுதல்களை நீக்க வழியென்ன வென்று பேசி முடிவு செய்ய வேண்டும். நான் கூறிய கருத்துக்கள் மனிதரின் முன்னேற்றத்தை யொட்டியே எழுந்தன. அவற்றைக் கடைப்பிடிப்பவன், தீயொழுக்கத்தை விட்டு நல்லொழுக்கத்தை மேற்கொள்ளுகிறான். சமூக ஒழுக்க வுணர்ச்சியும் அவ்வாறே வளருகிறது. நம் மனச் சாட்சியும் ஒழுங்கீனத்தைக் கண்டித்துக் கற்புடைமையைப் போற்றுகிறது. நம் கருத்துக்கள் நமது முன்னேற்றத்துக்குத் துணை செய்யவேண்டும்.

இரண்டாவதாக : கிறிஸ்துவின் அடியார் திருவாக்குக்களை நாம் அனுசரிக்கிறோம்; இல்லையானாலும், எதை நாம் நல்லொழுக்க மென்று எண்ணுகிறோமோ அதன் சாராம்சம் அந்தத் திருவாக்குக்களில் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அந்த உபதேசங்களுக்கும் நம் முடிபுகள் ஒத்திருக்கின்றன.

என் முடிவுகளை எல்லோரும் ஏற்பார்களென்று நான் நினைத்தது தவறு போலும்!

மணத்திற்கு முன்னரோ பின்னரோ தீயொழுக்கம் ஒழுகலாகாது; குழந்தை பிறப்பதைத் தடுக்கலாகாது; குழந்தைகளை வெறும் விளையாட்டுப் பொம்மைகளாக்கலாகாது; காமலீலையையே மற்ற வேலைகளைவிடப் பெரிதென்று கருதலாகாது. இந்தக் கொள்கைகளை நேர்முகமாக ஆட்சேபிப்பவர் ஒருவருமில்லை. சுருங்கச் சொன்னால், ஒழுக்கமின்மையை விட ஒழுக்கம் உயர்ந்ததென யாவரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால், அவர்கள் சொல்வார்கள்; "கல்யாணத்தைவிடப் பிரமசரியம் உயர்ந்த நெறி என்றால், மக்கள் உயர்ந்த நெறியை அனுசரிக்க வேண்டியதே முறை. அப்படி அனுசரித்தால், சமூகம் அழிந்துபோகும். தங்கள் வம்சம் அற்றுப் போவதே ஒரு சமூகத்தின் நோக்கமா யிருக்க முடியுமா?" ஆனால், ஒன்று கவனிக்க வேண்டும். மனித சமூகம் அழிந்து போவதென்பது புதிய எண்ணமல்ல. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இதைத் தங்கள் சமயக் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள். சூரியன் சூடு குறைந்து வருவதைப் பார்த்து விஞ்ஞான நூல் வல்லார் உலகம் முடிவெய்து மென்பதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆகையால், ஜனங்கள் சொல்லும் ஆட்சேபனை சரியன்று; இந்தத் தவறான எண்ணம் பல பேரிடத்திலுள்ளது; பழைய காலந்தொட்டே இது இருந்து வருகிறது. "மக்கள் யாவரும் பிரமசரிய விரதத்தை உன்னத நோக்கமாகக்கொண்டு அனுசரித்தால், மக்கள் சமூகம் அழிந்துவிடும். ஆகையால், இந்த நோக்கம் தவறானது" என்று சிலர் சொல்வார்கள். ஆனால், இம்மாதிரி பேசுகிறவர்கள், தெரிந்தோ தெரியாமலோ, இரண்டு விஷயங்களின் வித்தியாசத்தை உணர்வதில்லை. ஒன்று, சட்டம் அல்லது நியதி; இரண்டு, உன்னத லட்சியம்.

பிரமசரியம் ஒரு சட்டமன்று. அது ஓர் உன்னத லட்சியம்; அல்லது உன்னத லட்சியத்தின் ஒரு நிலை. உன்னத லட்சியமென்பது எண்ணத்தாலடையக்கூடியது. ஆனல், வாழ்க்கையில் ஓரளவு அடைய முடியாதது; அவ்வளவு உயர்ந்தது. லட்சியத்தை எய்துவதற்கான வழி, அளவிட முடியாதது. லட்சியத்தை அடைந்துவிட்டாலும், அல்லது மனித சமுதாயம் அடைந்துவிடக்கூடுமென்று எண்ண முடிந்தாலும், அது லட்சியமாகாது.

கிறிஸ்துவின் லட்சியமும் இம்மாதிரியே. அவர் வானுலகத்தையே பூமியில் அமைக்க நினைத்தார். அந்த லட்சியத்தை அதற்கு முன்னர் அடியார்களும் சொல்லியிருக்கிறார்கள். கடவுளைப்பற்றி எல்லோருக்கும் உணர்த்துகிற காலம்; போர் வாளைக்கொண்டு பூமியை உழுங்காலம்; ஈட்டியைக் களை பிடுங்க உபயோகிக்கும் காலம்; சிங்கம் ஆட்டோடு சேர்ந்து கிடக்கும் காலம்; யாவரும் அன்பால் பிணைக்கப்படும் காலம்—இக்காலத்தையே அடியார்கள் லட்சியமாகக் கொண்டார்கள். இந்த லட்சியத்தை அணுகுவதே மானிட வாழ்க்கையின் பயன். இந்த நிறைவை எய்துவதே கிறிஸ்துவின் லட்சியம். அதில், பிரமசரியம் ஒரு நிலை. ஆகையால், இவற்றை நோக்கி யணுகுதல் மனித வாழ்க்கைக்குத் தடையன்று. இந்த லட்சியம் இல்லையானல், வாழ்க்கையில் முன்னேற்றமில்லை; உண்மையான வாழ்க்கைக்கு வழியுமில்லை.

இந்தக் காலத்திலே, சோற்றுக்காக ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொள்கிறோம். அதற்குப் பதிலாக, நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் அன்பு காட்டினல், சமுதாயம் அழிந்து போய்விடுமென்று கருதுவாருமுண்டு. அதேபோல, யாவரும் பிரமசரிய விரதத்தை முழு மனதுடன் அனுசரித்தால், மக்கள் சமூகமே மறைந்துவிடுமென்று வாதிப்பவருமுண்டு. நல்லொழுக்கத்தில் இரண்டு நெறிகளுண்டு; அவை யிரண்டுக்கும் வேறுபாடு தெரியாதவர்களே இந்த வாதம் செய்வார்கள்.

வழிப்போக்கனுக்கு அவன் வழியை இரண்டு விதமாகக் குறிப்பிடலாம்; உண்மை நாடுவோனுக்கும் ஒழுக்க நெறியை இருவிதமாகச் சொல்லலாம். வழியில்

காணும் பொருள்களை வழிப்போக்கனுக்குச் சொல்லி, அந்தப் பொருள்களைக்கொண்டு அவன் வழியைத் தெரிந்து போகச் செய்யலாம். அது ஒரு வழி. இன்னொரு வழியுமுண்டு. வழிப்போக்கன் திசை காட்டுங் கருவி வைத்திருக்கிறான். இன்ன திசையில் போகவேண்டுமென்று மட்டும் சொன்னால் போதும். திசை காட்டுங் கருவி அதற்கு ஒத்தாசையாக இருக்கும். அவன் திசை தப்பும் போதெல்லாம், தப்புவதைக் கருவி காட்டிவிடும்.

முதல் வழி, வெளி நடத்தையைக் காட்டி வகுத்த வழி. விளங்கும்படியாகச் சில செய்கைகள் சொல்லப்பட்டன. சில செய்யத்தகுவன, சில விலக்கத்தகுவன.

'ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டாடு' 'சுன்னத் செய்துகொள்' 'திருடாதே' 'குடியாதே' 'உயிர்வதை செய்யாதே' 'ஏழைக்குக் கொடு' 'தினமும் கால் கழுவிக் கடவுளை வணங்கு' 'ஞானஸ்நானம் செய்' 'சற்பிரசாதம் பெறு' இவையே சமய உபதேசத்தின் வெளிப்படையான சட்டங்கள்; இந்து சமயம், புத்த சமயம், மகமதியம், யூதம், கிறிஸ்து மதமென்று தவறாகக் கூறப்படும் கோயில் - கிறிஸ்துவம் இவை யாவற்றிலும் இந்தச் சட்டங்களைக் காணலாம்.

மனிதனால் அடைய முடியாத ஓர் உன்னத நிலையைக் காட்டுவது மற்றொரு வழி. மனிதன் அந்த உன்னத நிலையை அடைய முயல வேண்டும். கொண்ட லட்சியத்தைக் கவனித்தால், வழி தப்புவது தெரியும்; எவ்வளவு தூரம் தப்பிவிட்டோமென்பதும் தெரியும்.

"உன் முழு இருதயத்துடன், ஆன்ம பூர்வமாகக் கடவுளிடம் அன்பு செலுத்து. உன் அருகிலிருப்பவரை உன்னைப் போல் நேசி. உலகத்தின் தந்தையாகிய கடவுள் பூரணமா யிருப்பது போல் நீயும் இரு"- இதுவே கிறிஸ்துவின் உபதேசம்.

சமயக் கோட்பாடுகளை அனுசரிக்க வேண்டுமானால், விதித்தவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்; விலக்கியவற்றைத் தவிர்க்க வேண்டும். வெளிப்படையான உபதேசத்தைப் பின்பற்றி நடத்தல் செய்யக்கூடிய காரியமே.

கிறிஸ்துவின் உபதேசத்தை அனுசரிப்பதற்கு அடையாள மென்ன? அதை அனுசரிக்கும்போது, நாம் லட்சியத்திலிருந்து விலகுவதைத் தெளிவாக உணருகிறோம். அதைத் தொடர்ந்து போவது தெரியவில்லை; அதிலிருந்து விலகுவது மட்டும் தெரிகிறது.

ஒரு கம்பத்தின் மேல் விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கின் வெளிச்சம் சுற்றிலும் தெரிகிறது. வெளிப்படையான சமயக் கொள்கையை அனுசரிப்பவனைப் போலவே, கம்பத்தருகில் நிற்கும் மனிதன் தன் விளக்கு வெளிச்சத்தில் நிற்கிறான். அவனைச் சுற்றிலும் வெளிச்சம். அவன் அதற்கு வெளியே போகவேண்டுமானால், வெளிச்சமில்லை. கிறிஸ்துவின் உபதேசத்தை அனுசரிப்பவன், ஒரு விளக்கை முன்னாலே ஏந்திக் கொண்டு போகிறவனை ஒக்கின்றான். எப்பொழுதும் அவனுக்கு முன்னே வெளிச்சமிருக்கிறது. செல்லச் செல்லப் புதிய இடங்களில் வெளிச்சம் விழுகிறது. வெளிச்சம் அவனை முன் செல்லத் தூண்டுகிறது.

எல்லாச் சட்டங்களையும் நிறைவேற்றி விட்டதாக, யூதன் கடவுளை வந்தனை செய்கிறான். செல்வம் படைத்த இளைஞனும் தன் குழந்தைப் பருவமுதல் எல்லாச் சட்டங்களையும் நிறைவேற்றி விட்டதாக நினைக்கிறான். இன்னும் செய்யவேண்டியவைகளிருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை; இருக்கக்கூடுமென்று எண்ணவும் முடியவில்லை. மேலே செல்ல வழியில்லை. எல்லாச் சட்டங்களும் அனுசரித்தாகி விட்டது. ஏழை வரி கொடுத்தாயிற்று; ஞாயிற்றுக்கிழமை கொண்டாடியாயிற்று; பெற்றோர்களை வணங்கியாயிற்று. விபசாரம் செய்ததில்லை; திருடியதில்லை; கொலை செய்ததில்லை. இன்னும் என்ன பாக்கி? ஆனால், கிறிஸ்துவின் உபதேசத்தை அனுசரித்தவனுக்கு, லட்சியத்தை நெருங்கி ஒரு படி ஏறியதும், அடுத்த படி தெரியும். அதைக் கடக்கவேண்டிய அவசியமும் தெரியும். அந்தப் படியிலிருந்து மேலே ஒன்று தெரிகிறது. இப்படிப் படிகள் போய்க் கொண்டே யிருக்கும்; முடிவில்லை. கிறிஸ்து சட்டத்தை அனுசரிப்பவன், கள் வியாபாரியைப் போல, நடந்த பாதையைப் பார்ப்பதில்லை. இனி நடக்க வேண்டிய பாதையையே நோக்குகிறான். தன் குறைகளை எப்பொழுதும் உணருகிறான்.

இங்கேதான் கிறிஸ்து உபதேசத்திற்கும் பிறமத உப தேசத்திற்கும் வித்தியாசம். நாம் செய்ய வேண்டிய வேலைகளில் வித்தியாசம் இல்லை; போதிக்கும் வழியில் தான் வித்தியாசம். ஏசுநாதர், வாழ்க்கைக்குச் சட்டங் களை விதிக்கவில்லை. அவர் எந்த ஸ்தாபனமும் ஏற்படுத்த வில்லை. கல்யாணத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், இப் பொழுது என்ன நடக்கிறது? கிறிஸ்துவின் உபதேசத்தை மக்கள் தெரிந்துகொள்ளவில்லை. வெளிப்படையான உபதேசங்களிலேயே பழகிவிட்டதால், இது தெரியவில்லை. யூதர்கள் தாங்கள்செய்வது சரியெனச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பது போல், மக்களும், உண்மை உபதே சத்தை விட்டு, வெறும் வார்த்தைகளை உபதேசமாகக் கொண்டு சந்தோஷப்படுகிறார்கள். இவ் வெளிச் சட்டத் திற்குக் கோயில் - சம்பிரதாயம் என்று பெயர். இந்தக் கொள்கைகள் உண்மையான கிறிஸ்து போதனையைப் புறக்கணித்துவிட்டு, அந்த இடத்தில் தாம் உட்கார்ந்து கொண்டன.

அரசியல், சட்டம், சண்டை, கோயில், கோயில் வழி பாடு—யாவற்றிலும் இங்ஙனமே நடந்திருக்கிறது. கல் யாண விஷயத்திலும் இவ்வாறே.

கல்யாணமென்ற ஏற்பாட்டை கிறிஸ்து ஸ்தாபிக்க வில்லை; ஏதாவது விதிகள் அதைப்பற்றிச் சொல்லி யிருக்கி றாரா என்று பார்த்தால், அவர் கல்யாணத்தை வெறுத்த தாகவே தெரிகிறது. 'உன் மனைவியை விட்டுவிட்டு, என் பின்னாலே வா' என்றார். அப்படிச் சொல்லி யிருந்தும், கிறிஸ்துவ மதமென்று சொல்லப்படுகிற கோயில் - சம்பிர தாயமானது கல்யாணத்தையும் அதன் சடங்குகளையும் ஏற் படுத்திற்று. கிறிஸ்துவர்களுக்குள், சில வரம்புக்குட்பட்ட ஆண் பெண் தொடர்பு மிகச் சரியான காரியமென்று கிறிஸ்துவக் கோயில் - சம்பிரதாயம் சொல்லுகிறது.

உண்மையான கிறிஸ்துவ மதத்தில் கல்யாணத்திற்குக் கொஞ்சமும் இடமில்லை. அதன் விளைவென்ன? நம் சமுதா யத்திலுள்ள மக்கள் ஒரு கரையை விட்டனர். ஆனால், மறு கரையை அடையவில்லை. கிறிஸ்துவின் உபதேசப்படி, கல்யாண மென்னும் வழக்கத்திற்கு இடமில்லை; ஆகை யால், கோயிலார் மண மென்ன என்று சொல்வதை

நம்புவதில்லை. ஆயினும், கிறிஸ்துவின் லட்சியத்தைக் காணுவதில்லை. கோயில் - சம்பிரதாயம் அதை மறைக்கிறது. கிறிஸ்துவின் லட்சியம் தூய பிரமசரிய மாகையால், மணத்தைப்பற்றி அவர் ஒரு போதனையும் செய்ய வில்லை. இது முதலில் அதிசயமாகத் தோன்றலாம். யூதமும், மகமதியமும், லாமிஸ மதமும், கிறிஸ்துவக் கொள்கையைவிடத் தாழ்ந்த கொள்கைகளை உடைய பிற மதங்களும் மணத்தைப் பற்றிப் பலவெளி விதிகளை வகுத்திருக்கின்றன. அந்த மதத்தவர்களிடம், கிறிஸ்துவ சமுதாய மென்று சொல்லப்படும் கூட்டத்தாரிடம் இருப்பதைவிட அதிகமான இல்லற ஒழுக்கமும் இன்பமும் இருக்கின்றன. காம இன்பத்துக்கு விதிகள், ஒருவன் பல பெண்களை மணப்பதைப் பற்றிய விதிகள், ஒரு பெண் பல ஆடவரை மணப்பதைப்பற்றிய விதிகள் முதலிய யாவும் ஒரு வரம்புக்குள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், நம்மிடம் முற்றிலும் ஒழுங்கீனத்தையே காண்கிறோம். களவொழுக்கம், ஒருத்தி பலரை மணப்பது, ஒருவன் பல பெண்களை மணப்பது முதலிய யாவும் ஒரு வரம்பின்றி யிருக்கக் காண்கிறோம்; ஆனால், ஒருத்திக்கு ஒருவன் என்ற விதியை மட்டும் ஏற்படுத்திக்கொண்டு, உண்மையில் நடக்கும் ஒழுங்கீனத்தை மறைக்கிறோம்.

ஏதோ காசுக்காகப் பாதிரிமார் கல்யாண காலத்தில் சில சடங்குகளைச் செய்கிறார்கள். அதனால், நாம் கபடமாக, ஒருத்திக்கு ஒருவன் என்ற கொள்கையைக் கொண்ட சமூகமென்று நம் சமூகத்தைக் கருதுகிறோம்.

கிறிஸ்துவர் கல்யாணச் சடங்கு, கிறிஸ்துவர் வழிபாடு, கிறிஸ்துவர் ஆசிரியர், கிறிஸ்துகோயில் குருமார், கிறிஸ்துவர் சொத்து, கிறிஸ்துவர் படை, கிறிஸ்துவர் நியாய சபை, கிறிஸ்துவர் அரசு என்பன என்றும் இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. முதல் நூற்றாண்டுகளில் வசித்த கிறிஸ்துவர்கள் இதைத் தெரிந்துகொண்டிருந்தார்கள்.

கடவுளையும் அருகில் வாழ்பவர்களையும் நேசிப்பதே கிறிஸ்துவின் லட்சியம். அதாவது, கடவுட் பணியினாலும் அருகாமையி லுள்ளோரின் சேவையினாலும் தன்னலத்தைப் போக்கவேண்டும். காதலும் கல்யாணமும் தனக்கே

உரியவை. ஆகையால், அவை கடவுள் சேவைக்கும் மக்கள் சேவைக்கும் இடையூருனவை. அதனுல், கிறிஸ்துவ சமயப்படி, காதலும் கல்யாணமும் வேண்டாதவை; பாவமானவை.

மணஞ் செய்து கொள்வது, கடவுள் சேவைக்கும் மக்கள் சேவைக்கும் ஒத்தாசையன்று. மக்கட் சமூகம் அழிந்துவிடாமலிருக்க மணம் செய்து கொள்ளுகிருர்கள். அதுதான் நோக்கமானுல், எங்கும் ஊணவின்றி மாள்கிற பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை யெடுத்து உணவு கொடுத்துக் காப்பாற்றலாம். ஆன்மாவுக்கு உணவின்றி, உடம்புக்கும் உணவின்றிச் சாகும் குழந்தைகளைக் காப்பாற்றுவது, கல்யாணம் என்னும் காமநெறியை விட எளிதானதல்லவா?

பிறந்த குழந்தைகள் யாவற்றுக்கும் உணவுக்குக் கஷ்டமில்லை யென்று நிச்சயமாகத் தெரிந்த பின்புதான், ஒரு கிறிஸ்துவன் கல்யாணம் செய்து கொள்ளலாம். அப்பொழுதுமட்டுமே, அவன் செய்யும் காரியம் தவருக மாட்டாது.

நம் வாழ்க்கையைப் பாதிப்பதே யன்றி ஒழுக்கத்திற்கும் அடிப்படையாக இருக்கிற கிறிஸ்து உபதேசத்தைத் தள்ளிவிட முடியும்; ஆனுல், அதை ஒப்புக்கொள்வோமானுல், அந்த உபதேசம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பூரண பிரம்மசரியத்தையே லட்சியமாகக் காட்டுகிறது.

கிறிஸ்து அடியார்கள் சொன்ன நூலில் இது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; தவருன பொருள் கொள்ள வழியில்லாமல் நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று, கொண்ட மனைவியுடன் வாழவேண்டும்; வேருருத்தியை மணக்க வேண்டி, கொண்ட மனைவியை விலக்கல் கூடாது. இரண்டு, ஒரு மனிதன், இல்லறத்தானுயினும், மணமாகாதவனுயினும், ஒரு பெண்ணைக் காம உணர்ச்சியோடு பார்த்தல் தவறு. மூன்று, மணமாகாதவர்கள் மணம் செய்துகொள்ளாம லிருத்தல் நன்று. பிரம்மசரியமே சிறந்தது.

பலருக்கு இவ்வெண்ணங்கள் நூதனமாகத் தோன்றும்; ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் காணப்பட

லாம். உண்மையில் அப்படியல்ல. அவை நம் வாழ்க்கைக்கு மாறுபட்டிருப்பது உண்மையே. ஆனல், 'எது சரி? இவ்வெண்ணங்களா, அன்றி, என்னை யுள்ளிட்ட கோடிக்கணக்கான மக்கள் வாழும் வாழ்வா?' என்ற கேள்வி இயல்பாக உண்டாகிறது.

மேலே சொன்ன முடிவுக்கு நான் வந்தபோது, இக் கேள்விகள் பலமாக என் மனதைத் தாக்கின. என் எண்ணங்கள் விரிந்து மேலேகண்ட முடிவுக்கு வருமென்று நான் முதலில் நினைக்க முடியவில்லை. இந்த முடிவுகள் எனக்கே அதிசயத்தை விளைவித்தன. ஆனல் அவற்றை நம்பாமலிருக்க முடியவில்லை. அவை நாம் நடத்தும் வாழ்க்கைக்கு மாறுபட்டிருந்தபோதிலும், நான் முன்னே நினைத்ததற்கும் சொன்னதற்கும் மாறுபட்டபோதிலும், அவற்றை நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

"ஆனல், இதுவரை, பொதுவாகப் பேசினேம். எல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனல், அவை ஏசுவின் உபதேசங்கள். ஆகையால், அவரது மதத்தை நம்புகிறவர்களையே அவை கட்டுப்படுத்தும். பலரையும் பாதித்து, சொல்லமுடியாத இன்னல்கள் விளைவிக்கும் விஷயங்களுக்கல்லவா தக்க வழிகள் வேண்டும்? அவற்றை யல்லவா மனிதனுக்குக் காட்ட வேண்டும்? தூரத்தில் அடைய முடியாத லட்சியத்தைச் சுட்டிக்காட்டினல் போதுமா? ஆர்வமுள்ள இளைஞனை இந்த லட்சியம் முதலில் கவரலாம். ஆனல் அந்தக் கவர்ச்சி தொடர்ந்து நிலைபெருது. அவன் நியதியற்றவனுகையால், அந்தக் கவர்ச்சி நீங்கினதும் ஒழுங்கீனனுகிவிடுவான்.

"கிறிஸ்துவின் லட்சியம் அடையமுடியாதது; ஆகையால், அது தினசரி வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்க முடியாது. அந்த லட்சியத்தைப் பற்றிப் பேசலாம்; கனவு காணலாம். ஆனல், வாழ்க்கைக்கு அதனல் பயனில்லை. ஆகையால் அதை விட்டுவிட வேண்டும். நமக்கு லட்சியம் தேவையில்லை. சட்டந்தான் வேண்டும், வழி வேண்டும். இவை நம் வலிமைக்கும் சமுதாய ஒழுக்கத்திற்கும் தகுந்தனவா யிருக்க வேண்டும். மரியாதையாக, கோயிலிலே மணம்; ஒருவன் பல பெண்களுடன் கூடியிருப்பினும், அவனுக்கும் ஒரு பெண்ணுடன் கல்யாணம்: விலகிக்கொள்வதற்கான வழிகளோடு கூடிய கல்யாணம்;

சட்டப்படி கல்யாணம்; ஜப்பான் முறைப்படி, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் மணப்பது — இவையே நமக்கு வேண்டும்." இம்மாதிரி மக்கள் வாதம் செய்வார்கள். இவ்வளவு தூரம் சொல்லுகிறவர்கள் தாசி விடுதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்! வெட்ட வெளியில் வீதியில் நடக்கும் சேர்க்கைகளைவிட, அவை கெடுதியானவையா?

இங்கேதான் சங்கடம் ஏற்படுகிறது: நம் பலவீனத்திற்குத் தகுந்தாற்போல் லட்சியத்தை ஒரு தரம் குறைத்துவிட்டோமானால், எந்த நிலைக்கு வந்து நிற்குமென்று சொல்ல முடியாது.

உண்மையாய்ப் பார்த்தால், இந்த வாதம் தவறு. எல்லையற்ற தூய்மையைப் பெறுவதாகிய லட்சியம் வாழ்க்கைக்கு வழிகாட்டியல்ல என்று சொல்வது தவறு. நாம் அடைய முடியாத தாகையால் அதைத் தள்ளிவிட வேண்டுமென்பதும் பிசகு. நம் பலவீனத்திற்கேற்ப அந்த லட்சியத்தைத் தாழ்த்தவேண்டுமென்பதும் சரியன்று.

இவ்வாறு வாதிப்பது ஒரு கப்பலோட்டி இவ்வாறு சொல்லிக்கொள்வதை ஒக்கும்: "திசைக்கருவி காட்டுகிற திசையை நான் பின்பற்ற முடியவில்லை. ஆகையால், என் கருவியைக் கடலுக்குள் எறிந்து விடுகிறேன். அதைப் பார்த்து வீணில் தொந்தரவு படுவதை நிறுத்திவிட வேண்டும். (லட்சியத்தை விட்டுவிட வேண்டும்.) அல்லது என் கப்பல் போய்க்கொண்டிருக்கும் திசையையே காட்டும்படியாக, திசைக்கருவியின் முனையைத் திருப்பி வைத்துவிட வேண்டும்; (என் பலவீனத்திற்குத் தகுந்தபடி லட்சியத்தைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும்.)"

ஏசுநாதர் கற்பித்த லட்சியம் விளையாட்டல்ல; வெறும் ஆவேசப் பேச்சுக்குரிய விஷயமல்ல; ஒழுக்க வாழ்க்கைக்கு, கைவிடக் கூடாத, ஆனால் கிடைக்கக்கூடிய வழிகாட்டி. கப்பலோட்டுவதற்குத் திசைக்கருவி கிடைக்கக்கூடியது; கைவிடக்கூடாதது. ஒன்றை எப்படிச் சந்தேகமின்றி நம்புகிறோமோ அம்மாதிரியே மற்றொன்றையும் நம்பவேண்டும்.

மனிதன் எந்த நிலையிலிருப்பினும் சரி, ஏசு கற்பித்த லட்சியம், மனிதன் செய்யவேண்டுவதெது, விலக்கவேண்டுவதெது என்பதைக் காட்டப் போதுமானது. ஆனால், அவரது உபதேசத்தில் பூரண நம்பிக்கை வேண்டும். அதை மட்டுந்தான் நம்பவேண்டும்; வேறொன்றையும் நம்பலாகாது. கப்பலோட்டி, திசைக்கருவியைக் கவனித்தே கப்பலை நடத்துகிறான். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்க்கக்கூடாது. கவனம் முழுவதையும் அந்தக் கருவியிலேயே செலுத்த வேண்டும்.

திசைக்கருவியைப் பார்த்துக் கப்பலை நடத்துவது போல, கிறிஸ்துவின் உபதேசத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்தத் தெரியவேண்டும். இதற்கு முதன்மையாக, தன் நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டும். லட்சியத்தை எய்தும் வழியிலிருந்து எவ்வளவு தூரம் விலகிவிட்டோமென்பதைப் பயமின்றிக் கவனித்தறிய வேண்டும். எவ்வளவு தூரத்திலிருந்த போதிலும், லட்சியத்தை யடையும் வழிக்கு மீண்டு வரமுடியும். எந்த நிலையிலிருந்தாலும், தன்னால் வரமுடியாதென்று சொல்ல வேண்டியதில்லை.

பொதுவாக, கிறிஸ்துவின் லட்சியத்தை யடைய ஆர்வமுள்ளவனுக்கும் மேலே சொன்னவை பொருந்தும்; சிறப்பாக, பிரம்மசரியமடைய விரும்புகிறவனுக்கும் பொருந்தும். மிகவும் வேறுபட்ட நிலைகளிலுள்ள மனிதராயினும் சரி, வரையறையின்றி மணஞ் செய்து கொண்டவராயினும் சரி, யாவருக்கும் கிறிஸ்துவின் உபதேசமும் அதிலுள்ள லட்சியமும் நன்னெறியைச் சுட்டிக்காட்டும். செய்வன எவை யென்றும், தவிர்ப்பன எவை யென்றும் ஒவ்வொரு நிலையிலும் விளக்கிக் காட்டும்.

'தூய்மையான சிறுவனோ சிறுமியோ என்ன செய்ய வேண்டும்?'

தங்கள் தூய்மையைக் காப்பாற்றவேண்டும். தவறான வலைகளில் சிக்கிக்கொள்ளக் கூடாது. இறைவனுக்கும் மனிதனுக்கும் செய்யும் தொண்டில், தன் முழுச் சக்தியையும் அர்ப்பணம் பண்ணும்பொருட்டு, எண்ணத்திலும் ஆசையிலும் அதிகத் தூய்மை தேடவேண்டும்.

'சிறுவனோ சிறுமியோ காதலால் தூண்டப் படுகிறார்கள். ஏதோ ஆசையில் அழுந்துகிறார் கள். அல்லது குறிப்பிட்ட ஒருவர்மீது ஆசை. இதனால் இறைவனுக்கும் மனிதனுக்கும் செய் யும் பணியில் சக்தி கொஞ்சம் குறைந்துவிடு கிறது. அவர்களென்ன செய்யவேண்டும்?'

மேலே சொன்னவற்றைத்தான் செய்யவேண்டும். படுகுழியில் விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தப்புச் செய்வதால் தப்பில் ஆசை அதிகரிக்குமேயன்றிக் குறையாது. மேலும் மேலும் அதிகத் தூய்மையடைய முயலவேண்டும். அதனாலேயே இறைவனுக்கும் மனித னுக்கும் அதிகத் தொண்டு புரியலாம்.

'காமச் சங்கடத்திலிருந்து தப்புவதற்குப் பலமற்றுத் தவறிழைத்தவன் என்ன செய்ய வேண்டும்?'

தான் அடைந்த வீழ்ச்சியை நியாயமான சுக அனு பவமென்று கருதலாகாது. மணச் சடங்குகள் செய்வ தால் அந்தச் சுகம் நியாயமானதென்று இப்பொழுது தவ றாகக் கருதுகிறோம். ஏதோ சில சந்தர்ப்பங்களில் நேரும் சுகந்தானே என்று வேறு சிலருடனுங் கூடலாமென்று நினைத்துவிடக் கூடாது. ஓர் ஆபத்து வந்துவிட்டதாகவும் நினைக்கவேண்டியதில்லை. சடங்கின்றியும் தாழ்ந்தோ ரோடும் கூடியது அதிகத் தவறென்றும் எண்ணவேண்டுவ தில்லை. முதலில் செய்த தவற்றோடு நிற்கவேண்டும். அந்தத் தவற்றையே விலக்கமுடியாத மணத்திற்கு வழியாகக் கொள்ளவேண்டும்.

இந்த மணமும் அதனாலேற்படும் பயனும், அதாவது நன்மக்கட் பேறும், தம்பதிகள் இறைவனுக்கும் மனித னுக்கும் செய்யும் பணிக்கு ஒரு புதிய குறுகிய வரம்பு கட்டிவிடுகிறது. மணத்திற்கு முன்னர் அவர்கள் இறை வனுக்கும் கடவுளுக்கும் நேராகவும் பற்பல வழிகளிலும் பணி செய்யலாம். ஆனால், செய்யக்கூடிய விரிந்த தொண்டைக் கல்யாணம் குறைத்துவிடுகிறது. அவர்கள் குழந்தைகளை வளர்க்கவேண்டும். அவர்களுக்குக் கல்வி புகட்டவேண்டும். அவர்கள் மூலமாக இறைவன் பணி யும் மக்கட் பணியும் செய்யலாம்.

'மணம் முடிந்த காதலர்களாகி, தங்கள் நிலைமையை அனுசரித்து மக்களைப் பெற்று வளர்த்து, படிப்பித்து, ஒரு வரம்புக்குட்பட்ட கடவுட் சேவை, மக்கட் சேவையை அவர்கள் மூலம் செய்வோர் என்ன செய்யவேண்டும்?'

இந்தக் கேள்விக்கும் மேலே சொன்னதே பதில். இருவரும் காமத்திலிருந்து தப்ப முயலவேண்டும். தூய்மையடையவேண்டும். பாவத்திலிருந்து விலகவேண்டும். கடவுட் சேவையையும் மக்கட் சேவையையும், தனியாகவோ, பொதுவாகவோ செய்வதைத் தடுக்கும் உடலாசையை விட்டு அதற்குப் பதிலாகத் தூய சகோதர வாஞ்சையைக் கொள்ளவேண்டும்.

ஏசுவின் லட்சியம் உயர்ந்ததாகையாலும், குறைவற்றதாகையாலும், அடைய முடியாததாகையாலும், அதைக்கொண்டு நம் வாழ்க்கையை நடத்த முடியாதென்பது உண்மையன்று. அதனுல் நாம் கடைப்பிடிக்கவேண்டிய நெறியைத் தெரிந்துகொள்ளவில்லையானுல், நாம் நமக்கே பொய்யராகின்றோம்; நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளுகிறோம். கிறிஸ்துவின் லட்சியத்தை விட்டுவிட்டு, கைவரக்கூடிய ஒரு நியதியை மேற்கொண்டாலும், அல்லது கிறிஸ்துவின் லட்சியத்தைவிடத் தாழ்ந்த லட்சியத்தைக் கொண்டாலும் நம் வாழ்க்கை பாழடையும். நாம் தாழ்ந்த லட்சியத்தையோ அல்லது கைவரக்கூடிய லட்சியத்தையோ கொண்டால், கிறிஸ்துவின் லட்சியம் உயர்ந்ததெனச் சொன்னதாகாது. அவரது லட்சியத்தில் நம்பிக்கையில்லை யென்று சொன்னதாகும்; அதன்படி நடக்க விருப்பமில்லை என்றாகும்.

ஒருதரம் தவறினுல் என்றும் தவறி நடக்கவேண்டும் என்பதில்லை. தாழ்ந்தவர்களோடு கூடுதல் பாவமில்லை என்று கருதுதல் தவறு. அது வெறும் விளையாட்டல்ல. அந்தத் தவற்றை மணம் செய்துகொள்வதன்மூலம் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். அந்தக் காரியத்தைப் பாவமென்று உணர்ந்தால், அதை ஏற்று, கல்யாணத்தினுலே பிராயச்சித்தம் செய்து அந்தப் பாவத்தைப் போக்கலாம். மக்களைப் பயிற்றலும் பிராயச்சித்தமே. முதல் தவறு

பிற்பட்ட தவறுகளுக்கும் கெட்ட வாழ்க்கைக்கும் காரணமாகக் கூடாது.

ஒரு குடியானவன் ஒரு வயலில் நன்ருய் விதைக்கவில்லையானுல், அவன் அந்த வயலில் விதைத்ததாகவே கருதுவதில்லை. மேலும், இரண்டாவது மூன்ருவது வயலில் விதைப்பான், நன்ருய் விதைத்ததைத்தான் கணக்கெடுத்துக்கொள்வான். இப்படிச் செய்கிறவன் பல நிலங்களைப் பாழாக்குவான். விதையும் வீணுகும். விதைக்கவும் கற்றுக்கொள்ளமாட்டான். இவன் முதல் குற்றத்தைப் பல குற்றத்திற்குக் காரணமாகக் கொள்ளுகிறவனை ஒக்கிருன்.

பிரம்மசரியத்தை லட்சியமாக ஒப்புக்கொள். ஒவ்வொரு தவற்றையும்—யார் செய்தாலும், யாரோடு செய்தாலும், விலக்கமுடியாத, ஆயுள்வரை நீடிக்கக்கூடிய மணமென்றே நினை. ஏசு காட்டிய வழி போதுமென்று தோன்றும். மேலும், அதுதான் காட்டக்கூடிய வழி.

'மனிதன் பலமற்றவன். அவனுக்குக் கொடுக்கும் வேலை அந்தப் பலத்திற்குத் தகுந்ததாயிருக்கவேண்டும்' என்று மக்கள் சொல்வார்கள். ஆனுல், அது 'என் கையில் பலமில்லை. நேர்க் கோடு வரைய முடியாது. விஷயத்தை முடிக்க, ஒரு கோணல் கோட்டையோ, விட்டு விட்டு வரைந்த கோட்டையோ வழி காட்டியாகக் கொள்வேன்' என்று சொல்வதை ஒக்கும். உண்மையைக் கவனித்தால், என் கை எவ்வளவுக் கெவ்வளவு பலவீனமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு எனது வழிகாட்டி உயர்ந்ததாயிருக்க வேண்டும்.

லட்சியத்தைப்பற்றிக் கிறிஸ்துவின் உபதேசத்தை ஒப்புக்கொண்டபின், அதைத் தெரியாதவர்போல் நடத்தலாகாது. அதற்குப் பதிலாக மேற்சொன்ன சட்டங்களைக் கொண்டுவரக்கூடாது. நாமடைந்த முன்னேற்ற நிலைமையில் கிறிஸ்து உபதேசம் செய்த லட்சியம் பொருத்தமானதாகையால், அதைச் சொன்னேம். மக்கள், சமயத்தின் வெளிச் சம்பிரதாயத்தை ஏற்கும் நிலைமையிலில்லை; அதற்கு மேலே சென்றுவிட்டார்கள். மக்களுக்கு வெளிச் சம்பிரதாயத்தில் நம்பிக்கையுமில்லை.

மனித சமுதாயத்திற்கே வழி காட்டக்கூடிய உபதேசம் கிறிஸ்து லட்சியத்தைப்பற்றி உபதேசித்த உபதேசமே. கிறிஸ்துவின் லட்சியத்துக்குப் பதிலாக வெளிச் சம்பிரதாயத்தை வைக்கக்கூடாது ; வைக்கவும் முடியாது. ஆனால், நாம் அந்த லட்சியத்தை அழுத்தமாயும் மிக்க தூய்மையோடும் நம் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் ; அதில் நம்பிக்கை வேண்டும்.

கரையோரத்திலேதான் மாலுமிக்கு ஒருவன் சொல்லலாம் : 'மலையோரமாய்ப் போ. குமரிமுனையோரமாய்ப் போ. மணிக்கூண்டோரமாய்ப் போ' என்று. இப்போது மாலுமி கரையைவிட்டு வெகுதூரம் போய்விட்டான். அவனுக்கு வழிகாட்டி, அடையமுடியாத நட்சத்திரங்களே ; திசைக்கருவியே இனி வழிகாட்டும்.

இந்த வழியும் நமக்குண்டு அந்த வழியும் உண்டு.

[26—9—1890]

செய்யாமை

பாரிஸ் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர், நான் பார்க்கப் பிரியப்படுவேனென்று நினைத்து, பிரெஞ்சுப் பத்திரிகைகளில் வந்த இரண்டு கட்டுரைகளை அனுப்பி யிருக்கிறார். அவை யிரண்டும் இக்காலப் போக்கைக் காட்டுகின்றன; ஒன்று, மாணவர் பொதுமன்றத்தில் ஸோலா என்பவர் செய்த சொற்பொழிவு; மற்றொன்று, தூமாஸ் என்பவர் 'கௌலே' என்னும் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை.

இரண்டையும் பார்க்க, எனக்கு மிக்க சந்தோஷம். அவை தக்க சமயத்தில் வந்தன; பேராசிரியர்களால் சொல்லப்பட்டவை; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் இக் காலத்தில் காணப்படும் இரு வித இயக்கங்களையும் அழுத்தமாகச் சொல்லி யிருக்கிறது. ஒன்று, ஜன சமூகம் தனது தினசரி வேலைகளைச் செய்து, தெரிந்த வழியில் நிற்பது; வெளிச்சத்தை நாடி, அறிவும் அன்பும் அமைந்த வழியில் நிற்பது மற்றொன்று.

ஸோலா பேசிய விஷயத்தைக் கீழே தருகிறேன் :

"அன்பர்களே! உங்கள் வருஷக் கொண்டாட்டத்தில் தலைமை வகிக்க என்னைத் தேர்ந்தெடுத்தது, எனக்கு மிகுந்த பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகிறது; இளைஞர் கூட்டுறவினும் இனியது வேறெது? விஷயங்களை ஆர்வத்தோடு கேட்கக் கூடியவர்கள் இளைஞர்களே. ஆகவே, மனதிலெழும் எண்ணங்களைச் சொல்ல வேண்டுமென்ற ஆசை மேலிடுகிறது.

"எனக்கோ, இளமையை இழந்து விட்டோமே யென்று எண்ணுகிற பருவம் வந்து விட்டது. இந் நிலையில், இளைஞருடைய கடமைகளைச் சற்றுக் கவனிக்கலாம். அவர்களே எங்கள் வேலையைச் சீர்தூக்கிப் பார்த்து, அதைத் தொடர்ந்து செய்யவேண்டியவர்கள். 'நாங்கள்

செய்த வேலைகளில் இளைஞர்கள் எதைக் கொள்வார்கள்? எதைத் தள்ளுவார்கள்? நம் வேலைகளை அவர்கள் மேற்கொண்டால், இவை என்னவாகும்? அவர்கள் இவற்றைக் கொண்டால் தானே இவை தொடர்ந்து நடைபெற்றுப் பயனளிக்கும்? இல்லையானால் அழிந்து கெடும்' என்று சில சமயம் நான் எண்ணுவதுண்டு. எதிர்காலம் இளைஞர்களுக்குரியதல்லவா?

"இவ்வெண்ணங் காரணமாக, இளைஞர் இயக்கங்களையும், அவர்களது போக்கைத் தெரிவிக்கும் பத்திரிகைகளையும் கவனித்து வருகிறேன். மாணவரின் மனம் எவ்வழிச் செல்கிறதென்பதை யறிய முயலுகிறேன். நாளையறிவு உங்களிடமே யுளது.

"இந்த எண்ணத்துக்குக் காரணம் 'நான்' என்ற உணர்ச்சி. இதை நான் மறைக்கவில்லை. நான் ஒரு வேலைக்காரன் போன்றவன். வேலைக்காரன், கட்டடத்தைக் கட்டி முடித்து விட்டான். தன் முதுமைப் பருவத்தில் அவ்வீடு சுகந்தருமென்று நினைக்கிறான். சுவர்கள் பெருமழையைத் தாங்குமா என்று பார்க்கிறான். பெருங்காற்றினால் கூரை பறந்துவிடுமோ என்று கவனிக்கிறான். சரியான வேலைப்பாடில்லாததனாலோ, சாமான்கள் கெடுதலாயிருந்ததனாலோ, வீடு செம்மையாயில்லையோ என்று ஐயப்படுகிறான். அவ்வேலைக்காரனின் நிலையில் நான் இருக்கிறேன். எங்களுடைய வேலை முடிவான வேலையென்றோ, அழியாத வேலையென்றோ நான் கூறவில்லை. காலம் எல்லையற்றது. நம்மில் சிறந்தோரின் தொகை குறைவு. ஒருவர், தமது காலத்தில் வாழ்வோருக்கு லட்சியமாக ஒரு மணி நேரம் இருக்க முடிந்தாலும் போதும்! கலை வளரும்; ஒவ்வோர் இயக்கமும் வளரும். எனவே, இளைஞர் பிறந்து, வளர்ந்தபின், எங்களை மறப்பது உலக இயற்கை. என் வேலையைப் பழிக்கும்போது, எனக்கு ஆத்திரம் வருவ

துண்டு. ஆனால், உண்மையில், இனி வரும் இளைஞரிடம் எனக்கு அபிமானம் அதிகம்; வெறுப்புக் குறைவு. ஆர்வம் அதிகம்; கவலை குறைவு. நான் அழியினும் எங்கள் தலைமுறையே அழியினும், குற்றமில்லை. எங்களை ஒதுக்கி விட்டு, இளைஞர் முன்னேற்ற மடைந்தால், எங்களுக்கு மகிழ்ச்சியே.

"விஞ்ஞானக் கலை எதிர்பார்த்த அமைதியையும் சுகத்தையும் கொடுக்க முடியவில்லையென்று பலர் சொல்லக் கேட்டு வருகிறேன். ஆனால், இவ் விஷயத்தை இங்கே ஆராய்ந்து பதில் சொல்வேனென்று எதிர்பார்க்க வேண்டாம். நான் அறியாதவன்: விஞ்ஞானக் கலையின் பிரதிநிதியாகவோ, தத்துவசாஸ்திர ஆசிரியனாகவோ பேச எனக்கு அதிகார மில்லை. நான், கதை எழுதுகிற ஓர் ஆசிரியன். இதை நீங்கள் ஒப்புக்கொள்ளக்கூடும். மக்களையும் விஷயங்களையும் கவனித்திருக்கிறேன். பல ஆண்டுகள் என் வேலையைச் செய்திருக்கிறேன். இந்த முறையிலேதான், என் காலத்தவருடைய சிந்தையில் தோன்றிய கருத்துக்களையும், அவர்கள் செய்ய எண்ணிய வேலைகளையும் பற்றிப் பேச ஆரம்பித்தேன்.

"சாம் - டி - மார்ஸ் என்னும் படக்காட்சிச் சாலையைச் சில தினங்களுக்கு முன்னர் திறந்து வைத்தது ஞாபகமிருக்கலாம். காட்சிகளைப் பார்த்ததும் எனக்குச் சந்தோஷம். முன் பார்த்த படங்களுக்கும் இப்போது வரையப்பெற்ற படங்களுக்கும் வித்தியாசமில்லையென்று நினைத்தலாகாது. மாறுபாடு சிறிதேயாயினும், நிச்சயமாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 1863-ஆம் ஆண்டில் திறந்து வைத்த காட்சியையும் பார்த்தேன். அப்போது வெளிக்காட்சிகளைத் திறமையாக வரைவதில்லை; திரையில் நீலவர்ணத்தால் பல பாகங்களை இருட்டாக மெழுகி வைத்திருந்தார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின், அதாவது மானட் என்னும் சித்திரக்காரர் தோன்

றிய பின்னர், சித்திரத்தில் சில மாறுபாடுகளைக் கண்டோம்; திரையில் சூரிய வெளிச்சம் பிரகாசித்தது. ஓவியம் வல்லார் கதிரவனொளி பொருந்திய காட்சிகளை வரைந்தனர். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நேற்றுக்கண்ட காட்சி முன்னிலும் சிறப்புற் றிருக்கிறது; தெளிவாகவுமிருக்கிறது. படத்திலிருந்த களங்கம் நீக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது.

"சித்திர உலகத்தில் நான் கண்ட மூன்று நிலைகளையும் விவரித்தேன்; ஏனெனில், அவை இதர இயக்கங்களின் முன்னேற்றத்தையும் தெரிவிக்கின்றன. சென்ற தலைமுறையில் வாழ்ந்தோரின் அடிச்சுவடுகளைப் பற்றி எங்கள் தலைமுறையினரும் இயற்கையை ஒரு பலகணி வழியாகவே காண முயன்றனர். முன்னேற்றத்தில் நம்பிக்கை யற்றோர்கூட, விஞ்ஞானத்தினால் நல்ல பலன் விளைவதைக்கண்டனர். விஞ்ஞானக் கலை ஆதிக்கம் பெற்றுவந்தது. நாங்களும் அதன் ஆதிக்கத்துக் குட்பட்டோம். எங்களுடைய வாழ்க்கையோடு அது கலந்துவிட்டது. நான், கலை நூல்களிலும் விஞ்ஞான முறைகளைப் புகுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்டவன். எண்ணங்களோடு ஒன்றிவிடுவது காரணமாக, அவைகளைப் பெருக்கச் சொல்வது இயல்பே. கூர்ந்து கவனித்தால், இதில் வருந்துவதற் கொன்றுமில்லை. எங்கள் ஆர்வம் எவ்வளவு, நம்பிக்கை எவ்வளவு! இவற்றை உணரவேண்டும். யாவற்றையும் வெல்ல வேண்டும்! சத்தியத்தினால் மக்கட் சமூகம் உயர்வும் இன்பமும் அடைய வேண்டும்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் இளைஞராகிய உங்களை நினைக்கிறோம். இளமை என்பது பொருள் வரம்பற்றது; ஆழ்ந்த கருத்துடைய இளைஞர் எங்கே? அவர் போம் வழி யாது? அவர்களுக்குப் பிரதிநிதியாகப் பேசக்கூடியவர் யாவர்? இளைஞர் மனத்திலெழும் எண்ணங்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

அவைகள் இளைஞரெண்ணங்கள் அல்லவாயின் பொறுத்துக்கொள்ளுங்கள்.

"நீங்கள் எங்களைப்போல் விஞ்ஞானத்தில் முழு நம்பிக்கை வைக்கவில்லை யெனத் தெரிகிறது. அது ஒன்றில்மட்டும் நம்பிக்கை வைத்தால், சமூகத்துக்கும் ஒழுக்கத்துக்கும் தீமை விளையுமென்று கருதுகிறீர்கள். சென்ற காலத்திலிருந்து உயிருள்ளதான நிகழ்காலம் ஒன்றை ஆக்கப் பார்க்கிறீர்கள்.

"விஞ்ஞானக் கலையை முழுதும் ஒதுக்க முடியாதென்பது தெளிவு. சிறிது காலத்திற்கு முன் கண்டுபிடித்த விஷயங்களை ஒப்புக்கொண்டு, அவைகளின் பயனைப் பெருக்குவீர்களென்று நம்புகிறேன். விளக்கிக்காட்டிய உண்மைகளை மறுக்காமல், அவைகளைச் சமய உண்மைகளுடன் பொருத்திப் பார்ப்பீர்களாக. சமயம் செல்லும் வழி வேறு; விஞ்ஞானம் செல்லும் வழி தனி. விஞ்ஞானம் அறிவுக்கு விஷயம்; பரத்திற்குச் சம்பந்தப்பட்டதல்ல; வானுலகத்தில் இடந்தர வல்லதல்ல. கெடுத்த அமைதியையும் திருப்பித் தரவல்லதல்ல. விஞ்ஞானம் வெற்றிமுரசு கொட்டிய நாள் சென்றுவிட்டது. அவ்வுன்னத பதவிக்கு ஆசைப்படுவதில் பயனில்லை. ஏன்? விஞ்ஞானத்தால் யாவற்றையும் உடனே தெரிந்துகொள்ள முடியவில்லை; யாவற்றையும் சிறக்கச் செய்ய முடியவில்லை; யாவற்றையும் குணப்படுத்த முடியவில்லை. 'விஞ்ஞானப் புத்தகங்களை எறிந்துவிடு; அக் கலை வல்லாரைத் தூரத்தள்ளு' என்று சொல்ல உங்களுக்குத் தைரியமில்லாமலிருக்கலாம். எனினும், அவ்வாறு சொல்வாரும் உண்டு. அது மட்டுமா? அறியாமையை உயர்த்திச் சொல்லும் 'அடியார்'களும் 'தீர்க்கதரிசி'களும் பலர். எளிய வாழ்வை உயர்த்திப் பேசுவர். நாகரிகமற்ற சிற்றூரைச் சிறப்பிப்பர். அறிவற்ற, தற்கால நாகரிகமற்ற, புராதன வாழ்க்கையை ஒரு வாழ்க்கையென நம்புவர்.

"யாவற்றையும் தெரிந்து கொள்ளவும் அவற்றைச் சொல்லவும் ஆசைப்பட்டு, விரைவாகத் தொண்டு செய்தோம். செய்த தொண்டு மலையளவு. ஆனால், இந்த நூற்றாண்டின் கடைசியில் சோம்பலும் எதிர்ப்பும் உண்டானதை நான் மறுக்கவில்லை. விஞ்ஞானம் அதற்கு முன்னிருந்த நிலையைத் திருத்தியது. நீதியையும் இன்பத்தையும் லட்சியமாகக்கொண்டு சமூகத்தைத் திருத்தியமைக்க ஆரம்பித்தது. இருபது, ஐம்பது, நூறாண்டுகளுமாயின; ஆனால், நீதி, உயர்ந்த நிலைமைக்கு வரவில்லை. இன்பம் எட்டிப் பார்க்கவில்லை; மக்கள் பொறுமை யிழந்தனர், நம்பிக்கையற்றனர். அறிவால் இன்பம் பெறமுடியாதென நினைத்தனர். இம்மாதிரியாவது இயல்பே. செய்யுங் காரியம் செய்பவனுக்குப் பயன் தரும். நீண்ட வழி நடந்தவனுக்குக் களைப் புண்டென்பது உங்களுக்குத் தெரிந்ததே. மக்கள் வழியில் உட்காருவார்கள்; வழி நீண்டு கொண்டே போவதைப் பார்ப்பார்கள்; நினைத்த ஊருக்குப் போய்ச்சேர முடியுமாவென யோசிப்பார்கள்; வந்த வழி சரியான வழியா எனவும் சந்தேகிப்பார்கள். தோட்டத்திலேயே, நட்சத்திரங்கள் பிரகாசிக்கிற வானத்திற்கடியில் தூங்காமல் புறப்பட்டு வந்ததற்காக வருந்துவார்கள். லட்சியம் எட்டாமல் கிடந்தால் எப்படி முன் செல்வது? யாவற்றையும் தெரிந்துகொள்ள முடியாது போனால், தெரிந்து கொள்வதில் பயனென்ன? தூய்மையான எளிமையே நல்லது. அறியாத பிள்ளைபோலிருப்பதே மேல்.

"இம்மாதிரியாக, இன்பத்தைத் தருவதாகக் கூறிய விஞ்ஞானம் வறிய தசை யடைந்ததாகத் தோன்றியது.

"ஆனால், விஞ்ஞானம் இன்பந் தருவதாகச் சொல்லவில்லை. அவ்வாறு சொன்னதாக, நான் நம்பவில்லை. அது உண்மை தருவதாகச் சொல்லிற்று. இனி, உண்மையால் இன்பம் கிடைக்

குமா என்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டும். உண்மை வேண்டுமானல் பொறுமை வேண்டும்; சகிப்பு வேண்டும்; தன்னலமறுப்பு வேண்டும். கற்ற கலையால் அமைதி ஏற்படவேண்டும். இதை ஒரு சிலரிடத்துத்தான் காணமுடியும். இந்தக் குணங்களை அடையுமுன், கஷ்டப்படும் மக்கள் கதற ஆரம்பிக்கின்றனர். பொய்யற்ற வாழ்க்கை ஏது? நீதி ஆட்சிபுரியும் உலகம் இல்லையானல், கெட்டவர்கள் தண்டிக்கப் படவில்லையானல், நல்லவர்கள் நன்மை யடைய வில்லையானல் இல்வாழ்க்கையைச் சகிப்புடன் எதிர்ப்பில்லாமல் எப்படி நடத்த முடியும்? இயற்கை கொடுமை யானது; நீதியற்றது. விஞ்ஞானமும், வல்லார் வழியது இவ்வுலகம் என்று சொல்வது போலத் தோன்றுகிறது; ஒழுக்கம் தவிடுபொடியாகி, வல்லரசிற்கு வழிவிடுகிறது. நான் முன்னே சொல்லியபடி, அறிவைத் தேடும்போது உண் டாகும் களைப்பில், கண்ட உண்மைகள் சிலவற் றையும் புறக்கணிக்கிறோம். நம் கண்கள் ஊடுரு விச் சென்று, எல்லா உண்மைகளையும் கண்டு பிடிக்காததனலும், சட்டங்கள் யாவும் நமக் குப் புலப்படாததனலும், இதுவரையில் கண்ட உண்மைகளும் சட்டங்களும் கொடுமையாகத் தோற்றுகின்றன. அது மட்டுமல்ல. அறியாமை யில் அமைதியாகத் தூங்க விரும்புகிறோம். உண்மையானது தொந்தரவுக்கும் குற்றத்துக் கும் இட்டுச் செல்வதால், அதை மறுக்கவும் சிதைக்கவும் எண்ணுகிறோம். இவ்வாறு எண்ணி விடுதலை பெற—இவ்வுலகத்திலிருந்து தப்ப வேண்டி, மறுமையை எண்ணி, அதில் நம்பி, கனவுலகத்தில் மூழ்கி, நீதியையும் அன்பையும் இன்பத்தையும் நாடுகிறோம்.

"இன்பத்தை நாடி, அதைப் பெருதார் அரற்றும் குரலைக் கேட்கிறோம். அக் குரல் என் மனதைப் புண்படுத்துகிறது. அக் குரல் எப் பக்கமும் அழுகுரல்போல் கேட்கிறது. ஆனல், அது விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தை ஒரு

போதும் தடுக்கமுடியாது. சிலர் சொல்வர்: ‘உண்மை போதும்; வெறும் எண்ணம் எங்களுக்கு வேண்டும். இல்லாததொன்றைக் கனவு காண்பதே எங்களுக்கு அமைதி தரும். தெரியாத தொன்றில் மூழ்குவதே எங்களுக்குத் தெளிவைத் தரும். அங்குதான் மர்மமான மலர்கள் மலர்ந்து, அவைகளின் மணம் எங்கள் கஷ்டங்களைப் போக்கும்.’ இசை இவர்கள் வேண்டுதலுக்கு இசைந்துள்ளது; இவர்களுடைய புதிய தாகத்தை யடக்கக் கலையும் கருத்துக்கொண்டது; சித்திரமும் அவ்வழி நின்றது. சாம்-டி-மார்ஸ் காட்சியைப்பற்றி முன்னே சொன்னேன். அங்கே பழைய பலகணி வழியாகப் பழைய புஷ்பங்களைப் பார்க்கிறோம். மெலிந்த கன்னிகைகள், பிசாசுகள்—இவைகளின் படங்களிருக்கின்றன. இயற்கையின் பேரால் வரும் இயக்கத்திற்கு நான் எதிர்க் கட்சியாயினும், அதை மறுத்து மறந்துவிட வேண்டுமென்று சொல்லமாட்டேன். சமூகத்தைத் திருத்த, அதைக் கண்டு கவனித்தல் வேண்டும்.

“கனவான்களே! அவ்வியக்கம் சமூக முன்னேற்றத்தைக் கொஞ்சம் தடைசெய்து நிறுத்தி வைக்கிறது. தடை செய்கிறதென்று கூடச் சொல்ல முடியாது. ஏன்? நம் புத்தக சாலைகளோ, விஞ்ஞான மண்டபங்களோ, அவ்விஷயங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் அறைகளோ, பள்ளிக்கூடங்களோ புறக்கணிக்கப்படவில்லை. சமூகந் தோன்றும் மண்ணில் வேறுபாடு ஏற்படவில்லை. இந்தத் தலைமுறையினர் தோன்றியபோதும், இப்பொழுதும் உள்ளது ஜன நாயக மண்ணே. புதுக்கலையோ, புதுச்சமயமோ இம் மண்ணில் எப்படித் தோன்றும்? புதுக்கலை முளைத்து வளரப் புது மண் வேண்டும். புது மண்ணில்லாமல் புதுச்சமுதாயமில்லை. செத்தவர்களிடமிருந்து சமயம் தோன்றாது; இறந்த சமயங்களிடமிருந்து புராணக் கதைகளே தோன்றும். ஆகையால், முந்திய நூற்றாண்டை அனுசரித்து,

இந்த நூற்றுண்டிலும் விஞ்ஞான அறிவு தொடர்ந்து, வளர்ந்து, பிரகாசிக்கும். ஆனுல், நான் ஒன்று ஒப்புக்கொள்வேன்; கலையில் நம் நோக்கம் குறுகியது. புலனுக்கெட்டிய விஷயத்தையே கலை பேச வேண்டுமென்ற கட்சியில் நான் சேர்ந்தது தவறென்று அறிந்து வருந்துகிறேன். மறைந்த பொருளையும், மர்மமான பொருளையும், கலை பேசுகிற பொருளாகச் சேர்த்தனர் பின்னோர். அவர்கள் செய்தது நன்றே. விஞ்ஞானத்தில் நேற்றுக் கண்டு பிடித்தது அசைக்க முடியாதது; நாளைக் கண்டுபிடிப்பது இன்று தெரியாதது; இரண்டுக்கும் நடுவேயுள்ள பொருள்கள் மறைந்து கிடக்கின்றன; இங்கேதான் சந்தேகமும் கேள்விகளும்: இந்த இடம் கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் பொதுவானது. இங்கு, முன்னேக்கிச் சென்று, மனப் போக்குக்குத் தகுந்தவாறு ஆராய வேண்டும்; உண்மை காண வேண்டும்; விளக்க வேண்டும். விளக்கப் படாததை விளக்குவதுதானே லட்சியம்? எல்லையற்ற உலகத்தின் சக்திகளுக்கிடையே, நாம் அவைகளைத் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறோம். அவைகளை அறியவேண்டும். தெரியாதவைகளை ஆராய்வது நியாயமாயின், தெரிந்த உண்மைகளை மறுக்கவும், திரித்துணரவும், சந்தேகிக்கவும் துணியலாமா? விஞ்ஞான அறிவு முன்னேற ஏற, லட்சியமும் பின்னடைகிறது. வாழ்வின் பொருளும் அதன் இன்பமும் இருளைப் போக்குவதே; யாவற்றையும் தெரிந்துகொள்ள முடியாதென்பது உண்மையாயினும், அதனுல் குறைவில்லை.

"கனவான்களே! மன அமைதி யற்றுச் சந்தடி பெருகியுள்ள இக் காலத்தில், மனச் சஞ்சலத்தோடு தீர்க்கதரிசிகள் தோன்றி, ஒரு சமயத்தை வகுக்கிறார்கள். நல்ல மனதுடன் அவர்கள் வகுக்கிறார்களெனினும், அவர்களது குணத்திற்கேற்ப மதம் மாறுபட்டுக் கெடுதலடைகிறது. சமயங்கள் பலவிதம்; ஆனுல் அவை

களிலொன்றும் தெளிவாயும் விளக்கமாயும் இருப்பதாகத் தோன்றவில்லை.

“நம்புங்களென்று சொல்லுகிறார்கள்; எவற்றை நம்ப வேண்டுமென்று சரியாகச் சொல்வதில்லை. அவற்றைச் சொல்ல முடியாது போலும்! அல்லது சொல்லத் தெரியாது போலும்!

“நம்புவதிலே ஓர் இன்பம்; நம்பக் கற்றுக் கொள்வதிலே இன்பம்; இதற்காகத்தான் நம்புதல் போலும்? அவர்கள் சொல்லும் புத்திமதி கெடுதலல்ல. எச்சமயமாயினும், ஒரு சமயத்தை உண்மையெனக் கொள்ளுதல் பெருமகிழ்ச்சி தருமென்பது நிச்சயம். ஆனால், இதில் ஒரு கஷ்டம்; நம்பிக்கை நம் இஷ்டம்போல் வருமா?

“ஆகையால், என் சொற்பொழிவை முடிப்பதன் முன், நம்பவேண்டிய ஒன்றைப் பற்றிக் கூறுவேன். நீங்கள் வேலையில் நம்பிக்கை கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இளைஞர்களே! வேலை ஓர் அற்ப விஷயமாகத் தோன்றலாம். இதைப் பலர் சொல்லாத நாளில்லை; இடமில்லை. ஆனால், இதைச் சற்றுச் சிந்திக்க வேண்டுகிறேன். நான் பணி செய்வேன்; அதனினும் எனக்கு வேறொரு பதவியில்லை. என் வாழ்க்கை முழுதும் நிறைந்த பணிகளால் நான் பெற்ற பெரும் பயனைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வாழ்க்கையை ஆரம்பிக்கக் கஷ்டப்பட்டேன். வறுமையும் சங்கடமும் எனக்குத் தெரியும். வேலைக்குள் நுழைந்த பின்னரும் போராட்டம். இன்றும் போராட்டம். என்னை இழித்துரைத்தார்கள்; மறுத்தார்கள்; ஒன்றும் பாக்கியில்லை. ஆனால், எனக்கொரு நம்பிக்கை, ஒரு பலம்; அதுவே, வேலை. எனக்கிருந்த பெரும் வேலைகளே என்னைத் தாங்கின. அடைய வேண்டிய லட்சியம் தூரத்தில் மறையாது என் முன் நின்றது. இன்னல்கள் என்னைக் கீழே அழுத்திய போதிலும், முன் தோன்

றிய லட்சியம் என்னைத் தூக்கிவிட்டு, வலிமை தந்து, முன்னே செல்லச் செய்தது. நான் வேலை யென்று சொல்வது, முறையாகச் செய்யும் வேலை; தினசரி வேலை; நாம் எடுத்துக் கொண்ட வேலை. எத்தனையோ நாள் காலையில் வேலைக்கு என் மேசையருகில் உட்காரும் போது தலை சுற்றும்; வாய் கசக்கும்; உறக்கம் வரும்; உடல் நிலை கெட்டு, மனநிலையும் கெட்டிருக்கும். வேலை ஆரம்பிப்பதே சிரமமா யிருப்பினும், ஆரம்பித்தபின் அவ் வேலை ஓர் ஆறுதலையும் சுகத்தையும் தரும். வேலை முடிந்த பின், தலை நிமிர்ந்து வருவேன்; கஷ்டங்கள் நீங்கிவிடவில்லையாயினும், கருத்தில் அமைதி யேற்படும்; அது என்னை மறுநாள் வரையிலும் காப்பாற்றும்.

"வேலை செய்க! கனவான்களே! இதுவே உலகத்தில் ஒரு தனிச் சட்டம்; இதனினும் வேறு சட்டம் கிடையாது; இதுவே ஊனையும் உயிரையும் லட்சியத்தை நோக்கிச் செலுத்த வல்லது. வாழ்க்கைக்கு வேறு பொருளில்லை; வேறு காரணமில்லை. நாம் ஒவ்வொருவரும் நமக்குக் கொடுத்த வேலையைச் செய்துவிட்டு மறைகிறோம். வாழ்க்கையை என்னவென்று சொல்ல முடியாது. செய்யும் வேலையைக் கொண்டுதான் அதை அளக்கலாம். ஆகையால், அவரவருக்கிட்ட வேலையை ஏற்று, நாமாகக் கொண்டு இந்த வேலையைச் செய்கிறோம் என்ற ஆணவம் மேலிடாமல், எல்லோரையும் போலவே பணியி லீடுபடுவதை யன்றி வேறென்ன நாம் செய்ய முடியும்?

"செய்யும் வேலையை ஒப்புக்கொண்டு அதை ஆரம்பித்தால், புண்பட்ட மனத்திற்கும் ஆறுதல் வரும். எல்லையற்ற பரம்பொருளை நினைந்து வருந்துவோருக்கும், மர்மங்களில் மனம் செலுத்தி மயங்குவோருக்கும் சகோதர முறையில் நான் ஒரு வார்த்தை, சொல்லுவேன். முடிக்கக்கூடாத அவ்வளவு பெரிய வேலையை எடுத்துக்

கொண்டால் மிக நல்லது. அவ் வேலை நாம் நேரே நடக்க உதவும்; விளையாட்டாகும்; அறிவைத் தீட்டும்; சோறு போடும்; சுகந்தரும்; செல்வந்தரும்; நலந்தரும்.

"சமய தத்துவ சம்பந்தமான கேள்விகளுக்கு, வேலை விடையளிக்காதென்பது உண்மையே. ஒருவன் வாழ்க்கையை யோக்கியமாகவும் அமைதியாகவும் நடத்த அதுவே தற்காலிகமான மருந்து. கனவின்றித் தூங்குதலும், உடலும் ஒழுக்கமும் நலம் பெறலும், இவ்வுலகத்தில் கிடைக்கக்கூடிய இன்பத்தையெல்லாம் அடைதலும் அற்ப விஷயமா? வேலை செய்வதனாலே இவற்றைப் பெறலாம்.

"மனோராஜ்யத்தில் எனக்கு எப்பொழுதும் நம்பிக்கையில்லை யென்று சொல்ல விரும்புகிறேன். மக்களுக்கும் தேசத்திற்கும் வீணெண்ணத்தால் விளைவது நலமாகாது. கதையை நம்புவதும், உண்மைகளைத் திரித்துணர்வதும், வலிமை பெற்றிருக்கிறோமென இரவில் கனக் காண்பதும் நம்மை இன்னற் கடலில் அழுத்தும். ஜனங்கள் மேலே பார்க்கவேண்டு மென்றும், எல்லாம் வல்லவரை நம்பவேண்டு மென்றும், லட்சியத்தைக் கைவிடாது மேலேறவேண்டு மென்றும் சொல்லுவார்கள். இது தவறு! தவறு! அது மட்டுமல்ல. இப்படிச் சொல்வது பாவம். வேலை செய்வோரே வல்லார்; வீரமும் நம்பிக்கையும் அவர்களிடமே உண்டு. நாம் உடற் பயிற்சி முறைகளில் பழக வேண்டும்; நல்ல படைகள் அமைக்க வேண்டும்! காலாட் படையை நன்கு பழக்க வேண்டும். சிப்பாய்களுக்குத் தங்கள் பேரிலும் தங்கள் தலைவர் பேரிலும் நம்பிக்கை வேண்டும். இவை யாவற்றையும் பெற முடியும். இதற்கு மனவுறுதி வேண்டும். சரியான வழியை அனுசரிக்க வேண்டும். வரும் நூற்றாண்டும் எதிர்காலமும் வேலைக்காலம் என்றே கூறலாம். பொது

வுடைமை என்னும் தொடரில் நாளேயச் சமூக அமைப்பைக் காண்கிறேம். அன்று யாவருக்கும் வேலை ; சுயேச்சை தரும் வேலை; அமைதி தரும் வேலை.

"இளைஞர்களே! உங்களது வேலையைச் செய்யுங்கள். வாழ்க்கையைப் பூர்த்தி செய்யும் வேலையைக் கொள்ளுங்கள். சிறிய வேலை யாயினும் உபயோகப்படும். நீங்கள் தலை நிமிர்ந்து நடக்க உதவுகிற எவ்வேலை யாயினும் சரி, வேலை அதிகப்படாமல் தினசரி செய்வதை நிச்சயித்து விட்டால், என்றும் இன்பமே ; ஒரு நாளும் துன்ப மில்லை. எல்லையற்ற பரம் பொருள் இன்னல் தராது. சமூகம் சீர்பட்டுச் சிறப்படையும். ஒவ்வொருவரும் அவரவர் வேலை யைச் செய்வார்கள். வேலை செய்பவனுக்கு அன்பு தோன்றும். ஆகையால், செய்யும் பணியே நம்மைச் சீர்திருத்தவல்லதென நிச்சய மாக நம்புகிறேன். கலையின் உச்சியைப் பற்றிக் கனவு காண்பது சுகம் தரலாம்; ஆனல், உண்மையான மனிதனுக்குத் தன் வேலையைச் செய்து தன் வாழ்க்கையை நடத்தினல் போதும்.

—**எமிலி ஸோலா**"

விளக்கமற்று வரம்பற்ற பொருளில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று பிரெஞ்சு இளைஞர்களுக்குச் சில தலைவர்கள் சொல்வதுண்டு. அதில் ஸோலாவுக்கு நம் பிக்கை யில்லை. ஆனல், அவரும் இரண்டு விஷயங்களை யாவரும் நம்பவேண்டுமென்று சொல்வார். அவ்விஷயங் களும் விளக்கமற்றவை ; வரம்பு அமையப்பெருதவை. ஒன்று விஞ்ஞானம் ; மற்றொன்று வேலை.

சீன தேசத்தில் லோட்ஸ் என்ற பெயருடைய ஞானி யொருவர் இருந்தார். அவர் மிக்க புகழ் பெருதவர். அவர் ஒரு சமயம் வகுத்து, அதைக் குறித்து 'நல்வழி' என்ற புத்தகம் எழுதி யிருக்கிருர். அதில் 'தாவோ' என்ற ஒரு பதத்தை உபயோகிக்கிருர். அதுதான் அவர் சமய வுண்மைகளுக்கு அடிப்படை. அவ் வார்த்தையைப் 'பகுத் தறிவு' என்றும் 'வழி' என்றும் 'நற்குணம்' என்றும்

மொழிபெயர்த்திருக்கிறுர்கள். 'தாவோ' சட்டத்தை அனுசரித்தால், அவர்கள் சந்தோஷமா யிருப்பார்கள். ஆனல், இந்தத் 'தாவோ'வை யடைய, செயலின்றி யிருத்தலே வழி.

செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் விடுவதால், மக்களுக்குத் துன்பங்கள் வரவில்லை. வேண்டாத காரியங்களைச் செய்வதனல்தான் துன்பங்கள் வருகின்றன. இது அப் பெரியார் கருத்து. செய்யாமையைக் கற்றுக் கொண்டால், நம் சொந்தக் கஷ்டங்கள் நீங்கும். அரசியலாரும் இக் கொள்கையைக் கொண்டால், தேசத்தில் பல துன்பங்கள் நீங்கும். அரசியலுக்காகவேதான் இக் கொள்கையை அப் பெரியார் சொன்ஞர்.

இடைவிடாது வேலை செய்ய வேண்டு மென்று ஸோலா சொல்வார். வேலை உடலுக்கு உறுதி தரும்; மனதுக்கு அமைதி தரும். கடவுட் சிந்தனையாகிய கவலையைப் போக்கும். இது ஸோலாவின் கருத்து. வேலை! ஆனல், நாம் என்ன வேலையைச் செய்வது? கஞ்சா, சாராயம், புகையிலை—இவைகளைச் செய்வதா, விற்பதா? கம்பெனிப் பங்குகளை வாங்கி, விற்று, சூதாட்டம் போல லாபநஷ்டம் பார்ப்பதா? ஆயுதம் செய்வதா? தூக்குப் போடும் வேலை செய்வதா? எல்லாம் வேலைதான். வேலைக்கார்ர் இவ் வேலை செய்வதை நிறுத்திஞல், மக்கள் நன்மை யடைவார்க ளென்பது வெளிப்படை.

ஆனல், ஸோலா, 'வேலை' என்று சொன்னபோது, விஞ்ஞான சம்பந்தமான வேலையையே கருதி யிருக்கலாம். தம் பிரசங்கம் முழுதும் விஞ்ஞானத்தின் பெருமையைப் பற்றியே பேசுகிறுர். விஞ்ஞானத்தைக் குறை கூறுவது தவறெனக் கருதுகிறுர். அநேக விஞ்ஞான ஆராய்ச்சியாளர், பிரசுரித்த கட்டுரைகளையும், பிரசுரிக்காத கட்டுரைகளையும், புத்தகங்களையும் எனக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறுர்கள்.

கிறிஸ்துவர்கள், பிறப்பை ஆராய்ந்து விட்டதாக ஒருவர் எழுதுகிறுர். அணுக்களைப்பற்றி அழகான புத்தகம் ஒன்று வந்திருக்கிறது. இன்னென்று சமூக விஷயம். மற்றென்று மாதச் சஞ்சிகை. சதுரங்க விளையாட்டைப் பற்றி ஒரு புதிய புத்தகம்.

இவற்றை எழுதியவர்க ளெல்லாம் கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள்; விஞ்ஞானத்தின் பெயரால் வேலை செய்தார்கள். அவர்களுடைய நேரமும் வேலையும் அவர்களை யொட்டிப் பலருடைய நேரமும் வேலையும் வீணாயின என்பது எனது கருத்து; அதனோடு கெடுதல்தான் விளைந்தது. இவர்களது வேலைக்காக ஆயிரக்கணக்கான மக்கள் காகிதம் செய்தும், எழுத்துக்களை வார்த்தும், இவர்களுடைய உணவுக்கும், உடைக்கும் வீட்டுக்கும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது.

விஞ்ஞானத்திற்காக வேலை! விஞ்ஞான மென்றால் என்ன? எது விஞ்ஞானம்? அது விளக்கப்பட்டிருக்கிறதா? சிலர் ஒரு விஷயத்தை விஞ்ஞான மென்பர்; அதனையே உபயோகமற்ற மடமை யென்பர் பிறர். இக்கருத்து வேற்றுமை, அறியாதார்களுக் கிடையில் மட்டுமல்ல, விஞ்ஞான சாஸ்திர நிபுணர்களுக்கிடையிலு முண்டு. அரசியல், தத்துவம், சமயம்—இந்தச் சாஸ்திரங்கள் மிக்க அவசியமென்றும் முக்கியமென்றும், அறிந்தோரில் சிலர் கருதுவர். வேறு சிலர், இவை குழந்தைகளின் வீண் விளையாட்டென்றும், விஞ்ஞானமல்ல வென்றும் கூறுவர். சமூக சாஸ்திரம் விஞ்ஞான மென்று இவர்கள் சொன்னால், அதை மறுப்பர் ஒரு சாரார். இவ்வாறு தர்க்கம் பல. ஒவ்வொரு சாஸ்திரத்திலும், வேவ்வேறு கொள்கைகளுண்டு; தங்கள் கொள்கையே சரி யென்றும், பிறர் கொள்கை சாஸ்திரமாகா தென்றும் பலத்த விவாதம்.

கடைசியாக ஒன்று கவனிப்போம். விஞ்ஞானத்தில் ஒவ்வொரு வருஷமும் புதிதாகப் பல விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. இவைகளைக் கண்டு உலகத்திலுள்ள பல பித்தர்கள் ஆரவாரஞ் செய்கின்றனர். கண்டுபிடித்தவர்கள், புகழும் பொருளும் பெறுகிறார்கள். முடிவில், கண்டுபிடித்த விஷயங்கள் முழுமையும் தவறென்று, கண்டுபிடித்தவர்களே ஒப்புக்கொள்கிறார்கள்.

முன்னர், ரோம் நகரத்தார், பேச்சுத் திறமையைப் பெரும் விஞ்ஞான சாஸ்திரமாகக் கருதினர். காட்டு ஜனங்களையும் அறிவாளிகளையும் சொல் நயத்தைக் கொண்டே அறியலாம். இப்போது அவரவரது பேச்சுத் திறமை ஒரு விஞ்ஞான மென்று கருதப்படுவதில்லை.

மற்ற நூற்ருண்டுகள் போலத்தான் இந்த நூற்ருண்டும். ரோம் நகரத்தார் பேச்சுத் திறமையை விஞ்ஞானமாகக் கருதியதுபோல, நாம் கருதுவதில்லை. அதுபோலவே, நாம் விஞ்ஞான மென்று கருதுவதைப் பிற்காலத்தவர் விஞ்ஞானமல்ல வென்று கருதலாம்.

II

சமயக்கொள்கைகளை விடக்கூடாதென்று சொல்லும் தலைவர்களை மறுத்து, ஸோலா பேசினர். ஸோலா அவர்களுக்கு எதிர்க்கட்சிக்காரர்; விஞ்ஞானத்தைப் போற்றுகிறவர். அவர்கள் சொல்லும் காரணத்தைப் பார்த்தால், இரு கட்சியாருக்கும் முரண்பாடில்லை. இருபாலாரும் சமயத்திலும் விஞ்ஞானத்திலும் கொண்ட அபிமானம் நம்பிக்கையைப் பொறுத்தது. ஸோலாவே இதை ஒப்புக்கொள்ளுகிருர்.

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் முரண் என்று யாவரும் சொல்லுகிருர்கள். அது உண்மையே. ஆனல், ஒரு விஷயத்தில்தான்: அதாவது, கால வித்தியாசத்தில். ஒரு காலத்தவர் விஞ்ஞானமாகக் கருதுவது, பிற்காலத்தவருக்குச் சமயமாக மாறுகிறது. சமயமென்பது முற்காலத்திய விஞ்ஞானம்; விஞ்ஞான மென்பது தற்காலத்துச் சமயம்.

உலகம் ஆறு நாளில் படைக்கப் பட்டதென்று யூதர் கூறுவர். தகப்பன் செய்த பாவத்திற்குப் பிள்ளைகள் தண்டிக்கப்படுவார்கள்; சில வியாதிகள் பாம்பின் பார்வையால் தீரும் - இவை சமய மொழிகள். பூமி சுற்றுகிறது; போராட்டத்தில் பல உயிர்கள் தோன்றின; குற்றத்திலும், குணத்திலும் தாயைப் போலப் பிள்ளை; கால் மாத்திரையைக் குறிக்கும் அடையாளமாகிய 'காமா'வை ஒத்த சில அணுக்கள் வியாதிக்குக் காரணம்- இவை விஞ்ஞான மொழிகள்; இக் காலத்தவர் கூறுவன. ஆதிகாலத்து யூதர் நிலையிலிருந்து சிறிது சிந்தித்துப் பாருங்கள். உலகம் ஆறு நாளில் தோன்றியதும், சில வியாதிகள் பாம்பால் தீருவதும் அவர்களிருந்த நிலைமையில் விஞ்ஞானமாகத்தான் புலப்பட்டிருக்க வேண்டும்; இது, டார்வின் சட்டமும், பெற்ரேரின் குணங்களைப் பிள்ளைகள் அடைவ

தும், காமாவைப் போல அணுக்களிருக்குமென்று கோச் என்பார் கண்டுபிடித்ததும் நமக்கு விஞ்ஞான உண்மைக ளாவது போலத்தான்.

உலகம் ஆறு நாளில் தோன்றியதையும், விஷப்பாம்பு வியாதியைத் தீர்ப்பதையும் யூதர்கள் நம்பினார்கள். அதை விடப் பூசாரிகளின் பேரில் அவர்களுக்கு நம்பிக்கை அதி கம். அதுபோலவே, நாமும், காமா போன்ற அணுக்கள் உண்மை என்றும், மகனறிவு தந்தையறிவு என்றும் நம்பு கிறோம். அதிலும், நாம் விஞ்ஞானிகளின்பேரில் வைத்திருக் கும் நம்பிக்கை அதிகம். விஞ்ஞானிகளும், யூதர்களுடைய பூசாரிகளைப்போல், சொல்வதை வற்புறுத்திச் சொல்லு கிறார்கள் ; மிகத் தெரிந்தவர்கள் போலச் சொல்லுகிறார் கள்.

பூசாரிகளையும் விஞ்ஞானிகளையும், அவரவர் கூட்டத் தாரைத் தவிர வேறொருவர் கட்டுப்படுத்துவாரில்லை ; இரு வரும் ஆச்சரியமான விஷயங்களையும், மர்மமான விஷயங் களையும் பொதுஜனங்களுக்குச் சொல்ல விரும்பினர். அதற்காக உண்மையைப் பிடிவாதமாகப் புறக்கணிக்கவும் செய்தனர்.

சமயம் என்பதில் பெரும் பகுதி புராதனமான மூடப் பழக்கம் ; விஞ்ஞானத்தில் பெரும் பகுதி தற்காலத்து மூடப் பழக்கம்; இரண்டிலும் உண்மை ஒரே அளவுதான்; ஒன்றில் மற்றொன்றைவிட அதிக உண்மையோ பொய்யோ கிடையாது. ஆகையால், நம்பிக்கை காரண மாக—சமய நம்பிக்கையாயினும் சரி, விஞ்ஞான நம் பிக்கையாயினும் சரி—வேலை செய்வது மக்களுக்கு நன்மை தருமென்பது சந்தேகம். இவ்வழியில் மக்களுக்கு நன்மையை விடத் தீமையே அதிகம்.

வாழ்த்தல், வணங்கல், பிச்சையிடல் முதலிய சமய விதிகளைப் பின்பற்றி ஒருவன் தன் வாழ்க்கையை நடத்த லாம். அவ் வேலைக்கே உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்யலாம் ; அவ்வாறே விஞ்ஞானியும் ஒரு வேலைக்கு அர்ப்பணம் செய்யலாம். ஆனால், சாகும் போது, தானெடுத்துக்கொண்ட சமய வேலையோ, விஞ் ஞான வேலையோ மூடத்தனமான வேலை என்பதாகக் காணலாம்.

ஸோலாவைப் படிக்கு முன்னமே, வேலைக்குச் சிறப்புண்டென்று மேல்நாட்டார் கொள்வதை நினைக்க, எனக்கு ஆச்சரியமாகவே யிருந்தது. அறிவில்லாத எறும்பு நிரம்ப வேலை செய்தால், அது தன்னைப்பற்றி உயர்வாகப் பேசிக் கொள்ளலாம்; குணமெனவும் சிறப்பெனவும் கொள்ளலாம். வேலையே அன்பை வளர்க்கிறதென்பார் ஸோலா. என் அனுபவத்தில் அது உண்மையல்ல. பொருளுக்கோ, புகழுக்கோ செய்யும் வேலை எப்பொழுதும் தன் நலத்தைக் கொண்டது. இது கெட்டது. இதை விட்டுவிடுவோம். தன் நினைப்போடும் கர்வத்தோடும் செய்யும் வேலை மனிதனைக் கொடியவனாக்குகிறது. இடைவிடாது வேலை செய்கிறவர்களை உண்மையும் எட்டுவதில்லை; நேசமும் எட்டுவதில்லை; நன்மை செய்யவும் அவர்களுக்கு நேரமில்லை; நல்ல வேலை எது என்று ஆராயவும் நேரமில்லை. 'உங்கள் வேலை பயனற்றது; தீமையே விளைவிக்கும். வேண்டுமானால் காரணம் காட்டுகிறோம். நிதானியுங்கள். விஷயத்தை ஆராய்வோம்' என்று நீங்கள் சொன்னால் அவர்கள் கேட்கமாட்டார்கள். ஆனால், நம்மை ஏளனமாய் நினைத்து அவர்கள் பதில் சொல்வார்கள்: 'நீங்கள் சொல்வது உங்களுக்குச் சரிதான். உங்களுக்கு வேலை யொன்றுமில்லை; வெறும் பேச்சுத்தானே? ஆனால், எங்களுக்குப் பேச நேரமிருக்கிறதா? எங்கள் வாழ்நாள் முழுதும் வேலை. வேலை நமக்காகக் காத்திருப்பதில்லை. நான் ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியன்; அதன் வாசகரின் தொகை ஐம்பதினாயிரம். நான் ஒரு படை சேர்க்க வேண்டும். நான் 'எப்பீல்' கோபுரம் கட்ட வேண்டும். நான் சிகாகோ கண்காட்சிச் சாலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் ஒரு பூசந்தியைத் துளைக்க வேண்டும். பெற்றோரின் குணங்கள் பிள்ளைக்கு அமைகின்றனவா என்ற விஷயத்தை ஆராய வேண்டும். பேராசிரியர் ஒருவர், குறித்த சில வார்த்தைகளை எத்தனை முறை உபயோகப்படுத்தியிருக்கிறாரென்று கணக்கிட வேண்டும்.'

மக்களில் மிகக் கொடியவரான நீரோ, பீட்டர் முதலியோர் ஒரு பொழுதும் சும்மா இருந்ததில்லை; வேலையோ வேடிக்கையோ நடந்துகொண்டேயிருக்கும்.

வேலை யென்பது குற்றமில்லாததாயினும், எந்த வழியில் யோசித்த போதிலும், அதனைக் குணமெனக் கொள்ள முடியாது. ஆனால், வேலை அவசியம்; வேலையில்லையானால் கஷ்டம். அதற்காக வேலையை ஓர் உயர்ந்த குணமாகப் போற்றுவது சகிக்க முடியவில்லை. நல்ல ஆகாரம் சாப்பிடுவதை நற்குண மென்பதுண்டா? வேலையை நற்குணமாகக் கருதுவதன் காரணமென்ன? முன் காலத்தில் சோம்பலைக் கனவான்களுக்கு அடையாளமாகக் கருதினர். அதை மறுப்பதற்காக, இப்போது வேலை செய்வதைக் குணமெனக் கொள்கிறார்கள். சோம்பல் உயர்ந்த நிலைமைக்கு அடையாளமென்று இப்போதும் பணக்காரரும், படியாத சிலரும் எண்ணுவார்கள்.

ஐம்பொறிகளையும் உபயோகிப்பது குணமாகுமா? அது ஒவ்வொருவரும் செய்ய வேண்டுவது; மிருகங்களும் செய்வது. கட்டி வைத்த மாடு துள்ளுதல் போல, வேலையில்லாதவர்கள் பத்திரிகைகளைப் படிப்பார்கள்; நவீனங்களைப் படிப்பார்கள்; சதுரங்கமாடுவார்கள், சீட்டாடுவார்கள்; குஸ்தி போடுவார்கள்; சிலம்பம் பழகுவார்கள்.

வேலையே ஒரு குணமென்பது எனது அபிப்பிராயமில்லை. குழம்பிய இந்தச் சமூக நிலையில் வேலை ஒரு மருந்து. புகையிலை, கள் போன்ற போதைப் பொருளையொத்து, வேலையும் நம் வாழ்க்கையின் வெறுமைத்தனம் மனதிற் படாமல் மறைக்கும். அதற்காகவே ஸோலா, வேலையின் அருமையை இளைஞர்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறார்.

தூமாஸ் வேறுவிதமான விஷயங்களைக் கூறுவார்.

III

'கௌலா' என்னும் பத்திரிகைக்கு, தூமாஸ் எழுதிய கடிதம்:

"அன்புடைய ஐயா!

"பள்ளி மாணவரின் மனோபாவத்தைப்பற்றியும், சார்போன் நிகழ்ச்சிகளுக்கு முன்னும்

பின்னும் நடந்த விஷயங்களைப் பற்றியும் எனது அபிப்பிராயம் கேட்டிருக்கிறீர்கள்.

"நான் என் எண்ணத்தைத் தெரிவிக்காமலிருக்கவே விரும்புகிறேன். என்னைப்போல் அபிப்பிராயங் கொண்டவர் தம் அபிப்பிராயத்தை விடார். பிறர் தங்கள் அபிப்பிராயங்களை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்வர். வாதங்களில்லாதிருப்பதே நலம். என் நண்பர் — ஒழுக்க நூலாசிரியர் சொல்லுவார்: 'அபிப்பிராயங்கள் ஆணிகள் போல; அவைகளை அடிக்க அடிக்க உள்ளே இறங்கும்.'

"வாழ்க்கையில் பெரும் பொருள்கள் இவை. வெவ்வேறு விதமாக ஆராய்ச்சிக்கு வருகின்றன. எனக்கும் இவைகளைக் குறித்து எண்ணங்களுண்டு. என் எண்ணங்கள் மிகச் சரியானவை யென்று எண்ணுவதாலும், எதையும் அழிக்கவும் ஆக்கவும் எனக்கு ஆசையில்லாததாலும், என் எண்ணங்களை என்னோடு நிறுத்திக் கொள்கிறேன். அவை என் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளா யிருக்கின்றன. இப்பொருளை ஆராய, அரசியல், சமூக, மத, தத்துவ விஷயங்களை யெல்லாம் ஆராயவேண்டும். அதற்குக் காலம் இடம்தராது. ஒவ்வொரு தலைமுறையினரும் பழைய காலத்து எண்ணங்களுடன், புதிய எண்ணங்களையும் கடைப்பிடிக்கிறார்கள். புதிய எண்ணங்கள் வாழ்க்கையை எல்லா வழியிலும் மாற்றக்கூடியவை யென்று நம்புகிறார்கள்.

"காரண காரியங்களைப்பற்றி முடிவுசெய்ய வேண்டும். மக்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இதை ஆராய்ந்தும், முடிவுகட்ட முடியவில்லை; முடிவுகட்ட, இன்னும் பல்லாண்டுகள் ஆராயவேண்டும். இக் கேள்விக்கு இருபது வருஷத்துச் சிறு குழந்தைகள் தக்க பதில்கண்டு, தங்கள் சிறு தலையில் வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் வாதம் ஆரம்பிக்கும்போது, எதிரியை வைய ஆரம்பிக்கிறார்கள். இதிலிருந்து,

சமூகத்தினர் அனைவரும் சமய எண்ணங்களை வளர்க்கிறார்களென்று கொள்வதா? கைவிடப் பட்ட சமயம் மீண்டும் தலைகாட்டுவதற்கு இது அறிகுறியா? இளைஞர்களின் வாதம் அவர்களது இளமையைத்தான் காட்டுகிறது.

"ஆர்வமிக்க இப் பருவத்திலெழும் எண்ணங்கள் நிலையான எண்ணங்களென்றோ, காலப் போக்கைக் காட்டுவன என்றோ கொள்வது அறியாமை. நாம் பார்க்கும் ஆவேசம், வளர்ச்சிக் கிரமத்தில் வரும் ஒரு காய்ச்சல். எந்த எண்ணங்கள் வளர்வதற்காக இன்று இவர்கள் சண்டையிடுகிறார்களோ, அந்த எண்ணங்களையே பின்னால் தங்கள் மக்களிடம் பார்க்கும்போது, அவைகளை இவர்களே தடுப்பார்கள். காலத்தாலும் அனுபவத்தாலும் இம்மாறுதல் ஏற்படுகிறது.

"இன்று சண்டையிடும் எதிரிகள் பின்னால் வாழ்க்கையில் சந்திப்பார்கள். உலக இயல்பைக் கண்டு ஆத்திரம் அடங்கிவிட்டது. ஊக்கம் குறைந்தது. எதிரிகளுடன் கைகோத்து நேர் வழியில் நடக்கிறார்கள். முன்னாளில் கொண்ட எண்ணங்களாலும், பட்ட பாட்டாலும், உலகம் மாறுதலடையாமல் உருண்டையாகவே இருக்கிறதென்றாலும், பூமி சுற்றிச் சுற்றி வருகிறதென்றும், பழைய வானமே திரும்பித் திரும்பித் தெரிகிறதென்றும் வருத்தத்துடன் அறிந்து கொள்ளுகிறார்கள். சிறு வயதில் ஓயாத சண்டை. சிலர் சமயத்திற்காக, சிலர் விஞ்ஞானத்திற்காக; இருவரும் தங்கள்தங்கள் வழியாகக் கடவுளைக் காட்டுவார்கள், இல்லையெனவும் மறுப்பார்கள்; ஒரு கொள்கையை நிலைநாட்டும் பொருட்டு, ஆயுதங்களைப் பிடுங்கும் வரை, குத்துச் சண்டையும் வெட்டும் கொலையும் நடந்துகொண்டேயிருக்கும்; சண்டை முடிந்தாலும் ஒருவரைவிட மற்றொருவருக்கு அதிகமாகத் தெரியவில்லையென்பது விளங்கும். இருதிறத்தாரும் ஒப்புக்கொள்வதொன்று: நம்பிக்கை வேண்டும்; அறிவினும்

அதிகமாக வேண்டுவது நம்பிக்கை. மனிதன், வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களில் திக்குத் தெரியாமல் திண்டாடுகிறான். தானிருக்கும் நிலையைவிட நல்ல நிலையை அடைய முயலுகிறான். தத்துவ ஞானம் நன்னிலை தருமா எனப் பார்க்கிறான்.

"மனிதன் காணும் உலகம் அவன் தோன்று முன் தோன்றியது; அவனழிந்த பின்னரும் நிற்பது. உலகத்தின் கால தத்துவத்தை மனிதன் அறிகிறான்; உணருகிறான். அதில் தானுங் கலந்துகொள்ள விரும்புகிறான். வாழ்க்கையில் புகுந்ததும் அழியாத்தன்மை அடைய விரும்புகிறான். சுற்றியுள்ள உலகம் நம்மை ஏத்துகிறது; தாழ்த்துகிறது; கேலி செய்கிறது; அழிக்கிறது. மனிதனுக்குத் தோன்றிய ஆசை அவனைத் தொடர்கிறது. உரக்கக் கத்தி அழியா நிலையைக் கேட்கிறான்; ஈனக் குரலால் கெஞ்சுகிறான். நிச்சயமும் தெளிவும் வேண்டுகிறான். கிடைப்பதில்லை. கிடைக்காதது அவனதிர்ஷ்டம். என்? முடிவுகட்டிய அறிவில் இயக்கம் அழிகிறது; இறப்பு நிச்சயம். நிச்சயமின்மையே மக்களை ஆட்டுவிக்கும் சக்தி. நிச்சயத்தை அடையா முன்னர், குறிக்கோளை நாடி அங்குமிங்கும் அலைகிறான்; கடவுள் இல்லையென்பான்; உண்டோ இல்லையோவென ஐயுறுவான்; கர்வம் ஒருபுற மிழுக்கும்; ஆசை ஒரு பக்கம் காட்டும்; கோபம் வேறு இடத்திற்குக் கொண்டுவிடும்; பிறரின் பின்னே சென்று, வேறு திசை யடைவோம்; கடைசியில் நம்பிக்கை பிறப்பது திண்ணம். அன்புள்ள இருவருக்கிடையே வரும் சண்டை நீடித்திருக்குமா? அதே போலத்தான் நாம் தேடி அலைவதும் திரும்புவதும்.

"மனிதனின் லட்சியம் சிற்சில சமயங்களில் மறையலாம்; ஒருநாளும் அழிவதில்லை. நிலவை மேகம் மறைப்பதுபோல், லட்சியத்தைத் தத்துவ விசாரணை யென்னும் மேகம் மறைக்க

லாம். ஆனால், மறுபடியும் அது சிதைவில்லாமல் தோன்றி விளங்குகிறது. மனிதனுக்கு லட்சியம் தேவை; அவனுக்கு அதிலுள்ள ஆசையைத் தடுக்கமுடியாது. அந்த ஆசையால்தான் சமயக்கொள்கையை யெல்லாம் கெட்டியாகப் பிடிக்கிறான்; முழு நம்பிக்கை வைக்கிறான்; குதூகல மடைகிறான். அறிவு அவன் நம்பிக்கையைத் தடைப்படுத்துவதில்லை. அவனை எல்லையற்ற கடவுள் தத்துவத்தினிடம் சேர்ப்பதாகச் சொல்லுகிறது. எல்லையற்ற பொருளை ஒரு வரையறைக்குட் படுத்தி, மனிதனுடைய அறிவிக்கும், பக்குவத்துக்கும் தகுந்தவாறு கொடுக்கிறது.

"பல நூற்றாண்டுகளாக, சிறப்பாகச் சென்ற நூற்றாண்டில், பற்பல சமயங்களிலே பல புதிய மனிதர்கள் இருட்டிலிருந்து வெளிவருவதுபோல் தோன்றினர். பகுத்தறிவாலும் விஞ்ஞானத்தாலும், அனுபவத்தாலும் ஆராய்ந்து, பழைய கொள்கைகளை மறுத்தும் அவற்றைக் கால தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப் பட்டனவென்று அறிவித்தும் அவ்வுண்மைகளடங்கிய விதிகளை அழித்தும் வந்தார்கள்.

"இக்கட்சியில் யார் சரி? தேடுவோர் யாவரும் சொல்வது சரி; வெறுஞ் சண்டைக்காரர் சொல்வது யாவும் பிழை. அடையவேண்டியது உண்மை; ஆராய்வது நமது உரிமை. இதற்கிடையே தடியடிக்கு இடமேது? ஆயினும் இதைப் பல பெரியோரிடம் காண்கிறோமே! நாம் அடையவேண்டிய இடமானது சண்டை காரணமாகத் தூரத்தே விலகுகிறது. சண்டை கொடிது; அது பயனற்றது; நாகரிகமற்றது. அடி பலமாவதால், கடவுளுண்மையோ, இன்மையோ புலப்பட்டுவிடாது.

"ஆகையால் ஏற்படுவதென்ன? உலகம் தானாகப் படைத்துக்கொள்ளவில்லை. எல்லாம் வல்லவர் — அவர் யாரா யிருப்பினும் சரி—

படைத்தார். அவர் நம்மைக் கருவியாக உபயோகப்படுத்துகிறார். நம்மை ஏன் படைத்தாரென்பதும், நம்மை எங்கே செலுத்துகிறாரென்பதும் அவருக்குத்தான் தெரியும். நாம் அவரை நல்லவரென்று சொன்னாலும், அவரைக் கெஞ்சிக் கேட்டாலும் இந் நுட்பத்தை மறைத்து வைக்கத் தீர்மானித்துள்ளார். என்றுமுள்ளதாகிய இந்த நுட்பத்தை அறிய விரும்புவதை, இப்போது மக்கள் மறந்தார்கள் என்றே எண்ணுகிறேன். மக்கள் சமயத்திற் புகுந்தனர்; அங்கு ஒன்றும் புலனாகவில்லை. சமயவாதிகள் தத்தம் மதங்களே சிறப்புடையவை என்று வாதமிட்டார்கள். மக்கள், தத்துவ ஆராய்ச்சியில் நுழைந்தனர். அங்கும் ஒன்றும் காணவில்லை; அவை வேறு வேறு முரண்பட்ட கொள்கைகளை வெளிப்படுத்தின. இனி மனிதன் தன் இயற்கையறிவையும் பகுத்தறிவையுமே நம்பவேண்டியதாயிற்று. இவ்வுலகத்தில் மனிதன் தன்னைக் காணுகிறான். வந்தவாறேதோ? போமாறெங்ஙனே? வருவதும் போவதும் எதற்கோ? இவைகளை யாரறிவார்? இவைகளைத் தெரிந்துகொள்ள முடியாததால், இவ்வுலகத்தில் இன்பத்தோடிருக்கவே வழிதேடவேண்டும்.

"சில நாட்களுக்கு முன்னர், மாணவர்களுக்கு, ஸோலா செய்த சொற்பொழிவில் வேலையைப் பாராட்டினார். அது நல் வழி யென்றார்; வேண்டியவெல்லாந் தருமென்றார். இன்பம் பயப்பது வினையென்றார்; வெற்றி தருவது வினை யென்றார். செயல் புரிவதால் வரும் நன்மை தெரிந்ததே: அது பழைய வழி; பழகிய வழி. அதற்காக அதன் பயனைக் குறைத்துச் சொல்லக் கூடாது. ஆனால், செய்வினை மட்டும் போதவில்லை; போதியதுமில்லை; இனியும் போதாது. மனிதன் தன் கையால் வினை செய்யினும் சரி, மூளையால் செய்யினும் சரி, உணவுக்கும், பொருளுக்கும், புகழுக்கும் வேலை செய்தால் போதாது; இவற்றினினும் பெரிய லட்சியம்

இருக்கவேண்டும். சிறிய நோக்கங்களை உடையவர்கள் அவைகளை யடைந்துவிட்டாலும், மனதிற்கு அமைதி ஏற்படுவதில்லை; குறை இருந்துகொண்டே இருக்கும். ஏன்? மனிதனுக்கு ஊட்ட உடம்புள்ளது; தீட்ட அறிவுள்ளது. அதனோடு நிற்கவில்லை; அமைதி தர ஆன்மாவுள்ளது. ஆன்மாவும் இடைவிடாது வேலை செய்கிறது. வெளிச்சத்தையும், உண்மையையும் நாடிக்கொண்டே யிருக்கிறது. நிறை சுடரையும், முழு உண்மையையும் அடையும் வரை, ஆன்மா மனிதனுக்கு அல்லல் தரும்.

"நன்று! ஆன்மா இன்று மனிதனை ஆட்டுவிப்பதுபோல் என்றும் ஆட்டிவைத்ததில்லை; இன்று தொந்தரவு செய்வதுபோல் என்றும் தொந்தரவு செய்ததில்லை. நாம் மூச்சுவிடுவது உண்மையென அறிவதுபோல், ஆன்மாவும் உண்மை என எண்ணுகிறோம். அங்கு மிங்குமுள்ள சில ஆன்மாக்கள் சமூகத்திற்குப் புத்துயிரளிக்க விரும்பின. ஒன்றை யொன்று விரும்பின; நெருங்கின; சேர்ந்து கூடின. பலரையு மிழுத்தன. இப்பொழுது அத் தூய ஆன்மாக்களைத் தேடிப் பலர் திக்கனைத்திலிருந்தும் வருகின்றனர். அத் தூய ஆன்மாக்கள் ஒரே ஆன்மாப்போலாயின. சேர்ந்து, நிச்சயமாக, தடையின்றி நல்வழிப்பட வழியுண்டெனக் கண்டனர். நேற்றுவரையில் சண்டை செய்த தேசங்கள் இன்று கூடும் மனப்பான்மை காட்டுகின்றன. தற்சமயம் நடக்கும் செய்கைகள் அதற்கு விரோதமாகத் தோன்றலாம்; ஆனால், அவைகளிலும் ஒரு நேசப்பான்மை யிருப்பதை நான் யூகித்தறிகிறேன்.

"தேசங்கள் படையைப் பெருக்குவதும், தலைவர்கள் போர் முழக்கம் செய்வதும், நிறவித்தியாசத்திற்காக அரசாங்கத்தார் சிலரைத் தாக்குவதும், உள்நாட்டில் சண்டையிடுவதும் நல்லதல்ல: ஆயினும், இவை கெட்ட சகுனங்களுமல்ல. இவைகளெல்லாம் மறையப் போவதைக்

குறிக்கும் கடைசிக் காட்சிகளே. சமுதாயம் மனித உடம்பைப்போன்றது. உடம்பிலுள்ள கெட்ட பொருள்களை வெளியேற்ற, வியாதி ஒரு முரட்டு வழி.

"முன் நடந்த பிழையால் பயனடைந்தோரும், பயனடைய விரும்புவோரும் சேர்ந்து கொண்டு, பிழையைத் திருத்த விடமாட்டார்கள். ஆதலால், படைப் பெருக்கம், போர் முழக்கம் முதலியன உண்டாயின. இவை மேலெழுந்த நோக்குக்கே தெரிவன. இவை மிகப் பெரியனவாகத் தெரியலாம். ஆனல், உள்ளே சூனியமானவை. இவைகளில் இனி உயிரில்லை. உயிர் வேறெங்கோ போய்விட்டது. அடியோடு அழிக்கத் திரட்டப்படும் பல்லாயிரக் கணக்கான படைகள் இப்பொழுது எதிரியை வெறுப்பதில்லை. தேசத் தலைவர்கள் சண்டையைத் தொடங்கப் பின்வாங்குகிறுர்கள். நியாயம் புலனுகிறது; உண்மையான இரக்கம் உண்டாகிறது.

"நேசபாவம், எதிர்பார்க்கு முன்னரே நிச்சயம் ஏற்படலாம். நான் இப்படிச் சொல்வதன் காரணமென்ன? நான் இறந்துவிடுவேனென்று இப்படிச் சொல்லுகிறேனு? கடலில் தோன்றி என் கண்ணில் படும் வெள்ளிச்சம் என் பார்வையைப் போக்கிவிட்டதா? ஆனல், ஒன்று நிச்சயமாக நம்புகிறேன். இவ் வுலகம் அருமையான வார்த்தைகளை அறிந்தனுபவிக்க ஆரம்பித்துவிட்டது. அம் மொழிகள் எவை? 'பிறரை நேசி' என்ற பொன் மொழிகள். இவை மனிதன் சொன்னவையாயினும் சரி, கடவுள் சொன்னவையாயினும் சரி—அதைப் பற்றிக் கவலையில்லை.

"எப்பக்கமும் சமய இயக்கத்தின் அறிகுறிகளைக் காண்கிறோம்; அதனைப் பலர் நடத்த முயலுகிறுர்கள்; அது மனிதனது நன்மையை நாடும். மனிதனுக்கு ஆரம்ப சூரத்தனம் இயல்பு. பித்தனுய் ஆவேசத்தோடு அன்பைப் பிடிப்பான்.

அது உடனே நடக்கும் காரியமன்று; எளிதன்று. தப்பெண்ணங்கள் பல ஏற்படலாம். நாம் வெறுப்பில் வெகு நாள் பழகிவிட்டோம். நமக்கு அன்புநெறி போதிப்போரும் அதிலேயே பழகினர். சகோதரத்துவம் என்னும் இப் பெரிய சட்டம் ஒருநாள் அமுலுக்கு வரும். அன்பு நெறி யண்டைய வேண்டுமென்று உறுதியான விருப்பங்கொண்ட உடனே, அந்நெறி அமுலுக்கு வர ஆரம்பித்துவிட்டதெனத் தெளிந்தேன்.

ஜூன் 1, 1863. **ஆ. தூமாஸ்.''**

தூமாஸின் கடிதத்திற்கும் ஸோலாவின் சொற்பொழிவுக்கும் எவ்வளவு மாறுபாடு! முதலில் வெளிப்படையாகத் தோன்றுவதைக் கவனிப்போம். ஸோலா இளைஞரின் ஆதரவை விரும்புகிறார்; அவர்களைப் புகழ்ந்து பேசுகிறார். தூமாஸ் அவ்வாறு செய்யவில்லை; இனி வருங்காலம் இளைஞர்களைப் பொறுத்ததெனச் சொல்லவில்லை. ஆனால், தூமாஸ் அவர்களுடைய பிழைகளைக் காட்டுகிறார். மாறுபாடு இதனோடு நிற்கவில்லை. ஸோலா மக்களைச் செல்ல வேண்டிய வழியில் நிறுத்த விரும்புகிறார். மக்கள் தெரிந்து கொண்டிருப்பதுதான் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதென்கிறார்; அவர்கள் செய்யும் வேலைதான் செய்ய வேண்டிய செய்கை என்கிறார். தூமாஸ் சொல்வதென்ன? மக்கள் அறிய வேண்டியதை அறியவில்லை என்கிறார்; வாழவேண்டிய விதத்தில் வாழவில்லை என்கிறார்.

விஞ்ஞானமோ, சமயமோ, அல்லது மனிதனுக்குப் புறம்பான வேறு சக்தியோ மனிதனை நல்வழிப்படுத்துமென்றும், மனிதன் ஒருவித முயற்சியும் செய்யவேண்டுவதில்லையென்றும், அவன் செய்த வேலைகளைச் செய்து வந்தால் போதுமென்றும் நினைப்பது தவறு. இவ் வழிகளால் மனிதன் நல்வழிப்படுவது அருமை. இதில்தான் முக்கியமாக, ஸோலா தவறான எண்ணங் கொள்கிறார்.

சமூக நலத்திற்கு நாமே காரணமென்று நினைப்பது நல்லது. எல்லோரிடத்தும் அன்பு வைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். எல்லோரையும் கொல்லப் பழக

வேண்டாம். நம் முயற்சியே நமக்கு நலந்தருமென்னும் எண்ணம் நமக்கு நல்ல தூண்டுகோலாகும். இதைத்தான் தூமாஸ் வற்புறுத்துகிறார்.

தூமாஸ் ஒரு கட்சியையும் சேர்ந்தவரல்லர்; ஒரு சமயத்தையும் சேர்ந்தவரல்லர். முற்காலத்து மூட நம்பிக்கைகளிலும் தற்காலத்து மூட நம்பிக்கைகளிலும், அவர் மனம் செல்லாது. அதனால்தான் அறிவு கலங்காமல் பார்க்கவும் சிந்திக்கவும் முடிகிறது; இனி வரும் காரியங்களையும் அறிய முடிகிறது. அவர் ஒரு ரிஷி போல, வரும் காரியங்களை வகுக்கிறார். இதற்கு அவர் காட்டில் வசிக்க வேண்டுமென்பதில்லை; புண்ணிய நதிக்கரையில் நிற்க வேண்டுவதில்லை; அவருடைய வாக்குக்களை, தோல் போர்த்துத்தொழுது நின்றவரே சொல்லவேண்டு மென்பதில்லை. சீன் நதிக்கரையிலுள்ள மாதச் சஞ்சிகையிலும் அவரது திருவாக்கு வெளிவரலாம்.

தூமாஸின் தூய மொழிகள் வருவதைக் காட்டும் தேவ வாக்கு. ஏன்? 1. எல்லாத் தேவ வாக்கையும் போல உலக அனுபவத்திற்கு எதிர்த்துச் செல்லுகிறது. 2. கேட்பவர்கள் காரணங் காணாது அதன் உண்மையை அறிகிறார்கள். 3. சொல்லும் வார்த்தை பலிக்கிறது.

தூமாஸ் சொல்வன இரண்டு: மக்கள் துன்புற்றுக் கடைசியாக அன்பு வழியை நாடுவர். இரண்டு: நாம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்னரே அவ் வழியில் நிற்பர். அன்பு வழியை நாடுவதையும், அதை விரைவில் நாடுவதையும் சிலர் சந்தேகிக்கலாம்; ஆனால், அவ்வழி நிற்பின், சண்டை, துன்பம், கேடு யாவும் அறவே ஒழியுமென்பது நிச்சயம்.

ஒரு சந்தேகம் தோன்றலாம்; தூமாஸை ஒரு கேள்வி கேட்கலாம்: 'அன்புவழி இன்பந் தருவது உண்மை. அந்த உபதேசத்தைக் கிறிஸ்து சொல்லியிருக்கிறார். கடவுளையும் பிறரையும் நேசி என்றார். இதனையே மோஸஸ் மூவாயிர வருஷத்திற்கு முன்னால் சொல்லி யிருக்கிறார். அன்பு காட்டுதல் மனிதனுக்குக் கஷ்டமில்லை யானால், அது அவனுக் கியல்பானால், ஏன் இவ்வளவு காலம் அவ் வழியை வாழ்க்கையில் அனுசரிக்கவில்லை? இவ்வழகிய மனப்பான்மை வராமல் தடுப்பது எது?' 'ஒருவரை

யொருவர் நேசியுங்கள்' என்று சொன்னல் போதுமா? மூவாயிர வருஷங்கள் சொல்லி விட்டோமே! சமய மேடைகளிலும், பிற இடங்களிலும் பன்னிப் பன்னிச் சொல்லுகிருேமே? நேசிப்பதற்குப் பதிலாக ஒருவரை யொருவர் அழிப்பதே தொழிலாகக் கொண்ட பல நூற்ருண்டுகள் சென்றன. தன் நன்மையை நாடி, தன் குடும்ப நலன் தேடி, தன் தேச நலங் கருதிப் பிறரைத் துன்புறுத்தாது யாவருக்கும் உதவி செய்தால்—சுயநலத்திற்குப் பதிலாக அன்பு மனதில் குடிகொண்டால்—தனி மனிதனின் நலங்கருதாது பொதுமக்களின் நன்மையைக் கவனித்தால் —தன்னை நேசிப்பது போலப் பிறரையும் நேசித்தால்—கடைசியாக, தனக்குச் செய்துகொள்ள விரும்பாததைப் பிறருக்கும் செய்யாம லிருந்தால், நிச்சயமாக ஒவ்வொரு மனிதனும் இன்ப மடைவான்; சமூகம், கஷ்டமும் கவலையும் நீங்கிச் சுகம் பெறும்.

ஏழைகளின் நிலத்தையும் உழைப்பையும் பிடுங்கிக் கொண்டால், அவர்கள் சண்டையிட்டுத் துன்புறுத்தித் திரும்பப் பிடுங்கிக்கொள்வது நிச்சயம். கஷ்டப்படுவோர் கலகஞ் செய்வர்; கொலை செய்தும் கொடுமை செய்தும் இழந்ததைப் பெற முயல்வர். தேசங்கள் சண்டையிட்டால், எவ்வளவு அழிவென்பது நமக்கு நன்கு தெரியும். பலர் இறப்பர்; பல பொருள் அழியும்; துயர் பெருகும். இன்றிருக்கும் நிலை இன்னும் பத்து வருஷமிருந்தால், சமூகம் சீர்குலைந்து விடும். கண் திறந்து பார்த்தால், மக்கள் படுகுழியை நோக்கிச் செல்வது தெரியும். கிறிஸ்து சொல்லியது பலித்துவிட்டது. மக்களுக்குக் கேளாக் காதும், காணுக் கண்ணும், அறியா அறிவும் உண்டு.

மக்கள், தங்கள் வாழ்க்கையைத் திருத்துவதில்லை; அழிவு தரும் வேலையை நிறுத்துவதில்லை. சமயத்திலுள்ள அன்பு விதியை ஏற்றுக் கொள்ளாதவர்களும்கூட, ஒழுக்கத்திற்கு அன்பு வேண்டுமென்பர். நமக்குச் செய்து கொள்ளக் கூடாததைப் பிறருக்குச் செய்யக் கூடாது. ஆனல், இக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை. இவ்விதி கடவுள் தந்தது. மனச்சாட்சிக்குப் பொருத்தமானது. நலந் தரும் விதியை விலக்குவதற்கு, தக்க காரணங்கள் இருக்க வேண்டும். அன்பு, வாழ்க்கைக்குப் பொருந்தா தென்பது மக்கள் கருத்தா? அவ்வாருனல்,

ஆயிரக்கணக்கான வருஷங்களாக, கிட்டாத ஒன்றுக்கு மனக்கோட்டை கட்டி வந்தோமா? அன்பு வாழ்க்கையை வெட்டென மறக்க வேண்டுமா? இனியேனும் கவனிக்க வேண்டும். மனிதன் திண்டாடுகிறான். அன்பு வழியைத் தள்ளவும் முடியவில்லை; கொள்ளவும் தைரியமில்லை. பல்லாண்டுகளாக மனிதன் இச் சங்கடத்தில் இருப்பதேன்? மனிதருக்கு அன்பு வழியில் விருப்ப மில்லாமலில்லை; விரும்பியதைச் செய்யச் சக்தி யில்லை யென்பதுமில்லை; கடவுளையும் மனச்சாட்சியையும் புறக்கணிக்கிறார்களென்பதில்லை. ஆனால், அவர்கள் ஸோலா சொன்னபடி செய்கிறார்கள். வேலை! வேலை! என்றும் வேலை! முன்னர் ஆரம்பித்த வேலை. வழக்கமாகச் செய்யும் வேலை. அவைகளை ஆராய நேரமெங்கே? அவை எப்படி யிருக்க வேண்டுமென்று முடிவு செய்ய ஓய்வெங்கே? மனிதன் திருந்துவது எண்ணத்தால். மனிதன் மனம் மாறுபடவும், செய்கை அதன்பின் செல்லுகிறது. படகைத் திருப்புவது சுக்கான்; செயலைத் திருப்புவது எண்ணம்.

ஏசு முதலில் உபதேசம் செய்தபோது, 'ஒருவரையொருவர் நேசியுங்கள்' என்று சொல்லவில்லை. (அம்மொழியை அறியச் சக்தியுள்ள தம் சிஷ்யர்களுக்கே அதைச் சொன்னார்.) ஜான் சொன்னதையே ஏசுவும் முதலில் சொன்னார். 'செய்த தவற்றை எண்ணி வருந்து; எண்ணத்தில் மாறுபாடில்லையானால், மனிதன் அழிவது திண்ணம்' என்றார். தன் நலம் தேடுவதா வாழ்க்கையின் தத்துவம்? குடும்ப நலமும் தேச நலமும் பிறருக்குத் தொந்தரவில்லாமல் பெற முடியுமா? ஏசு போதனை செய்கிறார்: 'உன் வாழ்க்கையின் பொருளைத் தெரிந்துகொள். உன்னை இவ் வுலகுக்கு அனுப்பியவனின் எண்ணத்தை நிறைவேற்று. உன் காரியத்தைச் செய்ய நீ வரவில்லை; அவன் காரியத்தைச் செய்ய வந்தாய். வானுலகத்தை மண்ணுலகத்தில் நிறுவ வேண்டும்'.

தவற்றுக்கு வருந்தவில்லை யானல் அழிவாய் என்று சொன்னார் ஏசு. 1800 வருஷங்களுக்கு முன்னே கூறினார். இன்றும் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார். மனத்தில் மாறுபாடு ஏற்பட வேண்டும். நம் முரண்பட்ட வாழ்க்கையும் அல்லலும், அம் மொழிக்குச் செவிசாய்க்காததனாலேயே ஏற்பட்டன. தவற்றுக்கு வருந்து

வதா அல்லது அழிவதா? இரண்டி லொன்றுதான். இன்றும் அதில் ஒன்றைக் கொள்ளலாம்; கொள்ள வேண்டுவது முன்னிலும் இப்போது மிக்க அவசியமா யிருக்கிறது. சுயநலம், குடும்பநலம், தேசநலங் கருதி, அதனையே கருதும் பிறரோடும், ஏனைய குடும்பத்தோடும், அன்னிய தேசத்தோடும் முரண்பட்டுச் சண்டை யிடுவது நன்மை யென்று பழைய காலத்திலும் நினைக்க இடமில்லை; இப்போது, அது தவறென்பது வெளிப்படை. சிறிது சிந்தித்தாலும் இது தெரியவரும். நம்மையும் உலகத்தையும் கவனியுங்கள். யாரேனும் என்னிடம் யோசனை கேட்க வந்தால், நான் சொல்லப்போவ தென்ன? 'வேலையை நிறுத்துங்கள். சிறிது நேரம் நிதானியுங்கள். சுற்றிப் பாருங்கள். உங்களையே உற்று நோக்குங்கள். இருக்கும் நிலையை அறிந்து, இருக்கவேண்டிய நிலையைச் சிந்தியுங்கள். லட்சியமே வேண்டுவது.'

அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதில் பயனில்லை யென்றும், பெரியதோர் சக்தியை, நம்பவேண்டாமென்றும், லட்சியம் வேண்டுவதில்லை யென்றும் ஸோலா கூறுவார். லட்சியம் என்னும் சொல்லால் அவர் சமயக் குப்பையிலுள்ள மூவரையோ, கோயிலையோ, போப்பையே குறித்திருக்கலாம்; அல்லது சொல்ல முடியாத உலகச் சக்திகளைக் குறித்திருக்கலாம். அவ்வாறாயின், அவர் சொல்வதைக் கேட்கவேண்டியதுதான். ஆனல், லட்சியம் வானிலுமில்லை; விளங்காதது மில்லை. அது மனிதன் இயல்பாக ஏற்றுக் கொள்ளக் கூடியது; நிச்சயமாகத் தெரிந்துகொள்ளக்கூடியது.

கோட்டில் நேர்க்கோடு லட்சியம்; விஞ்ஞானத்தில் உண்மை லட்சியம்; ஒழுக்கத்தில் நற்குணமே லட்சியம்; ஆயினும், நேர்க்கோடும், முழு உண்மையும், பூரண நற்குணங்களும் இருந்ததே யில்லை. ஆயினும், மற்ற அறிவைவிட லட்சியம் மக்களுக்கு இயல்பானது; நன்கு தெரிந்தது; நன்கு விளங்கக் கூடியது. நிச்சயமாகவும் உண்மையாகவும் அறியக்கூடியது லட்சியம் ஒன்றே.

இருப்பது உண்மை யென்றும், உண்மை இருக்குமென்றும் சொல்வார்கள். அது சரியில்லை. நமக்குத் தெரிந்த மெய்யான உண்மை என்றும் இருந்ததில்லை. லட்சி

யம் ஒன்றே நமக்கு நிச்சயமாகத் தெரியும். அது என்றும் இருந்ததில்லை. லட்சியம் நமக்கு நன்கு தெரிவதற்கு நாம் அதற்கு நன்றி செலுத்தவேண்டும். அதுவே நம்மை வாழ்க்கையில் நடத்தக் கூடியது. தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் அதுவே உதவுவது. பதினெட்டு நூற்றாண்டுகளாகக் கிறிஸ்துவர்களுக்கு முன்னே லட்சியம் நிலவுகிறது. அதன் உதவியை மறுத்தாலும் அதனைப் பார்க்காமலிருக்க முடியாது; அது ஒளிவிட்டு விளங்குகிறது. பார்க்காமலிருப்பது கஷ்டமாகையால், பார்க்காம லிருக்க மக்கள் மிக்க கஷ்டமான முயற்சிகள் செய்கிறார்கள்; கண்ணையிறுக மூடிக்கொள்ளுகிறார்கள். நிச்சயமாகக் கரை சேர வேண்டுமானால், திசைகாட்டுங் கருவியை விட்டெறிந்து விடுங்களென்று சொல்லுகிறார்கள்! இம்மாதிரியே கிறிஸ்துவர்களும் சிதறுண்டு பல திசைகளில் ஓட்டம் பிடிக்கிறார்கள். நின்று பேச நேரமில்லை; இன்று, மனிதன் கொஞ்சம் வேலையை நிறுத்திப் பகுத்தறிவைக் கலந்து, நெஞ்சில் கையை வைத்து, உலகநிலையைக் கவனித்தால், அவன் வாழ்க்கை முழுதும், அதில் ஒவ்வொரு செயலும், அறிவுக்கு முரணானதென்றும், மனச்சாட்சிக்கு முரணானதென்றும் நன்கு தெரியும். ஒவ்வொரு மனிதனையும் தனித் தனியாகக் கேளுங்கள்: 'நான் நீதியை அனுசரித்து நடக்கிறேன்; கிறிஸ்துமதக் கொள்கைகளை அனுசரிக்கிறேன்' என்பான். இது கபடமான வார்த்தையில்லை. அவரவரின் மனச்சாட்சிப்படி நீதியாக வாழ வேண்டும். ஆனால், அவர்களின் செய்கையைப் பாருங்கள்; மிருகங்களைப்போல் நடக்கிறார்கள். ஆகையால், கிறிஸ்துவ உலகத்தில் பெரும்பான்மையோர் நினைப்பதொன்று; நடப்பதொன்று. பழைய செயல்களே தொடருகின்றன. மனம் திருந்த வழி கண்டும், செய்கை திருந்தவில்லை. ஏன்? நமக்கு யோசிக்க நேரமில்லை.

IV

கிறிஸ்துவக் கொள்கைகள் பரவுமுன், பிற கொள்கைகள் நிலவியபோது, அடிமைத்தன மிருந்தது; மனிதன் மனிதனைத் துன்புறுத்தினான்; தண்டனைச் சட்டங்கள் பல இருந்தன; போர்களுக்கோ எல்லை யில்லை. இக்

காலத்தில் அவைகளுக்கு நியாயமில்லை. சீர்கேடான மத வாழ்க்கையே வாழ்கிறோம்.

வாழ்க்கையைத் திருத்த வேண்டுமானால், மனதை முதலில் திருத்த வேண்டும். மனதைத் திருத்தச் சிறிது தயங்கிச் சிந்திக்க வேண்டும். மலை யுச்சியில் பாடிக் கொண்டே ஓடுகிறவனுடைய பாட்டு, பள்ளம் வந்ததும் நின்றுவிடும். பாட்டும் ஓட்டமும் நிற்கவில்லையானால், அவனது கதி யென்ன ?

வேலையை நிறுத்திச் சற்று யோசியுங்கள். வாழ்க்கையைத் திருத்தும் அவசியம் தோன்றும். மனதுக்கு உவந்த, அறிவுக்கேற்ற எண்ணங்கள் உதிக்கும்.

விருந்து, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தயார். சாப்பிடுவாரில்லை. எல்லோருக்கும் வேலை சரியாக இருக்கிறது. அவர் நிலம் வாங்கினார்; இவர் கல்யாணம் செய்து கொண்டார்; இன்னொருவர் மாட்டை வண்டியில் பூட்டிப் பார்க்கிறார்; மற்றொருவர் யந்திர சாலை கட்டுகிறார்; வேறொருவர் பாதிரியாக மதம் பரப்புகிறார்; இன்னுமொருவருக்குச் சட்டசபையிலும், பாங்கிகளிலும் வேலை; வேறு சிலர் புத்தகமெழுதுகிறார்கள். இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னர், ஏசு முதலில் சொல்லியதைக் கேட்க ஒருவருக்கும் நேரமில்லை; 'சுற்றிப் பார். செய்த வேலையால் பயனேற்பட்டதாவென அறி; உன்னைப் படைத்தது எதற்கு எனச் சிந்தி.' இறைவன் என்பு தோலோடு என் உள்ளத்தில் அன்பு வைத்தார். மனதில் அறிவு வைத்தார். பிறவிக்கியல்பாயிற்று அன்பு. உடலும் உயிரும் சேர்ந்தது அன்பை விரும்பியே. இறைவன் அன்பைப் படைத்தது என்னை ஏமாற்றுவதற்கா? பொருள், பெண்டிர், மக்கள், குலமென்பதே வாழ்க்கையின் பயனாக நாடுகிறேன். எனக்கென வாழ்கிறேன். என் நன்மைக்காகப் பிறரைக் கொல்லவும் துன்புறுத்தவும் உரிமை யுண்டென நினைக்கிறேன். ஆயினும் தன்னலம், குடும்பநலம், தேசநலம் அடையமுடியவில்லை. சுயநலத்தால், பின்னிக்கிடந்த பேரன்பு அறுபடுகிறது. அறிவு மங்குகிறது. கஷ்டமும் கவலையும் என்னைப் பீடிக்கின்றன.

நான் பிறந்தது என்னிஷ்டத்தாலன்று. என்னைப் படைத்தவன், அன்பையும் அறிவையும் ஏன் எனக்குத்

தந்தான்? அவை என்னை நல்வழியில் நடத்துமென்று அல்லவா?

தன்னலம் அறவேண்டும்; செய்த தவற்றுக்கு வருந்த வேண்டும். பின்னர், அன்பு இயல்பாகும். உப்புத் தண்ணீரைக் கலக்குவதை நிறுத்தினால் உப்புத் துண்டுகள் தோன்றுவதுபோல, பிறருக்கு அன்பு காட்ட ஆரம்பித்ததும், கிறிஸ்துவ வாழ்க்கை தோன்றும்.

நல்வழி அடையவும், மனச்சாட்சிக்கு ஏற்ற வாழ்க்கை நடத்தவும் முயற்சி வேண்டுமென்பதில்லை. நடக்கும் பிற முயற்சியில் தவக்கமேற்பட்டாலே போதும். மக்கள் செய்யும் பிற வேலைகளில் நூற்றிலொருபங்கு செய்தாலே போதும். ஏனெனில், இப்போது செய்யும் வேலைகள் அனேகமாக மனச்சாட்சிக்கு விரோதமாகவேயிருக்கின்றன. மனச்சாட்சியைத் தெரிந்துகொள்ளட்டும்; அதனை தெளிவாகச் சொல்லட்டும்; அதனை எங்கும் பரப்பட்டும்; அவ்வேலைகளைச் செயற்கையிலும் கொண்டு வரட்டும். அங்ஙனமாயின், தூமாஸும் இதர தீர்க்கதரிசிகளும் சொன்னபடி நடைபெறும்; நன்றே வளரும்; அதுவும் இன்றே தொடங்கும். இதில் கஷ்டமில்லை; சந்தேகமில்லை. ஏசுநாதர் சொன்ன நல்வாக்கு வீண் போகாது. 'சொர்க்கத்தைத் தேடுங்கள்; மற்றவை தாமே வந்து உங்களை யடையும்.'

ஆகஸ்டு 9, 1893.

முதல் படி

I

ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க நினைக்கிறான். அவன் வேலை செய்வதாகப் பாவனை செய்பவனல்ல; ஆகையால், அவனுடைய வேலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் முறையாகத் தொடர்ந்து நடைபெறும். முதலில் செய்ய வேண்டிய வேலையைக் கடைசிக்குத் தள்ளிவிட்டாலும், அல்லது நடுவில் முக்கியமான பாகத்தைச் செய்யாது விட்டாலும், அவன் தன் காரியத்தை உண்மையாகச் செய்ய நினைக்க வில்லை, பாவனை செய்கிறான் என்று கொள்ளலாம். தேகப்பிரயாசையா யிருப்பினும் சரி, பிற வேலையா யிருப்பினும் சரி, இது மாற்ற முடியாத உண்மை. மாவைப் பிசைந்து, அடுப்புச் சாம்பலை ஒதுக்கி, தீயை மூட்டினால்தானே, ரொட்டியைக் காணலாம்? அது போலவே, செம்மையான வாழ்க்கை நடத்த விரும்புகிறவனும், நற்குணங்களை ஒன்றன்பின் ஒன்றாய் முறையாக அடைய முயல வேண்டும்.

நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு இந்தக் கருத்து மிக அவசியமானது. ரொட்டி சுடுவது போன்ற வேலையில், ஒருவன் உண்மையாகவே வேலை செய்கிறானா அல்லது ஏமாற்றுகிறானா என்பதைச் சுட்டு வைத்த ரொட்டியால் சொல்லி விடலாம். நல்ல வாழ்க்கையைப் பற்றி அப்படித் தெரிந்து கொள்ள முடியாது. நாடகத்திலே, மாவு பிசைவதாகவும், அடுப்பு மூட்டுவதாகவும் பாவனை செய்வார்கள்; அதில் ரொட்டி வராது. அங்கே அவர்கள் உண்மையாக ரொட்டி சுட நினைக்கவில்லை; பாவனைதான். ரொட்டி வராததால் பாவனைதானென்று தெரிந்துகொள்ளுகிறோம். ஒருவன் நல்ல வாழ்க்கை வாழ்வதாகப் பாவனை செய்கிறான். அது பாவனையா அல்லது உண்மையாகவே அவன் நல்ல வாழ்க்கை வாழ முயலுகிறானா என்று தெரிவதில்லை. நல்ல வாழ்க்கையினால் விளையும் பயன், சுற்றி யிருப்பவர்களுக்கு எப்போதும் புலப்படுவதில்லை. சில

சமயங்களில், உண்மை வாழ்க்கையின் பயன் கெடுதலாக வும் தெரிகிறது. ஒருவன் பெற்ற மரியாதையாலும், அவனது செயலால் அவன் காலத்து மக்கள் அடைந்த நன்மையாலுமே, அவன் நல்ல வாழ்க்கை நடத்தி விட்டா னென்று சொல்லிவிட முடியாது.

ஆகையால், வாழ்க்கையில், பொய்யிலிருந்து மெய் யைப் பிரிக்க, ஒருவன் குணங்கள் எந்த முறையில் அமை கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். நாம் இதைக் கவனித்தால், பிறருடைய போலி வாழ்வையும் உண்மை வாழ்வையும் தெரிந்துகொள்வதைவிட, நம் வாழ்க்கையே உண்மை வாழ்க்கையா என்பதை அறியலாம்; நாம் பிறரை ஏமாற்றுவதும் நிற்கும்; நம்மையே நாம் ஏமாற் றிக் கொள்வதும் நீங்கும்.

நற்குணங்களைச் சரியான முறையிலே அடைந்தால் தான், நல்வாழ்க்கையை அடைய முடியும். அதனால்தான் மக்களுக்கு உபதேசிக்க வந்த பெரியோர், இக்குணங்களை முறைப்படுத்திச் சொல்லி யிருக்கிறார்கள்.

சீன தேசத்து அறிவாளிகள், ஒழுக்க நெறியைச் சொர்க்கத்திற்குப் போவதற்குரிய ஏணிக்கு ஒப்பிடுவார் கள். அதில் மேலே ஏறவேண்டுமானால், முதல் படியி லிருந்து ஆரம்பிக்க வேண்டும். பிராமண மதம், புத்த மதம், கன்பூஷியஸ் மதம் முதலியவைகளில் சொல்லியிருப் பதே போல், கிரீஸ் தேசத்து மகான்களும் குணங்களை வரிசைப் படுத்தி யிருக்கிறார்கள். கீழ்ப் படிகளைத் தாண் டாமல், மேற்படிகளுக்குப் போக முடியாது. நன்னெறி யிலே முறையாகச் செல்ல வேண்டியது அவசியமென்று மக்களுக்கு உபதேசிக்க வந்தவர்கள், இதைச் சொல்லி யிருக்கிறார்கள்; இவர்களில் சிலர் மத சம்பந்தப்பட்டவர் கள்; சிலர் மத சம்பந்த மில்லாதவர்கள். இவ்வரிசை இயற்கையாகவே அமைந்திருக்கிறது. ஆகையால் அதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

கோயில் கிறிஸ்துவ சம்பிரதாயம் பரவப் பரவ, குண வரிசையின் அவசியம் மறைந்தது. துறவிகளும், தவசி களும் இவ்வரிசையைக் கைவிட வில்லை. இது அதிசய மாகத் தோன்றலாம். தாழ்ந்த படியிலுள்ள குணங்களை அடையாமலே மேலே யுள்ள குணங்களை அடைய முடியு

மென்றும், தீய குணங்களுடன் உயர்ந்த குணங்களும் கலந்திருக்க முடியு மென்றும், உலகத்திலுழலும் கிறிஸ்துவர்கள் கருதுகிறார்கள். இதனால் உலகத்தில் பல மக்களுக்கு நல் வாழ்க்கை எது என்பதே புலப்படவில்லை.

II

நல் வாழ்க்கை நடத்துவதற்கு, நற் குணங்களை முறையாகப் பெறவேண்டியது அவசியம் என்பதை இக்காலத்து மக்கள் உணருவதில்லை. அதனால், நல் வாழ்க்கை எது என்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். இந்த நிலை வந்ததற்குக் காரணம் என்ன?

பிற சமயங்களுக்குப் பதிலாகக் கிறிஸ்து மதம் வந்தபோது, அச் சமயங்களின் ஒழுக்கத்தைவிட உயர்ந்த ஒழுக்கத்தைக் கிறிஸ்துமதம் நிலைநாட்டியது. அதனுடன், பிற சமயங்கள் சொல்லியது போலவே, நற்குணத்தை முறையாகப் பெறவேண்டியது அவசியமென்றும் போதித்தது.

பிளாட்டோ என்னும் பெரியார் முதலில் தன்னடக்கத்தை வைத்தார். பின்னர், அஞ்சாமை, அறிவு, நீதி. கிறிஸ்தவர்கள் அவாவறுத்தலை முதலில் வைத்தார்கள்; பிறகுதான், கடவுள் பக்தியும் அன்பும்.

கிறிஸ்துவ மதத்தை உண்மையாக ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்க முயன்றவர்கள் முதலில் காமக்குரோதங்களை விடுத்தனர். இதுவே கிறிஸ்துவர்களின் குண முறையாகக் கொண்டனர். அவாவறுத்தலிலே, பிற சமயத்தவர் கொண்ட தன்னடக்கமும் அடங்கும்.

பிற சமயத்தவர் சொன்ன உபதேசங்களையே கிறிஸ்துவ மதம் திருப்பிச் சொன்னதாகக் கருதிவிடலாகாது. உயர்ந்த கிறிஸ்துவ மதத்தைப் பிற சமயங்களின் நிலைக்குத் தாழ்த்தி விட்டதாக என்னைக் குறை கூறலாகாது. அவ்வாறு இறை கூறுதல் நியாயமன்று. கிறிஸ்துவ மதமே உயர்ந்த மதமென்று நான் கருதுகிறேன். அதற்கும் பிற மதங்களுக்கும் வேறுபாடுண்டு. கிறிஸ்துவ மதம் பிற மதங்களினின்றும் வேறுபட்டதாலும், அவைகளைவிட உயர்ந்ததாலுமே, அவைகளுக்குப் பதிலாக இது எழுந்தது. ஆனால்,

கிறிஸ்துவ மதமும், பிற மதங்களும், எல்லாமே சத்தியத்தையும் ஆனந்தத்தையும் நாடி யாவரையும் கூட்டிச் செல்லுகின்றன. இவை ஒத்திருக்கவே, இவற்றை அடையும் வழிகளும் ஒத்திருக்கும். ஆகையால், கிறிஸ்துவனுக்கும் பிற சமயத்தானுக்கும் முதல் படி ஒன்றுகத்தானே இருக்கவேண்டும்?

கிறிஸ்துவர் கொள்கைக்கும் பிற சமயத்தவர் கொள்கைக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. பிற சமயத்தவர், பூரணத்தை அடையலா மென்பர். கிறிஸ்துவருக்கு, எல்லையற்ற பூரணத்தை இடையறாது நாடுவதே கொள்கை. பிற சமயத்தார், பூரணத்திற்கு உதாரணம் காட்டுவர். எல்லை கடந்த பூரணத்தைத்தான் கிறிஸ்துவர்கள் பூரணமாகக் கொள்வர். பிளாட்டோ, பூரணத்துக்கு ஓர் உதாரணமாக நீதியைச் சொல்வார்; அன்பை அளவில்லாது பெருக்குவது கிறிஸ்துவின் உதாரணம்: 'எல்லா நிறைவுக்கும் உறைவிடமான தெய்வத் தந்தை போல, நீங்களும் நிறைவு பெறுங்கள்.' இதுவே கிறிஸ்துவருக்கும் பிற மதத்தாருக்கு முள்ள வித்தியாசம். இதனுல், குணங்களுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு, இரு திறத்தாரிடத்தும் வேறுபடுகிறது. பிற சமயத்தார் உன்னத குணத்தை அடைய முடியு மென்பர்; அதனை நாடி எவ்வளவு படி ஏறுகிறேமோ அவ்வளவுக் கவ்வளவு உயர்வடைகிறேம். உயர்ந்த படி ஏறினுல் உயர்வு அதிகம். பிற சமயத்தார்களின் கொள்கைப்படி, மக்களை ஒழுங்கற்றவர், சிறிது ஒழுக்கமுடையவர், நிறைந்த ஒழுக்கமுடையவ ரென்று பிரிக்கலாம். கிறிஸ்துவரின் கொள்கைப்படி இப்படிப் பிரிக்க முடியாது; இதில் உயர்ந்த நிலை தாழ்ந்த நிலையில்லை; எல்லையற்ற பூரணத்தைக் காட்டும் கிறிஸ்துவ சமயத்தில் எல்லாப் படிகளும் ஒரே நிலைதான்.

பிற சமயங்களில், உயர் குணமாகிய லட்சியத்தை நோக்கி எவ்வளவு படி ஏறுகிறேமோ அவ்வளவே உயர்வு. ஆனுல், கிறிஸ்துவ மதத்திலே உயர்வானது, செல்லும் விதத்திலிருக்கிறது; விரைவாகச் செல்லுகிறேமா மெதுவாகச் செல்லுகிறேமா என்று பார்க்க வேண்டும். பிற சமயங்களில் சமரச நோக்கமுள்ளவர் அதில்லாதவரைவிட மேலானவர்; அதனுடன் அஞ்சாமையு மிருந்தால், அதைவிட மேல்; அவைகளுடன் நீதியும் சேர்ந்திருந்தால்

இன்னும் உயர்வு. ஆனால், கிறிஸ்துவரில் ஒருவன் மற்றவனைவிட மேலல்ல; எல்லையற்ற பூரணத்தை நாடுகிற விரைவுக்குத் தகுந்தபடியே உயர்வு தாழ்வு; எவ்வளவு நற்குணங்களை ஒருவன் பெற்றானென்பதைக் கவனிக்க வேண்டியதில்லை. ஆகையால், நல்ல குணங்கள் சிலவற்றைப் பெற்று முன்நோக்கிச் செல்லாதவனாகிய வெறும் சனாதனியைவிடச் சிறையில் தன் குற்றத்திற்கு வருந்தும் கள்வன் மேல்; நல் வழியில் கள்வனின் மனம் ஈடுபட்டு விரைந்து செல்லுகிறது.

இதுதான் பிற சமயக் கொள்கைக்கும் கிறிஸ்துவக் கொள்கைக்கும் வித்தியாசம். தன்னடக்கமும் அஞ்சாமையும் பிற சமயங்களில் மேல்பதவியைத் தரும். ஆனால், கிறிஸ்துவ சமயத்தில் அது பெருமை யில்லை. இவ்விஷயத்தில் இந்த உபதேசங்களும் வேறுபடும். ஆனால், கீழ்ப்படிகளைத் தாண்டாமல் பூரணத்தை அடையமுடியாதென்பதை இரு உபதேசங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. இதில் வித்தியாசமிருக்க முடியாது.

பிற சமயத்தாரைப் போலவே கிறிஸ்துவனும், தான் பூரண நிலை யடைய முதல் படியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மற்றவர்கள் ஆரம்பிக்கிற கீழ்ப் படியிலேயே ஆரம்பிக்க வேண்டும். தன்னடக்கம், அதாவது, ஐம் பொறிகளை அடக்கல், பிற சமயத்தவருக்கு ஒரு நல்ல இயல்பு. கிறிஸ்துவனுக்கு அது அவாவறுத்தலில் ஒரு பகுதி; பூரண மடைவதில் அவாவறுத்தல் ஒரு நிலை. ஆகையால், உண்மைக் கிறிஸ்துவ மதத்திலும், பிற சமயத்தவர் கொண்ட நெறியிலேதான் செல்ல வேண்டும்.

ஆனால், இறைவனுடைய பூரண நிலையை அடைய, கிறிஸ்து மதம் வழியென்று பலர் தெரிந்து கொள்வதில்லை; பெரும்பாலார் மோட்சமடைய வழியென்றே கருதுகிறார்கள். கிரேக்கரும் கத்தோலிக்க மதத்தினரும் கோயில் சம்பிரதாயத்தின் மூலமாக இறைவனருள் பெற்றுப் பாவத்திலிருந்து விடுதலை யடையலாம் எனக் கருதுகிறார்கள். மற்றவர்கள் கடவுள் நம்மை நரகத்திலிருந்து மீட்பதாகக் கருதுவார்கள்.

இந்த எண்ணந்தான் மக்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் வைத்த உண்மைஆர்வத்தைக் கெடுத்து விட்டது.

கோயிற்காரர்கள் தாங்கள் சொல்லும் வழி கிறிஸ்து காட்டிய வழிக்கு முரணில்லே யென்பார்கள்; அதற்கு ஒத்தாசையாகு மென்பார்கள். ஆயினும், சில விஷயங்களிலிருந்து சில முடிவுகள் வெளியாகும். அவைகளைத் தடுக்க முடியாது. கோயில் மூலமாகக் கிடைக்கும் அருளாலே ஒருவன் காப்பாற்றப் படுவானென்று நினைத்தாலும், கிறிஸ்து தம்மை யழித்துக் கொண்டு பிறரைக் காப்பாற்றி விட்டாரென்று நினைத்தாலும், நன்னெறியடையத் தன் முயற்சி வேண்டியதில்லே யென்று தோன்றும். நம் முயற்சியால் நாம் முன்னுக்கு வந்துவிடலாமென்று நினைப்பதும் பாவமென்று கோயிலார் கூறுவர். பாவத்திலிருந்தும் அதனல் விளையும் கேட்டிலிருந்தும் தப்பிக்கத் தன் முயற்சி யின்றி வேறு வழி யிருப்பதாகக் கருதுகிறவன், தன் முயற்சியில் உண்மை ஆர்வம் காட்டமாட்டான்; தன் முயற்சியைத் தவிர வேறு வழி தெரியாதவனே உண்மை யார்வம் காட்டுவான். தன் முயற்சியில் உண்மை யார்வமில்லாதவன், பிற வழி தெரிந்துபோதிலும் நல்வழியையே நாடி அதனை யடையும் படிகளை முறையாகப் பின்பற்றிச் செல்லமாட்டான். கிறிஸ்து மதத்தை நம்புவோரில் பெரும்பாலோர் இம்மாதிரி நிலையில் உள்ளார்கள்.

III

மனிதன் ஆன்ம பூரணத்தை யடையத் தன் முயற்சி வேண்டா மென்றும், வேறு வழியாக அதை அடையலா மென்றும் சொல்லும் கொள்கை, தன் முயற்சியைத் தளர்வு படுத்தி, குண ஒழுக்கத்தையும் கெடுத்தது.

கிறிஸ்து மதத்தை ஏற்றுக் கொண்டோருட் பெரும்பாலார் அதன் வெளித் தோற்றத்தையே கொண்டனர். பிற சமயத்தவர் கொண்ட நற் குணங்களையும் தேவையில்லே யென விடுத்தனர். மிருக வாழ்க்கைக்கும் தங்கள் வாழ்க்கைக்கும் வேற்றுமை யில்லாதபடி நடந்துகொண்டனர்.

கோயில் உபதேசத்தை நம்பாதவர்களின் கதியும் அதுவே. இவர்கள், அருள் உண்டு என்பதையும் கடவுள் தங்களை மீட்பார் என்பதையும் நம்புவதில்லே. அதற்குப்

பதிலாக, பலர் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் தங்களுக்கு நல்லதெனத் தோன்றுவதுமாகிய வேலையைச் செய்கிறார்கள்; விஞ்ஞானம், கலை, சமூகம் - இத் துறைகளில் வேலை செய்கிறார்கள். இவ்வேலையில் மனம் செலுத்தி, முறையாக அடைய வேண்டிய நற்குணங்களை விடுத்து, நாடக மேடையில் பார்க்கும் பொய் வாழ்க்கையைப் போன்ற வாழ்க்கை நடத்துகிறார்கள்.

பிற சமயத்தை விட்டு உண்மைக்கிறிஸ்துவ மதத்தில் சேராதார், இறைவனுக்கும் மனிதனுக்கும் அன்பு பூண்டொழுக வேண்டு மென்றார்கள்; ஆனால் தன்னலத்தை யொழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நீதியை வற்புறுத்தினார்கள்; தன்னடக்கத்தைச் சொல்லவில்லை. அதாவது, மேற் குணத்தைச் சொல்லி, கீழ்ப்படிகளை மறந்தனர். இது ஆளை விட்டு நிழலைப் பிடிப்பது போலாகும்.

சிலர் தன்னலமறுப்பைச் சொல்லாமல் கடவுளுக்கும் மக்களுக்கும் அன்பு பூண்பதைச் சொல்வர்; தன்னடக்கத்தைச் சொல்லாது சமூக சேவையைச் சொல்வர். இவ்வுபதேசம் மக்களை உயர்த்துவதுபோல் பாவனை காட்டுகிறது; இதனைக் கிறிஸ்துவரென்போரும் பிறரும் விரைவிலே ஒப்புக் கொள்வர். ஆனால், இது மிருகத்தன்மையையே வளர்க்கிறது; கிறிஸ்துவர்களாலும் பிற சமயத்தினராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒழுக்கத்திற்கு இது மாறானது.

சில நாட்களுக்கு முன்னர் சோஷலிஸம் என்ற சமதர்மக் கொள்கையைப்பற்றி, போப் ஒரு புத்தகம் வெளியிட்டார். ஒருவன் தனக்கெனச் சொத்து வைத்துக் கொள்வது தவறென்னும் சமதர்மக் கொள்கையைத் தாக்கிப் பேசினார். பின்னர் சொல்லுகிறார்: 'அவசியமான தன் தேவைக்கும் தன் குடும்பத்தார் தேவைக்கும் வேண்டுவனவற்றைப் பிறருக்குக் கொடுக்க வேண்டு மென்பதில்லை. தன் நிலைமைக்கு நியாயமாக வேண்டியவற்றையும் வைத்துக் கொள்ளலாம். தங்களுக்கு அவசியமாக வேண்டியதையும், தங்கள் பதவிக்கு வேண்டியதையும் வைத்துக் கொண்டு, மற்றப் பொருள்களைத் தானமாக வழங்குங்கள்' — இது தாமஸ் அகுவினஸ் என்ற அடியார் சொன்னது.

ஒரு பெரிய மடாதிபதி இம்மாதிரி சொல்லுகிருர். முத்தியடைய, செயல் மட்டும் போதாதெனக் கருதிய கோயிலதிகாரிகள் யாவரும் இம்மாதிரியே சொல்லுவார்கள். தங்களுக்கு வேண்டாததை மட்டும் கொடு என்னும் தன்னல உபதேசத்தோடு, அன்பைப் பற்றியும் சொல்லி, பால் என்னும் அடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்திலே பதின்மூன்ரும் அத்தியாயத்தை எடுத்துக் காட்டுவர்.

பைபிளில் பற்பல இடங்களில் அவாவறுத்தலைப் பற்றிச் சொல்லி யிருக்கிறது. அதிலிருந்து கிறிஸ்துவருக்கு அவாவறுத்தலே முதற்படி என்று தெரிந்து கொள்ளலாம். 'சிலுவையைத் தாங்கினவர்கள்' 'பெற்ருேரை விட்டு வந்தவர்கள்' 'தங்கள் உயிரையும் விடத் தயாரானவர்கள்'—இவர்களைப் பற்றி, பைபிளில் தெளிவாகச் சொல்லி யிருந்த போதிலும், தன்னலத்தோடு பிறரை நேசிக்க முடியுமென்று கருதுகிருர்கள். தன் தேவைக்கும் நிலைமைக்கும் வேண்டிய பொருளை விட்டுவிடாமல் பிறரை நேசிப்பதாம்! இது முடியுமா?

கோயில் சம்பிரதாயத்தைப் பின்பற்றுவோர் இம்மாதிரிச் சொல்வார்கள். கோயிலையும் கிறிஸ்துவையும் நம்பாதவர்கள் இம் மாதிரியே நினைத்தும் பேசியும் எழுதியும் வருவார்கள். தங்கள் தேவையைக் கொஞ்சமும் குறைக்காமல், தங்கள் புலனிச்சையை அடக்காமல் மனித சேவை செய்ய முடியுமென்றும், நல்ல வாழ்க்கை நடத்த முடியுமென்றும் கருதுகிருர்கள்.

குணங்களைப் பிற சமயத்தவர் முறைப்படுத்தியதை மக்கள் விட்டுவிட்டார்கள்; கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்று அதன் முறையையும் கைக்கொள்ள வில்லை. ஆகையால், வழி தெரியாமல் திகைக்கிருர்கள்.

IV

முன் காலத்தில், அதாவது கிறிஸ்து காலத்திற்கு முன்னர், வாழ்க்கைக்கு வழிகாட்டிகளா யிருந்த சாக்ரடீஸ் போன்ற பெரியார்கள், தன்னடக்கத்தை, அதாவது புலனடக்கத்தை, முதல் குணமாகச் சொல்லுவார்.

எல்லாக் குணங்களுக்கும் இதுவே ஆரம்பம்; இதைத் தொடர்ந்துதான் மேலே செல்ல வேண்டும். தன்னடக்க மில்லாது, பல ஆசைகளை வளர்த்து அவைகளுக்கு அடிமை யானவன், நல்வாழ்க்கை நடத்த முடியாதென்பது வெளிப் படை. சுயநல மறுப்பையோ, நீதியையோ, அவைக ளுக்கு மேலான ஈகையையோ அன்பையோ நினைப்பதற்கு முன்னர், தன்னடக்கம் பெற வேண்டுவது அவசியம். இவைகளெல்லாம்தேவையில்லை என்று இப்போது நினைக்கி ரோம். சமூகத்தில் ஆசையை வேண்டியமட்டும் வளர்த்து, நூற்றுக்கணக்கான வழக்கங்களுக்கு அடிமையாகி, அவைகளின்றி வாழ முடியாதவன் நல் வாழ்க்கை நடத்த முடியுமென்று நாம் திண்ணமாய் நம்பிக்கொண்டிருக்கி ரோம். இன்னும் பாருங்கள். எல்லாம் பலருக்கு உப யோகப்பட வேண்டுமென்பது முதல் நிலை; நீதி உயர் நிலை. இது பிற சமயத்தவர் நோக்கம். கிறிஸ்து மதம் அன்பை உயர் நிலையாகச் சொல்லும். எந்த நிலையிலிருந்து பார்த்தாலும், பிறர் கஷ்டப்பட்டுச் செய்யும் வேலையின் பயனை நாம் அனுபவித்தல் தவறென்பது புலப்படும்; அன்பு நிலையிலிருந்து பார்த்தால், தவறு பெரிதாகத் தோன் றும். ஒருவன் நல் வாழ்க்கை நடத்த வேண்டுமானால், முதலில் இந்தக் குற்றத்தை விடவேண்டும்.

பிறருடைய வேலையால் பயன் பெறுவது சுயநலத் திற்கும் விரோதம். வாழ்க்கையில் உறுதி யேற்படுவதில்லை. ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள வழி யிருக்கிறது. அதனால் ஆசைகளுக்கு அடிமையாகிறான். அவனுக்கு வேலை செய் வோர் அவனை வெறுக்கிறார்கள். அவனது நிலையைக் கண்டு பொறாமைப் படுகிறார்கள். வேலைக்காரர்கள் வேலையி லிருந்து தப்பித்துக்கொள்ளவும் முயலுகிறார்கள். அம் மாதிரி மனிதன் பல கெட்ட வழக்கங்களுக்குட்பட்டு, அவைகளின் மூலம் பல தேவைக ளேற்பட்டு, அவை களையடைய முடியாமல் துன்புறுகிறான்.

நியாயத்தைக் கவனித்தாலும், அம்மாதிரி நடத்தை சரியில்லை. பிறர் வேலையிலிருந்து நாம் சுகமடைந்தால், நாம் வேலை செய்து அவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்க வேண்டாமா? நாம் பெறும் சுகத்தில் நூற்றிலொரு பங் காவது கொடுக்கிறோமா?

கிறிஸ்துவர் சொல்லும் அன்பு முறையில் பார்த்தால், நாம் பிறருக்கு வேலை செய்ய வேண்டுமே யொழிய பிறர் வேலையை நாம் பெறக்கூடாது.

ஆனால் தற்காலத்தில், சமூகத்தார் நல்ல பயனையும், நீதியையும், அன்பையும் அறவே மறந்துவிடுகிறார்கள். ஆசையை அடக்க வேண்டுமென்பதை, குண வரிசையில் முதலாகவும் கருதுவதில்லை; கடைசியாகவும் கருதுவதில்லை. வேண்டாததென்றே கருதுகிறார்கள்!

இக் காலத்தில், தேவைகளை அதிகப்படுத்திக் கொள்வது வாழ்க்கைக்கு நலமென்ற உபதேசம் பரவி வருகிறது; தேவைகள் முன்னேற்றத்திற்கும், நாகரிகத்திற்கும், கல்விக்கும், நல்ல நிலைமைக்கும் அடையாளமாம்! கோழைத்தனமான பழக்கங்கள் கெடுதலென்று தெரிந்துகொள்ளாமல், அவைகளை நற்குணங்களென்றும் கருதுகிறார்கள்.

தேவைகளைப் பெருக்கலும், அவைகள் சிறப்பாக இருத்தலும் நலமென்பார்கள்.

கடைசி இரண்டு நூற்றாண்டுகளில் தோன்றிய இலக்கியத்தைக் கொண்டு, இவ்வகை மனப்பான்மையை அறியலாம்.

கதா நாயகனையும் நாயகியையும் எவ்வாறு வருணிக்கிறார்கள்?

கதாநாயகர்கள் முழுச் சோம்பேறிகள்; சீர்கெட்டவர்கள்; ஆயிரக்கணக்கான மக்கள் உழைப்பதனாலுண்டாகும் பயனை இவர்கள் அனுபவிப்பார்கள்; பயன்படும் காரியம் ஒன்றும் செய்ய மாட்டார்கள். இவர்களின் ஆசைக்குப் பாத்திரமானவள் கதாநாயகி. இவளிடத்தும் சோம்பல் குடிகொண்டிருக்கும்; பிறருடைய உழைப்பினால்தான் இவளுடைய வாழ்க்கை நடக்கிறது.

சில நூல்களில், சோம்பலற்ற மனிதர்களையும் காணக்கூடும். ஆனால், வழக்கமாகக் காணும் பாத்திரங்களைப் பற்றியே பேசுகிறேன். அவைகளையே பாமர மக்கள் உதாரணமாகக் கொள்வர். நான் நவீனம் எழுதும்போது, ஒரு பெரும் சிரமம் இருந்தது. அக் கஷ்டம் மற்ற ஆசிரியர்களுக்கு முண்டு. சமூகத்தில் உயர்தர நிலையி

லிருப்பவர்களில், அன்புள்ளவர்கள், நல்லவர்கள் உண்மை வாழ்க்கையில் கிடைப்பது சிரமம். வாழ்க்கைக்கு ஒத்திருக்கும்படி எழுதினல், உயர்தர நிலையிலிருக்கிற படித்த ஆணும் பெண்ணும் சுக வாழ்விலும் சோம்பலிலும் மூழ்கிக் கிடப்பர். கதையில் முக்கிய பாத்திரமாக இருக்க, இவர்கள் தகுந்தவர்களா? இவர்களை, மனத்தைக் கவரும் தன்மையராகச் செய்ய வேண்டும். நவீன ஆசிரியர்கள் அதற்கு முயல்வர். நானும் முயன்றேன். இவ்வொழுக்கமற்ற வீணர்களை, முயற்சி யில்லாமல் சித்திரித்துவிடலாம். நவீனம் படிப்போரும் இவர்களைப் போன்றவர்களே. ஆகையால், படிப்பவர்கள் இவர்கள்மேல்தான் ஆசை வைப்பர்.

V

பிற சமயத்தார் சொல்லுகிற தன்னடக்கத்தையும் கிறிஸ்துவர் சொல்லுகிற தன்னல மறுப்பையும் இக்காலத்தார் வேண்டாமென்று கருதுகிறார்கள். தேவைகளை அதிகப்படுத்திக் கொள்வதே கல்விக்கு அறிகுறியெனக் கருதுகிறார்கள். இக் கருத்தை நம் குழந்தைகள் பெறும் கல்வியிலிருந்து தெரிந்துகொள்ளலாம். குழந்தைகளுக்குத் தன்னடக்கத்தையும் புகட்டுவதில்லை; தன்னல மறுப்பையும் புகட்டுவதில்லை. கோழைத்தனம், சோம்பல், சொகுசான வாழ்க்கை—இவைகளே போதிக்கப்படுகின்றன.

கீழே சொன்ன மாதிரி ஒரு கதை எழுத வேண்டுமென்று பலநாளாக நினைத்தேன். ஒருத்திக்கு அவள் எதிரி கெடுதல் செய்தாள். பழிக்குப் பழிவாங்க, இவள் எதிரியின் ஒரே புதல்வனைத் திருடிவந்துவிட்டாள். அப் பிள்ளையை மந்திரவாதியிடம் கொண்டு சென்றாள். அக் குழந்தையை ஓரிடத்தில் விட்டால், அப் பிள்ளைக்குக் கெடுதல் நேருமென்று அவன் சொன்னான். அக் கொடியவள் அவ்வாறே செய்தாள். அப் பிள்ளையைக் குழந்தையில்லாத ஒரு பெரும் பணக்காரன் எடுத்து வளர்த்தான். கொடியவள் அதை யறிந்து மந்திரவாதியிடம் சென்று அவனைக் கோபித்தாள். அவன் பொறுத்துப் பார்க்கச் சொன்னான். குழந்தை சொகுசாக வளர்ந்தது. கொடிய

வளுக்கு ஒன்றும் புரியவில்லை. மந்திரவாதியிடம் சென்ருள். அவன் மேலும் பொறுத்திருக்கச் சொன்ஞன். கடைசியாகக் கொடியவள் சந்தோஷிக்கும் காலமும் குழந்தையைப் பார்த்துப் பரிதபிக்கும் காலமும் வந்தது. செல்வத்தின் நடுவில் செல்லப்பிள்ளையாக வளருகிருன். சொகுசான வாழ்க்கையில் பலமற்றுக் கோழையாய்க் கெடுகிருன். அதனேடு, அவனுடைய நல்ல சுபாவமும் சேர்ந்து, அவனுக்குப் பல இன்னல்களை விளைக்கின்றன. உடலுக்குக் கஷ்டம், வறுமை, மானக்கேடு—இவைகள் தொடர்ந்து வருகின்றன. மிக்க உணர்ச்சியுள்ளவனு யிருப்பதால், அதிகக் கவலைக ளேற்படுகின்றன. அவை களைத் தடுக்க வழி தெரியவில்லை. நல்வாழ்க்கை நடத்த ஆசையொரு பக்கமும், கோழைத்தனமும் சோம்பலும் மற்ருெரு பக்கமும் இழுக்கின்றன. அவன் தவிக்கிருன். ஒவ்வொரு நாளும் துன்பம் அதிகமாகிறது. மனக் கவலையை மாற்ற எண்ணிக் குடிக்கிருன். குற்றங்கள் குடி கொள்ளுகின்றன. பைத்தியம் பிடிக்கிறது. தற்கொலையில் முடிகிறது.

இக் காலத்தில் பணக்காரப் பிள்ளைகள் பெறுகிற கல்வியைக் கவனித்தால், மனக் கவலை உண்டாகும். பொதுவாக வீட்டிலே குழந்தைகளுக்குப் போதிக்கப் படுகிற பழக்க வழக்கங்கள் கொடிய விரோதி ஒருவன் கற்றுக் கொடுத்தவையோ என்று சொல்லக் கூடியபடி யிருக்கின்றன. பெற்ருேர்களே பிள்ளைகளைக் கெடுத்து விடுகிருர்க ளென்பதை நினைக்க மனம் பதறும். முதலில் கோழைத்தனத்தையும் சோம்பலையும் பழக்குகிருர்கள். மீதூண் வெறுத்தலும் தன்னடக்கமும் சொல்லிக் கொடுக் கப்படுவதில்லை. ஆதிகாலத்தில், பொதுவாக உலகம் முழு மையும், சிறப்பாக ஸ்பார்ட்டா தேசத்திலும், இக் குணங் களை மிகவும் போற்றினர்கள். இப்பொழுது, மக்களை வேலையிலும் பழக்குவதில்லை; வேலைக்கு வேண்டிய குணங்களிலும் பழக்குவதில்லை. வேலையில் கவனம், இடைவிடா உழைப்பு, உழைப்புக்கு வேண்டிய திடம், வேலையில் ஆர்வம், கெட்டுப்போனதைச் சரிப்படுத்தும் திறமை, மெய் வருத்தத்தில் பழக்கம், வேலை முடிப்பதில் ஆனந்தம்—இவை வேண்டும். ஆனல், சோம்பலும், வேலை யில் வெறுப்பும், பழுதானதை விட்டெறிவதும், புது

வேடிக்கைப் பொருள் வாங்குவதும், அவைகளைச் செய்வதில் கவனம் செலுத்தாமையுமே நாம் கற்றுக் கொடுத்தவை. ஒரு சமரச நிலையை அடைய முடியாத மனிதனுக்கு நியாயத்தையும், மக்கள் சேவையையும், அன்பையும் சொல்லிக் கொடுக்கிறோம்.

ஒழுக்கத்தில் சிந்தனை யில்லாத இளைஞன் வாழ்க்கையில் எது உண்மை யென்றும் எது போலி யென்றும் கண்டு கொள்ளாமல், எல்லா விஷயங்களிலும் வெறும் ஏமாற்றந்தான் அடைவான். இவனுக்கு மனக் குழப்பம் இராது; சாகும் வரையிலும் ஒழுக்க சிந்தனையும் ஏற்படாது.

ஆனால், இக்காலத்திலே வாழ்க்கையில் ஒழுக்கமில்லாதிருப்பது மனதைத் தைக்கிறது. அடிக்கடி உண்மை ஒழுக்க வாழ்க்கையை நாடுகிறோம்; மனதில் பெரும் போர் நிகழ்கிறது. கவலையும் கஷ்டமும் ஏற்பட்டு, நல்லொழுக்கம் வெற்றி பெறுவது அரிதாகிறது.

ஒரு மனிதன் தன் வாழ்க்கை கெடுதலென்று அறிகிறான்; வாழ்க்கையை அடிமுதல் திருத்த வேண்டும்; அதற்கு முயலுகிறான். ஆனால், தீய வாழ்க்கை நடத்தி, பின்பு திருந்த முயன்று, அதில் வெற்றி பெருதவர்கள் இவனுக்குத் தடையாக நின்று, இவனுக்குப் பொய்யான அறிவைப் போதிக்கிறார்கள். திருந்துவது அவசியமில்லை; நல்வாழ்க்கைக்குத் தன்னடக்கமோ, தன்னல மறுப்போ வேண்டுவதில்லை; அளவில்லாமல் உண்ணவும் குடிக்கவும் வேண்டும்; ஆடம்பரத்தோடு, சோம்பி யிருந்து, விபசாரத்தில் ஈடுபட்டு, நல்ல உபயோகமுள்ள வாழ்க்கை நடத்த முடியும் என்று கூறுவார்கள். திருந்த முயன்றவனும் கெட்டு விடுகிறான்; தன் பலவீனத்தாலும், பிறர் மொழியாலும் கெட்டு, தன் மனச்சாட்சியைப் புறக்கணித்துத் தன் அறிவையும் மயக்கி, பழைய தீயொழுக்கத்தைக் கைக்கொள்கிறான். கடவுள் வேண்டாமென்றால்தான் நாம் உய்வோ மென்றும், அரசியல் தொண்டினாலும், கலைப்பணியாலும் ஈடேறுவோ மென்றும் சொல்லிக் கொள்கிறான்; கடைசியில் இவனுக்குப் பைத்தியம் பிடிக்கிறது அல்லது தற்கொலை செய்துகொள்கிறான்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னும், இப்போதும், நல்ல மனிதர்கள் ஏற்றுக்கொள்ளும் உத்தம இயல்புகளை, புலன் வசப்பட்ட நாம் அறிவதில்லை. நல் வாழ்க்கையை யடைய, கெட்ட வாழ்க்கையை விடவேண்டும். மேல் குணங்களை யடைய, முதலில் பெறவேண்டிய அடிப்படையான குணங்களை யடைய வேண்டும். இம்முறையில் முதல் குணத்தைப் பிற சமயத்தார் தன்னடக்கமென்பர்; கிறிஸ்துவர் தன்னல மறுப்பென்பர். இம்முதல் குணத்தையே மக்கள் முயன்று பெறுவதில்லை.

VI

ஆயிரத்து எண்ணூற்று நாற்பதாம் வருஷத்திற்குப் பின்னிருந்து கற்றோரெனக் கொண்டாடப்படுபவர்களின் கடிதங்களைப் படித்தேன். தேசாந்தர சிட்சை செய்யப்பட்ட ஓகாரியோவ் என்பார், தம்மினும் படித்த ஹெர்சனுக்கு எழுதுகிறார். அதில் தம் உண்மையான எண்ணங்களையும், உயர்ந்த நோக்கங்களையும் சொல்லுகிறார். இளைஞர் இயல்பிற்கேற்ப, தம்மை உயர்த்திக் காட்டிக் கொள்ளுகிறார். பூரணத்துவ மடைதல், தூய நட்பு, அன்பு, விஞ்ஞான சாஸ்திர சேவை, மக்கட் சேவை,—இவைகளைப்பற்றிப் பேசுகிறார். சில விஷயங்களைப் பதருமலும் எழுதுகிறார். கூடா வொழுக்கத்தால் தடுமாறி அலைவதும், குடியால் மயங்கி வீட்டுக்குத் திரும்புவதும், மனைவிக்கு வருத்தந் தருவதைக் கூறுகிறார்.

ஓகாரியோவ் நல்லெண்ண முடையவர்; திறமுடையவர்; நன்கு படித்தவர். இல்லறத்தான் ஒருவன், கர்ப்பந் தரித்த காதலியைத் தனியே விட்டு, விபசாரத்திலும் குடி வெறியிலும் அலைவது தவறென்று அவருக்குத் தோன்றவில்லை! அன்பையும் நட்பையும் பேசவும், ஒருவனுக்கோ, ஒரு விஷயத்திற்கோ தொண்டு செய்யவும் முதலில் குடியையும் கூத்தியையும் விடவேண்டுமென்று அவரது மூளையில் எட்டவில்லை. இந்தக் கெட்ட குணங்களுடன் அவர் போர் செய்யவில்லை. அவைகளில் நன்மை யிருப்பதாக நினைத்தார் போலும்! தாம் பூரணத்துவமடைய, இவை குறைகளென்று அவர் எண்ணவில்லை. ஆகையால், நண்பனுக்கு அந்தக் குணங்களை ஒளிக்காமல் காட்டுகிறார்.

இது ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் நடந்தது. அவர்க ளிருவரையும் எனக்கு நேரில் தெரியும். அவர்களைப்போல் பலரிருந்தனர். அவர்களின் வாழ்க்கையில் முரண்பட்ட குணங்கள் பல. அவர்களுக்கு நன்மையில் உண்மையான விருப்பமும் ஆர்வமும் உண்டு; அதனோடு, ஆசைகள் பல அவர்களுக்குண்டு. அவ்வாசைகள், நல்வாழ்க்கையையும், நற்செய்கையையும், அரிய செய்கையையும் தடைப் படுத்துமென அவர்கள் அறியார். பிசையாத மாவை மூட்டாத அடுப்பில் போட்டு ரொட்டிக்குக் காத்திருப்ப வர் போலாவர் இவர். அவர்களின் வாழ்க்கையில் நயம் வருவதில்லை; வாழ்க்கையில் துன்பத்தையே காண்கிறார்கள்.

இந்தத் துன்பம் மிகக்கொடிது. இதை ஹெர்சன் வாழ் விலும், ஓகாரியோவ் வாழ்விலும் கண்டோம்; அக்காலத்து வாழ்ந்தவர் பலரிடமும் காணலாம். இக்காலத்தவரிடமும் காணலாம். ஒருவன் நல்வாழ்க்கை நடத்தப் பிரியப்படு கிறான்; ஆனால், குணமுறை தெரியாமல் அவனும் அவன் சமூகத்தாரும் கஷ்டப்படுகின்றனர். கோழை வாழ்க்கை வாழ்வது; கொழுக்கச் செய்யும் உணவைக் கொள்ளு வது; எந்த வகையிலோ ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுவது—இச் செயல்கள் நல்வாழ்க்கைக்குக் கெடுத லல்லவென்று அப்பொழுதும் நினைத்தார்கள்; இப்பொழு தும் நினைக்கிறார்கள். அவர்களுக்கு நல்வாழ்க்கை ஏற்படுவ தில்லை. அவர்கள் வருத்தத்துடன், 'வாழ்க்கையின் விளைவு இதுவே' என்பார்கள்.

இன்பம் யாவருக்கும் ஒரே மாதிரியாக வாய்ப்ப தில்லை என்று இப்பேர்வழிகளுக்குத் தெரியும்; இவ்வேற் றத்தாழ்வு கெடுதலென்பதும் தெரியும். ஆயினும், தங்க ளிடம் இன்பத்தையே பெருக்கிக்கொள்வர். ஒரு தோட்டத் திற்குள் சென்றவன் எல்லாப் பழங்களையும் பறிக்கிறான். யாவருக்கும் பழங்கள் சமமாகவே கிடைக்க வேண்டு மென்று பேசுவான்; ஆனால், பேசிக்கொண்டே பின்னால் வருகிறவர்களுக் கொன்றுமில்லாமல் பறித்துவிடுவான்!

VII

ஆசைகளைக் கொஞ்சமும் துறக்காமல், நல்ல உபயோக மான, நியாயமான, அன்பான வாழ்க்கையை நடத்த நினைப்பது என்ன ஏமாற்றம்! வருங்காலத்தவர் இதைக்

கண்டு நகையாடுவார்கள். பணக்காரக் கோழைகளையும் காமுகர்களையும் நல்வாழ்க்கை நடத்துகிறவர்க ளென்றால், 'நல்வாழ்க்கை' என்பதற்குப் பொருளில்லாமற் போய் விடும். நல்வாழ்க்கை யென்பதற்கு வழக்கமான பொருளைக் கொள்ளாதீர்கள். கிறிஸ்துவரின் கருத்தோடு பார்க்க வேண்டிய அவசியமில்லை; பிற சமயத்தாரின் கருத்துப் படியே பார்த்தாலும் போதும். சிறிது நியாயமான முறையில் பார்த்தாலும் போதும். மக்கள் 'நல்வாழ்க்கையில்' செய்யும் அநீதியும் அக்கிரமமும் நன்கு புலப்படும். குழந்தைகள்கூட விளையாட்டிலும் தப்புச் செய்வதில்லை. ஆனால் பெரியவர்களோ?

ஒருவன் நல்வாழ்க்கை வாழவேண்டுமானால் - ஏன், நல்வாழ்க்கை வாழ வேண்டுமென்ற எண்ணத்தை முதலில் நினைக்கவும்கூட - முதலில்கெட்ட வாழ்வைவிடவேண்டும்; அதற்கேற்ற நிலைகளையும் ஒழிக்க வேண்டும்.

'நாம் மட்டும் புதுமாதிரியாகச் செய்தால் பலர் சிரிப்பார்கள். வேஷமாகத் தோன்றும்' என்று நல்வாழ்க்கைக்குத் தடையாகச் சொல்வர். கெட்டவர்கள் என்றும் கெட்டுப்போக வேண்டுமென்பதற்காக இவ்வாதம் ஏற்பட்டது போலும்! எல்லோரும் நல்லவர்களாய், நீதிமான்களாய், அன்பர்களா யிருந்தால், நாம் நல்வாழ்க்கை நடத்துவதில் கஷ்டமிராது. ஒரு பாதி வாழ்க்கை நன்மையாகவும், பாதி கெட்டதா யிருந்தாலும், நல்வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களுக்குக் கஷ்டம் பாதியே யிருக்கும். பணக்கார வகுப்பாரி லிருப்பது போல, வாழ்க்கையில் முழுக்கெடுதலும் தவறுமிருந்தால், கஷ்டமின்றி ஒரு நற்செய்கைகூட செய்ய முடியாது. ஆனால், கெட்ட காரியம் சுலபமாகச் செய்யலாம்.

பணக்காரர் நல்வழி நடத்தும் பொருட்டு, முதலில் கெடுதலுக்குச் சௌக்கியமாக விருக்கும் சந்தர்ப்பங்களை ஒழிக்க வேண்டும்; கெட்ட குணங்களை விட வேண்டும். சொகுசான வாழ்க்கை நடத்துகிறவன் நல்வாழ்க்கை நடத்த முடியாது. முதலில் வாழ்க்கையைத் திருத்தி அமைக்க வேண்டும். நல்வாழ்க்கையை எப்படி அமைப்பது? கிறிஸ்து மதத்திலும் பிற சமயங்களிலும் அதற்கு வழி ஒன்றுதான். தன் நலத்தையே தேடுவது எவ்வளவு

தூரம், பிறர் நலந் தேடுவது எவ்வளவு தூரம் என்று கவனித்து நல்வாழ்வை அளந்து விடலாம். ‘நான்’ என்பதிலும், தன் பொருட்டான வேலையிலும், தனக்கு வேண்டிய பொருளின் மேலும், ஆசையும் கருத்தும் குறைய வேண்டும். நேசத்திலும், பிறர் பணியிலும், பிறருக்குச் சௌகரியம் தேடுவதிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இதனையே நிறைந்த நல்வாழ்வென்று உலகெங்கும் பெரியோர் கொண்டார்கள். உண்மைக் கிறிஸ்துவர்களும் அவ்வாறே கொண்டார்கள். சாமானியர்களும் அப்படியே அறிவார்கள். பிறருக்கு அதிகம் கொடுக்கக் கொடுக்க, தன் தேவை குறைகிறது; தான் செம்மையடைகிறான். பிறருக்குக் கொஞ்சங் கொடுக்க, தன் தேவை அதிகரிக்கிறது; தான் சீர்கெடுகிறான்.

தன்னிலும் பிறரை அதிகமாக நேசிப்பவன் ஒழுக்கத்தில் மேம்படுவான். தன்னல உணர்ச்சி குறையவும், ஒழுக்க வாழ்வு சுலபமாகிறது. தன்னல உணர்ச்சி அதிகரித்தால், தேவை அதிகரிக்கிறது; பிறர் வேலையை நாட வேண்டியதிருக்கிறது; பிறரை நேசிக்கவும் பிறருக்கு உழைக்கவும் மனம் வருவதில்லை. நல்ல கருத்துக்கள் விரிவினும் ஆழத்திலும் குறைகின்றன. கயிற்றில் தொங்கும் துலாக்கோலைப் பார்த்திருப்பீர்கள். கயிற்றின் ஒரு பக்கத்தில் அதிகக் கம்பும் மற்றொரு பக்கத்தில் கம்பின் நீளம் கொஞ்சமாகவும் இருக்கும். சிறு பக்கத்தில் கயிற்றைத் தள்ள, சிறு பக்கம் குறையும், பெரும் பக்கம் நீளும். அன்பெனும் குணத்தை யுடைய மனிதன், தன்பேரில் அன்பையும் கவனத்தையும் செலுத்தினால், தன்பேரில் வைத்த அன்பு மட்டும் குறைவதில்லை. அது காரணமாக, பிறரிடத்தில் அன்பு செலுத்த முடிவதில்லை. பிறருக்கு ஊட்ட வேண்டியதையும் தானே அதிக உணவாக உண்கிறான். அவ்வாறு செய்வதால், தனக்கு வேண்டாததைக் கூடப் பிறருக்குக் கொடுக்க முடியவில்லை; அதனோடு, பிறருக்கு வேலை செய்ய முடியாமல், உடம்பும் கெட்டு விடுகிறது.

பேருக்கு மாத்திரமின்றி, உண்மையாகவே பிறரை நேசிக்க வேண்டுமானால் தன்னுசையும் உண்மையாகவே

ஒழிய வேண்டும். சில விடங்களில் நடப்பது இம்மாதிரி: பிறரை நேசிப்பதாக எண்ணுகிறோம்; அதை உண்மையென்று நாமும் திடம் செய்து கொள்ளுகிறோம்; பிறருக்கும் உறுதி செய்கிறோம்: ஆனால், நாம் பிறரை நேசிப்பது வார்த்தையால்தான்; நம்மை நேசிப்பது உண்மை. பிறரை உண்பிக்கவும் படுக்கவைக்கவும் மறந்து விடுவோம்; நம்மைப்பற்றி நாம் ஒருநாளும் மறப்பதில்லை. செய்கையில் பிறரை நேசிப்பதுண்மையானல், செய்கையில் நாம் உணவையும், படுக்கையையும் மறந்துவிட வேண்டும்; பிறருக்குச் செய்ய மறப்பது போல் நமக்குச் செய்யவும் மறந்து விட வேண்டும்.

சொகுசான வாழ்க்கை நடத்துகிறவனை 'நல்லவன்' என்றும், 'நல்வாழ்க்கை' நடத்துகிறவ னென்றும் சொல்லுகிறோம். நல்ல கத்தியும் தீட்டாது போனல் சரியாக வெட்டாது. அதே போல், ஒருவர் ஆணயினும் பெண்ணயினும் — நல்ல சுபாவத்தோடும் அடக்கத்தோடும் இருப்பினும், நல்வாழ்க்கை நடத்துவதாகச் சொல்ல முடியாது. நல்லவரா யிருக்கவும் நல்வாழ்க்கை நடத்தவும், பிறரிடமிருந்து நாம் பெறுவதைவிடப் பிறருக்கு நாம் கொடுப்பது அதிகமா யிருக்க வேண்டும். சுக வாழ்க்கை வாழ்பவன் ஒருவன் இவ்வாறு செய்ய முடியாது; ஏனெனில், முதலில், அவன் தேவையே அதிகமாயிருக்கிறது. இத் தேவைகள் சுய நலத்தால் ஏற்பட்டவையல்ல; வழக்கத்தால் ஏற்பட்டவை. இரண்டு: பிறர் கொடுத்ததெல்லாம் உண்டு பிறருக்கு வேலை செய்ய முடியாதவனகிறன். சுகவாழ்க்கை யுடையவன் வெகுநேரம் பஞ்சு மெத்தையில் படுத்துறங்குகிறன்; கொழுக்கச் செய்யும் உணவை நிறையத் தின்கிறன்: வெப்பம் குளிருக்குத் தகுந்தாற் போலவும், அழகாகவும் ஆடை அணிகிறன். கஷ்டமான வேலையில் பழகுவதே யில்லை; அவ் வேலை கொஞ்சமும் செய்ய முடியாது.

நம் வாழ்க்கை பொய். அது வழக்கமாய் விட்டது. பிறர் வாழ்க்கையிலும் பொய். பிறர் நம் வாழ்க்கையிலுள்ள பொய்யைப் பார்க்காதிருக்க வேண்டி, நாம் பிறர் வாழ்க்கையிலுள்ள பொய்யைப் பார்ப்பதில்லை. தன்னடக்கம் சிறிதுமில்லாத பிறர், தாங்கள் நல்வாழ்க்கையும் தூய வாழ்க்கையும் நடத்துவதாகக் கூறினலும், நாம் சந்தேகப்

படுவதுமில்லை; ஆட்சேபிப்பதுமில்லை; ஆச்சரியப்படுவது மில்லை.

வில்வைத்த கட்டிலின்மேல் இரு மெத்தைகள் விரித்து அதன்மேல் தூங்குகிறார் ஒருவர். சுத்தமாயும் மிருது வாயுமுள்ள தலையணை இரண்டு. படுக்கைக்குக் கீழே ஒரு கம்பளி. எழுந்ததும் கால் வைக்க அக் கம்பளி விரிக்கப் பட்டிருக்கிறது. அங்கேயே இரண்டு பாதரட்சைகளும் கிடக்கின்றன. இரவில் மலஜலம் கழிக்கப் பாத்திரங்கள்; சுத்தம் செய்ய ஆட்களிருக்கிறார்கள். சூரிய வெளிச்சம் தம்மை எழுப்பாதபடி ஜன்னல்களுக்குத் திரை. வேண்டிய நேரம் தூங்கலாம். இதனோடு, குளிர்காலத்தில் அறையில் கதகதப்பிருக்கவும், வெயிற் காலத்தில் அறையில் குளிர்ச்சி யிருக்கவும் ஏற்பாடுகள், பூச்சிகள் தொந்தரவு செய்யாதபடி ஏற்பாடுகள்; அறையில் வெந்நீரும் தண் ணீரும் வைத்திருக்கும். க்ஷவரம் செய்துகொள்ளவும் குளிக்கவும் வசதிகள். எழுந்ததும், எழுச்சி தரும் தே நீரோ அல்லது காப்பியோ உண்டு செருப்பு, பூட்ஸ் முதலி யவை அழுக்குத் துடைக்கப்பட்டு, ஒரு தூசியுமில்லா மல், பளபளவென்று கண்ணாடிபோல் மின்னுகின்றன. மற்ற உடுப்புக்களும் அவ்வாறே சுத்தம் செய்யப்படுகின் றன. வெயிற் காலத்துக்குத் தகுந்த உடைகள்; பனிக் காலத்துக்குத் தகுந்தவை; மழைக் காலத்துக்குத் தகுந் தவை. வெளுத்து, கஞ்சி போட்டு, பெட்டி போட்ட சுத்தமான உடைகள்; கழுத்துப் பொத்தானும், முன் பொத்தானும் வைத்துத் தயாராயுள்ளன. அந்தந்த வேலைக் கும் தனி ஆட்கள். இப்படி ஆணுக்கும் பெண்ணுக்கும் நடக்கிறது.

இவர்களில் கொஞ்சம் சுறுசுறுப்பா யிருப்பவர் ஏழு மணிக்கு எழுந்திருப்பார். அதற்கு இரண்டு மணி நேரம் முன்னர் எழுந்து வேலையாட்கள் தயார் செய்ய வேண் டும். பகலுக்கு ஆடைகள்; இரவுக்கு ஆடைகள்; சட்டை போடும்போது தனிக் கவுன்; அப்போது காலுக்குத் தனிச் செருப்பு; தம்மைச் சுத்தம் செய்துகொள்ளவும் குளிக்கவும், பல் தேய்க்கவும் பலவிதமான புருஷ்; பலவித சோப்; ஏராளமான தண்ணீர். (ஆங்கிலேயரில் பலர் ஆண் பெண் இருபாலரும்—நிறைய சோப்பையும் தண் ணீரையும் உபயோகிப்பதால் பெருமை கொள்வார்கள்.)

பின்னர் உடுப்பணிவர்; தலை மயிர் சிங்காரம்; இதற்கெனத் தனிக் கண்ணாடி, மற்றக் கண்ணாடிகள் பல அறைகளில் தொங்கினாலும், அவைகளை உபயோகிப்பதில்லை. பின், வேண்டிய சாமான்களை எடுத்துக்கொள்ள வேண்டும். மூக்குக் கண்ணாடி முதலியன. இனி ஒவ்வொரு பையிலும் போடவேண்டிய சாமான் பல. மூக்குச் சிந்தப் பல கைக் குட்டைகள். போகிற இடமெல்லாம் கடிகார மிருந்தும் தங்கச் சங்கிலியுள்ள கடிகாரம் ஒரு பையில் வைக்க வேண்டும். இனி, பணம். அதில் நோட்டு; முழு வெள்ளிப் பணம்; வெள்ளிச் சில்லறை; செப்புக் காசு கொஞ்சம். ஒரு பையில் ஒவ்வொன்றுக்கும் தனியிடம். இனி, 'விசிட்டிங் கார்டு': அதில் பெயர் அச்சிட்டிருக்கிறது. ஆகையால், தம் பெயரைச் சொல்லும் சிரமமோ எழுதும் சிரமமோ கிடையாது. இவைகளுடன், பையிலே குறிப்புப் புத்தகமொன்று; பென்சிலொன்று. சொன்ன பேர்வழி பெண்ணாயிருந்தால், எடுத்துக்கொள்ள வேண்டிய சாமான்கள் இன்னும் அதிகம்: கூந்தலில் சொருகும் ஊசிகள்; ஆபரணங்கள்; இப்படிப் பல.

கடைசியாக, உடைதரித்துச் சிங்காரிப்பது முடிந்தது. பொதுவாக, சாப்பாட்டுடன்தான் ஆரம்பிக்கிறது, தினசரி வேலை. நிறையச் சர்க்கரை போட்டு தேத் தண்ணீரோ காப்பியோ சாப்பிடுகிறோம். வெண்மையான மாவால் செய்த ரொட்டியை நிறைய வெண்ணெய் தொட்டுச் சாப்பிடுகிறோம். சில சமயம் பன்றி மாமிசமுண்டு. ஆண்கள் அனேகமாகச் சுருட்டும் குடிப்பார்கள். அப்பொழுதுதான் வந்த தினசரிப் பத்திரிகைகளைப் பார்ப்பார்கள். சின்னாபின்னப்பட்ட அறையை வேலையாட்கள் சுத்தம் செய்யச் செய்து, ஆபீசுக்குப் போவார்கள். இவர்களுக்கெனச் சொகுசு வண்டிகள். பிறகு மத்தியானச் சாப்பாடு. மிருகங்கள், பறவைகள் முதலியவற்றின் இறைச்சி, மீன்; பின்னர் மாலை உணவு; சொற்பமா யிருந்தாலும், மூன்று வகை யிருக்கவேண்டும்; அதோடு பழங்களும், காப்பியும்; பின்னர் சீட்டு விளையாட்டு, சங்கீதம், கூத்து, படிப்பு, பேச்சு; உட்கார சுகமான நாற்காலிகள் எங்கும்; கண்ணில் நேரே படாத விளக்குகள்; அவைகளில் மெழுகு வர்த்தி, காஸ், மின்சார விளக்குகள் முதலிய பல ரகம்; இதற்குப் பின் தேயிலைத் தண்ணீர்; கடைசியாக இராப்

போஜனம், மெத்தையில் சயனம்; மலஜலங் கழிக்க, விளக்கப்பட்ட சட்டியும் பக்கத்திலே.

இது, கெட்டவழக்க மில்லாத நடுத்தர மனிதன் வாழ்க்கை, இவன் நல்ல இயல்புடையவன். இவனைத்தான் புனிதமான நல்வாழ்க்கை நடத்துகிறவனென்று சொல்லுகிறோம்.

ஆனால், பிறருக்குபகாரம் செய்கிறவனே, உண்மையில் நல்வாழ்க்கை யுடையவனாவான். இவ்வாறு வாழ்பவன் பிறருக்கு நன்மை செய்ய முடியுமா? நல்லது செய்யுமுன்னர், கெட்டது செய்வதை நிறுத்திவிட வேண்டும். இம் மனிதன், தனக்குத் தெரியாமலே பிறருக்குச் செய்யும் இன்னல்களை எண்ணிப் பாருங்கள்! இவன் நல்லது செய்யுமுன்னர், பல வீரச் செயல்கள் புரிய வேண்டும். கெடுதல்களை விடுக்க வீரம் வேண்டும். ஆனால், ஆசை காரணமாக இவன் வீரத்தை யிழந்து விட்டான். மார்க்கஸ் அரேலியஸ் செய்ததுபோல, இவனும் தரையில் படுக்க வேண்டும். உடலுக்கும் ஒழுக்கத்துக்கும் இது மிக நல்லது. இதனால் பாய் வேண்டாம்; தலையணை வேண்டாம்; வண்ணான் வேண்டாம். பிரசவித்த வண்ணாத்தி இச் சோம்பேறியின் துணியைத் துவைக்கிற வேலை குறையும்; பலருக்கு இவனால் வேலை குறையும். முன் தூங்கி அதிகாலையிலெழுந்தால் ஜன்னல்களுக்கு மறைவுத் திரை வேண்டியதில்லை; இரவில் விளக்கெரிக்க வேண்டாம். பகலில் போட்டிருந்த ஷர்ட்டுடன் இரவில் தூங்கலாம்; தரையில் காலை வைக்கலாம்; முற்றத்திற்குப் போகலாம்; குழாயில் முகம் கழுவலாம்; ஒரே வார்த்தையில் சொல்வதானல், இவனும் தன் வேலைக்காரரைப் பார்த்து நடந்து கொள்ளலாம்; தன் பொருட்டுச் செய்யும் வேலையை நிறுத்திவிடலாம். இவனால் இவன் துணிக்கோ, தின்பண்டத்திற்கோ, விளையாட்டுக்கோ என்று பிறருக்கு வேலை யேற்படாது. வேலைக்காரர்கள் எப்படி வேலை செய்கிறார்களென்று இவனுக்குத் தெரிய வரும். இந்தச் சுகவாழ்க்கையில் பலர் கஷ்டப்படுகிறார்கள்; அழிகிறார்கள்; தங்கள் உழைப்பைக் கொள்ளும் பிறரை வெறுக்கிறார்கள்.

இம் மனிதன் தன் சொகுசு வாழ்க்கையை விட்டாலொழிய எப்படிப் பிறருக்கு நன்மை செய்ய முடியும்? எப்படிச் சரியான வாழ்க்கை நடத்த முடியும்?

ஆனால், நம் கண்ணுக்கு மற்றவர்கள் எப்படித் தோன்றுகிறார்களெனப் பார்க்கத் தேவையில்லை; நம்மையே நாம் கவனித்துணர வேண்டும்.

என் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமற் போகலாம். நான் சொல்வதை ஆமோதிக்காமல் மௌனமாயிருக்கலாம். ஆயினும் நான் இதைத் திருப்பித் திருப்பிச் சொல்லாமலிருக்க முடியவில்லை. நூறு நாள் செய்வதை ஒரே நாளில் ஏற்றுக் கொள்ளும் பணக்காரரைப் பற்றிப் பேச வேண்டாம். நாமேற்கும் பொருள்களை யார் செய்கிறார்கள்? வேலைக்காரர்கள். அவர்கள் வாழ்க்கை இவ் வேலையில் பிழியப்படுகிறது. அவர்கள் அறிவிலிகள்; குடியர்; நாகரிகமற்றவர்கள்; சுரங்கத்திலும், ஆலையிலும், நிலத்திலும் வேலை செய்பவர்கள்; நல்ல நிலைக்கு வரலாமென்ற நம்பிக்கை யில்லாமலே சாகிறவர்கள். இதை யறியும் நடுத்தர மனிதன், ஒழுங்கான சுகவாழ்வு நடத்தும்போது, இவர்களின் நிலையைக் கண்டு இரங்காதிருக்க முடியுமா?

இச்சமயம் இதை நான் எழுதுகிறேன். இதைப் படிக்கும் நீங்கள் யாராயிருப்பினும் சரி, உங்களுக்கும் எனக்கும் சாப்பாட்டுக்குக் குறைவில்லை; நல்ல உணவு, போதிய அளவு கிடைக்கிறது. ஒரு வேளை நிறையவே கிடைக்கலாம். தின்பண்டங்களோடும் கிடைக்கலாம். சுத்தமான காற்றும் கிடைக்கிறது. வெயிலுக்குத் தக்க உடையும் குளிருக்குத் தக்க உடையுமுண்டு. பலவித விளையாட்டுக்கும் வசதிகள். இதனினும் மேலாக நமக்குப் பகலில் ஓய்வும், இரவில் சுகமாகத் தூங்க வசதியுமுண்டு. இவ்விடத்திலே நமக்கருகில் வேலைக்காரரும் வசிக்கிறார்கள். அவர்களுக்கு நல்லுணவில்லை, குடியிருக்க இடமில்லை, அணிய ஆடையில்லை, விளையாட வழியில்லை, பகலில் ஓய்வில்லை, இரவில் அமைதியில்லை; வயோதிகரும் குழந்தைகளும் பெண்களும் உழைப்பால் வருந்தி, தூக்கமின்றி, நோயால் நொந்து போயிருக்கிறார்கள். தங்களுக்குக் கிட்டாத பொருள்களைச் செய்து, நம் வாழ்க்கைக்குச் சுகத்தைத் தேடுகிறார்கள். அவர்கள் செய்யும் பொருள்கள் நமக்கு அவசியமான பொருள்களுமல்ல. ஒழுங்குள்ள மனிதன், கருணையுள்ள மனிதன், நியாயமான மனிதன் ஒருவன்—அவன் கிறிஸ்துவனா யிருக்கவேண்டுமென்றுகூட நான் சொல்லவில்லை — அவ் வேழைகள்

வாழ்க்கையை மாற்ற நினைக்க மாட்டானா? இந்த நிலையிலுள்ள அவ் வேழைகள் செய்த அனாவசியமான பொருள்களை உபயோகப்படுத்துவானா?

சுருட்டு செய்கிறவர்களுக்கு இரங்கினால், சுருட்டுக் குடிப்பதை நிறுத்தவேண்டும். சுருட்டு வாங்குவதால், சுருட்டுச் செய்வதை ஆதரிக்கிறோம். உடலைக் கெடுக்கும் சுருட்டுக்கு ஆதரவு அளிக்கிறோம். இவ்வார்த்தை தேவையில்லாப் பொருள்களுக்கெல்லாம் பொருந்தும். ரொட்டி மாவும் கஷ்டப்பட்டுத்தானே செய்கிறார்கள். அதனைத் தின்னாமலிருக்கப்படாதா? உணவு அவசியந் தேவை; விலக்க முடியாதது. ஆனால், அனாவசியமான பொருள்களுக்காகவும் தேவையில்லாத பொருள்களுக்காகவும் பிறரைச் சிரமப்படுத்துவானேன்? பொருள் செய்கிறவர்களுக்கு இரங்குவது உண்மையானால், அப் பொருளை உபயோகிக்கக் கூடாது.

இக்காலத்தில் மக்கள் இக் கருத்தை எதிர்த்துப் பேசுவார்கள். சிக்கலான பல காரணங்களைக் காட்டுவர்; எளிய மனிதனுக்கு விளங்கும்படியான காரணமொன்றும் இராது. சுக வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைத் தள்ளவேண்டா மென்பர். ஏழைக்கிரங்கிப் பேசவேண்டு மென்றும், புத்தக மெழுதவேண்டு மென்றும் சொல்லுவார்கள்; ஆனால், அவர்கள் உழைப்பின் பயனைத் தாங்கள் பெறப் பின்வாங்க மாட்டார்கள்; அது கெடுதலில்லை என்பார்கள். ஒரு வாதத்தைக் கேளுங்கள்: "பிறர் உழைப்பின் பயனை நாம் கொள்ளவில்லையானால் மற்றவர் கொள்வார்கள்." இது எதை ஒத்திருக்கிறது? "எனக்குக் கெடுதலான சாராயத்தை வாங்கிவிட்டேன். நான் குடிக்காவிட்டால் பிறர் குடிப்பார்கள், ஆகையால் நான் குடிப்பதே நல்லது!"

இன்னொரு வாதத்தைக் கேட்போம்: "சொகுசுச் சாமான்களைச் செய்வது வேலைக்காரருக்கு நல்லது, அதனால் அவர்களுக்குப் பணம் கிடைக்கிறது. பிழைப்பும் நடக்கிறது." அவர்களுக்குப் பிழைக்க வேறு வழி கொடுக்க முடியாது போனால், இவ்வாறு சொல்வது நியாயம். உழைப்பாளிக்கும் நமக்கும் தேவையற்ற சாமானைச் செய்ய வேண்டாம்.

மூன்றும் வாதமொன்றுண்டு. அதைப் பலர் சொல்லுவார்கள்: “நாம் வேலையைப் பகிர்ந்து கொள்ளுகிறோம். ஒருவன் அரசாங்க உத்தியோகஸ்தன், ஒருவன் புரோகிதன், ஒருவன் விவசாயி, வேறொருவன் தொழிலாளி, மற்றொருவன் வியாபாரி. இப்படிப் பிரித்துக் கொள்வது மிக உபயோகமானது. ஏழைகளைப்போல் இவர்களும் வேலை செய்தால், ஏழைகளின் உழைப்பின் பயனைக்கொண்டால் பாதகமில்லை. ஒருவர் அரசாங்கத்திற்கு உதவி, வேறொருவர் கோயிலுக்குதவி, மூன்றுமவர் விஞ்ஞானத்திற்கும், நாலாமவர் கலைக்கும், ஐந்தாமவர் முன் சொன்னவர்களுக்கும் வேலை செய்கிறார்கள். மனிதரிடம் கொள்ளும் உழைப்புக்குத் தகுந்தபடி கொடுத்துவிடுகிறோமென்றுணர்கிறோம்.” இது அதிசயமா யிருக்கிறது. சொகுசுப் பொருள்களை அதிகப்படுத்திக் கொண்டு, உழைப்பை அதிகப்படுத்தாதவர்களே இவ்வாறு பேசுகிறார்கள். இருப்பினும், பிறரிடம் கொள்ளும் உழைப்பின் பயனுக்குத் தங்கள் வேலையே போதுமென நிச்சயமாக நம்புகிறார்கள்.

ஒரு வேலையிலிருப்பவர் மற்றொரு வேலையிலிருப்பவரைப்பற்றி என்ன சொல்லுகிறார்? செய்யும் வேலைக்குத் தகுந்த கூலியில்லாமல் அதிக ஊதியம் பெறுகிறார்கள் என்கிறார்கள். உழவு செய்கிறவன் பெறும் கூலி அதிகமென்று அரசியல் உத்தியோகஸ்தர் சொல்லுவார். விவசாயிகள், வியாபாரிகளுக்கே அதிக வரும்படி என்பார்கள். வியாபாரிகள், அரசியல் உத்தியோகஸ்தர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள் என்பார்கள். இப்படியும் சொல்லிக்கொண்டு, வேலைக்குத் தகுந்த கூலிதான் கிடைக்கிறதென்றும் சொல்லுவார்கள். ஊதியம் வேலையைப் பொறுத்ததல்லவென்றும், ஜனங்கள் (அவ்வேலையில் வைக்கும் மதிப்பைப் பொறுத்தது என்றும் சொல்லுகிறார்கள். இது தவறான பேச்செனத் தெரிந்தும், ஒவ்வொருவரும் வேலைக்குத் தகுந்த லாபம் பெறுகிறார்களென்று மீண்டும் பேசுகிறார்கள். ஏழை ஜனங்களின் வேலையைக் கொள்வது, வேலையைப் பகிர்ந்து செய்வதாலல்ல. ஏழைகள் வாயில்லாப் பிராணிகள். அவர்களுடைய உழைப்பைக் கொள்வதற்கான அதிகாரம் பணக்காரரிடத்திலிருக்கிறது. பணக்காரருக்கு அதில்லாமல் முடியாது.

முதலில் அடைய வேண்டிய குணங்களை யடையாமல் நல் வாழ்க்கை நடத்த முடியுமென்று நினைப்பதனாலேயே இக் கஷ்டங்கள் யாவும் வருகின்றன.

இம் முதற்குணமே தன்னடக்கம்.

VIII

தன்னடக்கமில்லாமல் நல் வாழ்க்கை யிருந்ததில்லை: இருக்கவும் முடியாது. தன்னடக்கமில்லாத நல் வாழ்க்கையை நினைக்கவும் முடியாது. நல் வாழ்க்கை தன்னடக்கத்திலிருந்தே ஆரம்பிக்கிறது.

ஓர் ஏணியிலேற, முதல் படியில் காலை வைத்துத் தானே ஏறவேண்டும்? அவ்வாறே நல் வாழ்க்கையிலும். அம்முதல் படியைத்தான் முன்னோர்கள் தன்னடக்கம் அல்லது மிதமிஞ்சாமை யென்றார்கள்.

கிறிஸ்தவ போதனையில், தன்னடக்க மென்பது தன்னல மறுப்பில் அடங்குகிறது. ஆயினும், முறை மாற வில்லை. தன்னடக்கமில்லாமல் எந்தக் கிறிஸ்துவ குணமும் வராது. இந்த நியதியை யாவரும் உண்டுபண்ண வில்லை; இது இயற்கையாகவே அமைந்த சட்டம்.

ஆனால், வாழ்க்கைக்கு முதலாகிய தன்னடக்கமும் திடீரென்று வந்துவிடாது. சிறிது சிறிதாகவே வர வேண்டும்.

தன்னடக்க மென்பது, ஆசைகளிலிருந்து தப்புவது; அவைகளை ஒரு வரம்புக்குள் அடக்குவது. மக்களாசைகள் பல விதம். அவைகளை யடக்க நினைத்தால், முதலில் முதன்மையான ஆசைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முதன்மையான ஆசைகளுக்குப் பின்னர், பல ஆசைகள் வளர்ந்தன. பின்னர் வளர்ந்தவைகளாவன: உடம்பை அலங்கரித்துக் கொள்ளல், விளையாட்டு, வேடிக்கை, வீண் பேச்சு, பிறர் விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்பல் முதலியன. முதல் ஆசைகளாவன: மீதூண் விரும்பல், சோம்பல், காமம். முதலிலிருந்தே இவ்வாசைகளை அடக்க வேண்டும். பின் வளர்ந்த ஆசைகளை முதலில் கவனிக்க

வேண்டாம். இம் முதலாசைகளிலும் ஒரு முறையுண்டு. இம் முறையை, மனிதர் இயல்பைக் கொண்டும் முன்னோர் அறிவைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம்.

மீதூண் கொள்பவன் சோம்பலைத் தடுக்க முடியாது. ஓயாமல் உண்ணும் சோம்பேறி காமத்தை வெல்ல முடியாது. ஒழுக்கத்தைப் போதிப்பவர் யாவரும், முதலில் தன்னடக்கம் வேண்டுவது நாவடக்கமென்றும் சொல்வார்கள். ஆகையால், உபவாசம் அவசியம்; அதுதான் ஆரம்பம். ஆனால் இக் காலத்திலோ, முறையை மறந்து விட்டோம். முதலில் வேண்டுவது தன்னடக்கமென்பதும் தெரிவதில்லை. தன்னடக்கத்தில் முதலிலடைவதென்ன வென்பதும் தெரிவதில்லை. உபவாசத்தை அறவே மறந்து விட்டோம், அது மூடப் பழக்கமென்றும் அனுவசியமென்றும் கருதுகிறார்கள்.

நல் வாழ்க்கைக்குத் தன்னடக்கம் முதல் நிலையாவது போல, தன்னடக்கத்திற்கு உபவாசம் முதல் நிலை.

உபவாச மில்லாமல் நல் வாழ்க்கை நடத்த விரும்பலாம்; கனவு காணலாம். உபவாச மில்லாமல் நல் வாழ்க்கை நடத்த நினைப்பது எழுந்து நில்லாமல் நடக்க நினைப்பது போல.

நல் வாழ்க்கைக்கு உபவாசம் அவசியம். மீதூண் விரும்பல் கெட்ட வாழ்க்கைக்கு அடையாளம். நம் துரதிஷ்டத்தால், அதிக உணவே இக் கால வழக்கமாக இருக்கிறது.

இக் காலத்தில் நம்மெதிரே காணும் மனிதர்களைப் பாருங்கள்; அவர்கள் முகத்தையும் உடலையும் கவனியுங்கள்; தொங்கும் கன்னம், தொப்பை வயிறு, சதை சரியும் அவயவங்கள். இவை வீண் வாழ்க்கையை நன்கு காட்டி நிற்கின்றன. நம் வாழ்க்கையைக் கவனித்து, நம் எண்ணங்களைக் கவனித்து, நமக்கு எதில் உண்மையான அக்கறை உண்டென்பதை ஆராயுங்கள். உண்மை ஆசையை ஒளிக்காமல், இல்லாத ஆசையை இருப்பதாகக் காட்டாமல், முடிவு செய்வோமானால், நம்மாசை நாவிலும், உணவிலும், அதிக வுணவிலுமே இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்வோம். பரம ஏழையிலிருந்து மிக்க

பணக்காரர் வரை யாவருக்கும் வாழ்க்கையில் பிரதம ஆசையும் உயர்ந்த இன்பமும் உண்பதில்தான். ஏழைத் தொழிலாளிகளை இதற்கு விலக்காகச் சொல்லலாம். அவர்கள் வறுமை காரணமாக இந்த ஆசைக்கு உள்ளாக முடியவில்லை. அவர்களும், சமயம் வாய்க்கும்போதும், பணம் கிடைக்கும்போதும், உயர்ந்த வகுப்பினரைப் போல், இனிப்புப் பண்டங்களையும் சுவையான பண்டங்களையும் கூடிய மட்டும் வாங்கி, முடியுமட்டும் தின்றும் குடித்தும் விடுகிறார்கள். அதிகமாகத் தின்றால் அதிகச் சந்தோஷப் படுகிறார்கள்; பலமும் உடல் நலமும் வந்து விட்டதாகவும் கருதுகிறார்கள். உணவை இவ்வாறே கருதும் உயர்தர வகுப்பினர் இவர் கருத்தை உறுதிப் படுத்துகின்றனர். டாக்டர் சொல்வதைக் கேட்டு, படித்தவர்கள்கூட மாமிசம் நல்லதென்றும், சுவையுணவு இன்பத்தையும் உடல் நலத்தையும் தருமென்றும் நினைக்கிறார்கள். ஆனால், இவ் வெண்ணத்தை மறைத்து வைக்கிறார்கள்.

பணக்காரர் வாழ்க்கையைப் பாருங்கள். அவர்கள் பேச்சைக் கவனியுங்கள். பெருத்த விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். தத்துவ ஞானம், விஞ்ஞானம், கலை, கவி, பொருளாதாரம், இளைஞர் கல்வி—இவ் விஷயங்களையே பேசுவார்கள். ஆனால், அனேகருக்கு இவை அர்த்தமற்ற வெறும் பேச்சு; தங்கள் உண்மையான காரியத்திற்கிடையில் பேசுவார்கள்; காலைச் சாப்பாட்டிற்குப் பின்னும், மத்தியானச் சாப்பாட்டிற்கு முன்னும், வயிற்றில் இன்னும் கொஞ்சம் போட இடமில்லாதபோது, இப் பேச்சுக்கள் நிகழும். பெரும்பாலான மக்களுக்கு—ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி—உற்சாகத்தைத் தரும் செய்கை உண்பதேதான். எப்படிச் சாப்பிடுவது? எதைச் சாப்பிடுவது? எங்கே சாப்பிடுவது? எப்பொழுது சாப்பிடுவது? இதே கேள்விகள்.

விழாக்கள், கொண்டாட்டங்கள், நன்னாட்கள் எதுவாயினும் சரி, அதில் முக்கிய விஷயம் விருந்தே.

பிரயாணம் செய்கிறவர்களைப் பாருங்கள். அவர்கள் பேசுவதைக் கேளுங்கள். ஒரு விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். ‘கண் காட்சி, புத்தகசாலை,

சட்டசபை—இவை எவ்வளவு அழகு. ஆனால் நாம் எங்கே சாப்பிடுவது? எங்கே நல்ல சாப்பாடு கிடைக்கும்?' சாப்பாட்டுக்கு வரும்போது நல்ல சட்டை, நல்ல வாசனை. மேஜைமேலே புஷ்பங்கள்; கை குலுக்குவதையும் புன்சிரிப்பையுங் காணுங்கள்.

பலர் உள்ளத்தையும் கவனியுங்கள். அவர்கள் ஆசை எதிலுள்ளது என்பது தெரியும். சாப்பாட்டிற்கு முன் பசி தேவை. மக்களுக்குக் கொடுமையான தண்டனை எது? ரொட்டியும் தண்ணீரும் மட்டும் சாப்பிடு என்பது. வேலைக்காரரில் உயர்ந்த சம்பளம் யாருக்கு? சமையல் காரனுக்கு. வீட்டு எஜமானிக்கு முக்கிய கருத்து எதில்? நடுத்தர வகுப்புப் பெண்கள், அனேகமாக எதைப் பற்றிப் பேசுகிறார்கள்? பணக்கார வகுப்புப் பெண்கள் இதைப் பற்றி அதிகம் பேசுவதில்லை: அதன் காரணம் அவர்கள் படிப்பல்ல; அவர்களுக்குச் சமையல்காரன் இருக்கிறான். இந்த வேலையாளை விலக்கி விட்டால், அவர்கள் படும் பாடு தெரியும். பருப்பு என்ன விலை? காப்பி எப்படிப் போட்டால் நன்றாயிருக்கும்? ஹல்வா செய்வது எப்படி? இந்தப் பேச்சுத்தான் அதிகம். பல சந்தர்ப்பங்களில் கூடுகிறோம்; பெயர் வைத்தல், இழவு, கல்யாணம், நண்பர்களுக்கு நல் வரவு கூறல், அவர்களை யனுப்பல், பட்டமளித்தல், முன் நடந்த நற் செய்கைகளைக் கொண்டாடல், பெரியோர்கள் பிறந்த நாள், இறந்த நாள்—ஒரு பெரிய காரியத்திற்குக் கூடுவதுபோல் கூடுகிறோம். இது வேஷம். முக்கிய வேலை, சாப்பாடு. நல்ல ருசியான சாப்பாடு கிடைக்குமென யாவருக்கும் தெரியும். அதுதான் கூட்டத்திற்குக் காரணம். இந்த நாட்களுக்குப் பல நாள் முன்னரே பிராணிகளைக் கொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள்; சாமான்கள் வாங்குகிறார்கள். சமையல்காரன், உதவியாள், பரிமாறும் பையன்கள், வேலைக்காரிகள் ஆகிய யாவரும் உடுப்புக்களுடன் தயாராகின்றனர். மாதம் 750 ரூபாய் வாங்குகிற மேஸ்திரி பார்வையில் சமையல் நடக்கிறது. சமையல்காரர் நறுக்குகிறார்கள்; பிசைகிறார்கள்; வறுக்கிறார்கள்; அடுக்கி அலங்காரமாக வைக்கிறார்கள். விருந்தை நடத்துகிறவர் ஆர்வத்தோடும் அதிகாரத்தோடும் பார்வை யிடுகிறார்; வேலை செய்கிறார்; கணக்குப் போடுகிறார்; யோசிக்கிறார்.

தோட்டக்காரன் பூக்கள் சேகரிக்கிறான். வேலைக்காரி களுக்கும் பற்பல வேலை. இந்த விஷயத்தில் ஒரு பட்டாளமே வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான நாள் செலவாகிறது. ஒரு கல்யாணத்தை நடத்தவும், ஒரு நன்னாளைக் கொண்டாடவும் இவ்வளவு ஆரவாரம்.

நடுத்தர ஜனங்களும், ஏழை ஜனங்களும், கல்யாணமென்றாலும், இழவென்றாலும் வயிறு முட்டச் சாப்பிட வேண்டும். வயிறு முட்டச் சாப்பிடும் எண்ணம் நிறைய இருப்பதால், கிரேக்க பாஷையிலும் பிரெஞ்சு பாஷையிலும், ஒரே வார்த்தைக்குக் கல்யாணமென்றும் விருந்தென்றும் பொருள் உண்டு. பணக்காரரில் உயர்தர வகுப்பிலும், நாகரிக முதிர்ந்தவரிடையிலும் சாப்பாட்டாசையை மறைப்பது வழக்கம். அவர்களுக்கு அது சுலபம். ஏனெனில், அவர்களுக்குப் பசி கிடையாது, அவர்களுக்கு வயிறு எப்பொழுதும் நிறைந்திருக்கும்.

அவர்கள், சாப்பாடு தேவையில்லை யென்றும் அது சிரமமான காரியம் என்றும் நடிப்பார்கள்; இது வேஷம், அவர்கள் எதிர்பார்க்கும் சொகுசுப் பண்டங்களைக் கொடுக்காமல், ரொட்டியோ கஞ்சியோ கொடுத்துப் பாருங்கள். அவர்களுக்கு வரும் கோபத்தைக் காண்பீர்கள். அவர்களும், நிறைந்த வயிற்றில் ருசியான பண்டங்களைப் போட்டடைக்கவே வந்தவர்கள்.

கடை வீதியைப் பாருங்கள், என்ன பொருள் விற்கிறார்கள்? என்ன பொருளை வாங்குகிறார்கள்? அலங்கரிக்கும் பொருள்; உண்ணும் பொருள்; மீதூண் விரும்பவில்லை யானால், பசித்தபோதே சாப்பிட வேண்டும். இல்லையானால், இப்போதிருக்கும் நிலைமையே. உணவு தேவையானால், அத் தேவையைத் தீர்த்துக் கொள்ளலாம்; அது இன்பமானால், தீராது. கற்றோரும் கல்லாதோரும், ருசியான பண்டங்கள் கிடைத்தால் சாப்பிட்டுக்கொண்டேயிருப்பார்கள். தேவைக்கு வரம்புண்டு; இன்பத்திற்கோ வரம்பில்லை. உணவு தேவையானால், ரொட்டியோ, கூழோ, சாதமோ சாப்பிடலாம்; இன்பத்திற்குச் சாப்பிட, வாய்க்கு ருசியைத் தேடவேண்டும்; வாசனையை எதிர்பார்ப்போம்.

ரொட்டி தேவை; அது போதுமானது. (சுறுசுறுப்பும், பலமும், தேக நலமுமுடைய ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் இதனை மெய்ப்பிப்பர்.) ஆனல், ரொட்டியை நெய்யில் தோய்த்துச் சுட்டுத் தின்றால் ருசி. மாமிசம் வேகவைத்த குழம்பில் தோய்த்துத் தின்றால் ருசி. மாமிசத்தோடு, ஏதாவது காய்கறி சேர்த்தால் மிக்க ருசி. பல காய்கறிகள் சேர்த்து விட்டால், அதனினும் மேல். மாமிசம் நன்றாயிருக்கும். வேகவைப்பதைவிடப் பொரித்தது நன்றாயிருக்கும், வெண்ணெயும் சேர்த்துக் கொண்டால் நலம். மாமிசத்தில் சில பாகங்களை மட்டும் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டால் மேலானது. அதனோடு கடுகும் காய்கறியும் சேருங்கள். சாராயமும் சேர்த்துக் கொள்ளலாம்; செஞ்சாராயம் மிக நல்லது; இதற்குமேல் தேவையிருக்காது. ஆனல், சாராயத்திலும் குழம்பிலும் ஊறின மீனுயிருந்தால், கொஞ்சம் பார்க்கலாம். இனி, ருசியாயிருந்தாலும் சாப்பிட முடியாது போலத் தோன்றுகிறது. ஆயினும், இனிப்புப் பண்டம் சாப்பிடலாம். இரண்டு துண்டு பாதாமல்வா பாதகமில்லை. வெயிற்காலமாயிருந்தால் குளிர்ந்த பதார்த்தம் சாப்பிடலாம், மற்றக் காலத்தில் பழம் சாப்பிடலாம். ஏதோ சொற்பமான சாப்பாடு நடந்தது; இதைக் கொஞ்சம் அதிகமாக்க வேண்டுமானல், சாப்பிடுமுன் பசியைக் கிளப்ப, கொஞ்சம் பானங்கள் போடலாம். பழ வகைகளை அதிகம் சேர்க்கலாம். இனிப்பு வகைகளை அதிகப்படுத்தலாம். மேஜையில் புஷ்பங்கள் வைக்கலாம், சாப்பிடுமிடத்தை அழகு படுத்தலாம், சாப்பிடும்போது சங்கீதக் கச்சேரி நடத்தலாம்.

தடபுடலாய் நடந்த பெல்ஷாஸர் விருந்து இதற்கு முன் நிற்காது. இம்மாதிரி விருந்துகளில் தினமும் விலாப் புடைக்கத் தின்கிறவர்கள் ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதாகச் சொல்வது பொருந்துமா?

IX

பட்டினி யிருத்தல் நல்ல வாழ்க்கைக்கு இன்றி யமையாதது. பட்டினி யிருத்தல் சம்பந்தமாகவும் தன்னடக்கம் சம்பந்தமாகவும் பல கேள்விகள் எழலாம். எப்படி ஆரம்பிப்பது? எப்படிப் பட்டினி கிடப்பது? எதைச்

சாப்பிடுவது? எதை விலக்குவது? நாம் உண்மையாகப் பட்டினி கிடப்பதானால், எங்கே ஆரம்பிப்பதென்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

பட்டினி கிடப்பதா? எப்படி? ஆரம்பம் என்றுண்டா? இவ்வாறு பலர் வேடிக்கையாகப் பேசுவார்கள்.

ஒரு பாதிரியாரைப் பற்றி எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் ஒரு நாள் பேசுகிறார், ஒரு புதிய விஷயத்தைக் கண்டு பிடித்து விட்டதாக நினைத்துப் பெருமிதத்துடன் பேசுகிறார். துறந்த சன்னியாசிகளை வைகிறார். 'நம் கிறிஸ்துவ மதம் கஷ்டப்படவும் பட்டினி கிடக்கவும் சொல்லவில்லை; நன்கு மாமிசம் சாப்பிடச் சொல்லுகிறது!' கிறிஸ்து சமயம், நல்லொழுக்கம், பன்றி மாமிசம்—என்னே இவற்றின் தொடர்பு!

கிறிஸ்துவ சமய உதவியும், பிற சமயங்களின் உதவியுமில்லாத ஒரு கெட்ட காலத்தில் தவறான பல எண்ணங்களும் வழக்கங்களும் நம் வாழ்க்கையில் வந்து புகுந்தன. உணவென்னும் அஸ்திவாரத்தைக் கலக்கின்றன. ஒழுக்கம் ஆரம்பமாக வேண்டிய இடத்தில் இவ்வாறு கெடுதலேற்பட்டது. பன்றி மாமிச ஒழுக்கமும் கிறிஸ்துவமும் கைகோத்துச் செல்லச் செய்வது எவ்வளவு அறியாமை!

இவ்விரண்டும் ஒன்றாகச் செல்வதைப் பார்த்து நாம் திடுக்கிடுவதில்லை. ஏன்? நமக்கேதோ நேர்ந்துவிட்டது, கண்ணால் பார்க்கிறோம், தெரியவில்லை; காது கொடுக்கிறோம், கேட்கவில்லை; கெட்ட வாசனை, சத்தம், கெட்ட நடத்தைகள்—இவைகளுடன் பழகி விட்டால் இவைகளில் நமக்கு அருவருப்புத் தோன்றுவதே யில்லை. அவ்வாறே, நம் ஒழுக்க அறிவும் மழுங்கி விட்டது. கிறிஸ்துவ மதமும், பன்றி மாமிச ஒழுக்கமும்!

சில நாளுக்கு முன்னர், தூலா என்னும் ஊரில் ஆடு மாடு வெட்டுகிற இடத்திற்குப் போனேன். பிராணிகளுக்குக் கஷ்டமில்லாமல் வெட்டவேண்டிய புதிய வழிகளெல்லாம் செய்திருந்தார்கள். 'மூவர் ஞாயிறு' என்னும் திருநாளுக்கு முந்திய வெள்ளிக்கிழமை அங்குச் சென்றேன். அனேக பிராணிகளும் இருந்தன.

கொஞ்ச நாள் முன்னர் ஒரு நல்ல புத்தகத்தைப் படித்தேன். அது புலால் மறுத்தலைப் பற்றிப் பேசுகிறது. ‘உணவு ஒழுக்கம்’ என்னும் புத்தகம். அதைப் படித்தது முதல், வெட்டுகிற இடத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையிருந்தது. முதலில் அங்கே போக வெட்கமாயிருந்தது. தடுக்கமுடியாத கஷ்டத்தைப் பார்ப்பதானல் யாருக்கும் வெட்கம் வருதல் இயல்பே. ஆகையால், பின்னர் போவோமென்று காலங் கழித்து வந்தேன்.

கொஞ்ச நேரத்திற்கு முன் வழியில் ஒரு கசாப்புக்காரன் துலாவுக்கு போவதைப் பார்த்தேன். அவன் தன் வேலையில் கைதேர்ந்தவனல்ல. கத்தியால் குத்திக் கொல்வதே அவன் வழக்கம். நான் அவனைப் பார்த்து, ‘நீ கொல்லும் மிருகங்களிடத்து உனக்கு இரக்கம் தோன்றுவதில்லையா?’ என்று கேட்டேன். வழக்கமான பதில் வந்தது: ‘ஏன் வருத்தப்பட வேண்டும்? இக் கொலை மிகவும் தேவையானது. மாமிச உணவு அவசியமில்லையென்றும், வேண்டாத தொன்றென்றும் நான் விளக்கிய போது, அவனும் ஒப்புக்கொண்டான். இறக்கும் பிராணிகளுக்காக இரக்கப்பட வேண்டியதென்றும் தெரிந்து கொண்டான். பின்னர்ச் சொல்லுகிறன்: ‘நான் என்ன செய்வது? என் வயிற்றுப் பிழைப்பைப் பார்க்கவேண்டாமா? கொல்வதென்ருல் முதலில் பயமாகத்தானிருந்தது. என் தகப்பனுர் தம் வாழ்நாள் முழுவதிலும் ஒரு கோழிக் குஞ்சைக்கூடக் கொன்றதில்லை!’ ருஷியா தேசத்து மக்களில் பெரும்பான்மையோர், கொல்ல மனமில்லாதவர்கள். அவர்களுக்கு இரக்கமுண்டு. ஆனல் இரக்கத்தைப் பயமெனக் கருதுவார்கள். இந்த மனிதனுக்கும் இவ்வகைப் பயமிருந்தது; அது நீங்கிவிட்டது. இத் தொழில் வெள்ளி தோறும் நடைபெறுகிறதென்றும், வெள்ளி இரவு வரும்வரை வேலை யிருக்குமென்றும் இப்போது தெரிந்தது.

சில நாட்களுக்கு முன், ஒரு போர் வீரனைச் சந்தித்தேன். வயதானதால் அவன் வேலையிலிருந்து விலகி, கசாப்பு வேலையிலமர்ந்தான். அவனை நோக்கி, பிராணிகளை வெட்டுவது பரிதாபகரமான வேலை யென்று சொன்னேன். அவன் உடனே சிரித்தான். பிராணிகள் தலையெழுத்தை நாம் எப்படி மாற்றுவது என்ருன். வெகு

நேரம் இருவரும் பேசினோம். கடைசியாக, அவன் சொன்னான்: ‘சாதுவான பிராணிகள். இவைகளைக் கொலை செய்வதால் கொலையாகிய கொடுமை மட்டுமல்ல; தெரிந்து பிழை செய்த பழியும் சேரும். இது பரிதாபம்!’’

இது கொடுமை! மிருகங்கள் இறப்பதும் வருந்துவதும் அல்ல; மனிதன் தனது உயர்ந்த தூய வுணர்ச்சியை நசுக்கிக் கொல்வதே கொடுமை. ஏழை மிருகங்களிடமுள்ள இரக்கமும் தயையும் மாள்கின்றன. உண்மையில், மனித உள்ளத்திலே, கொல்லாதேயென்னும் விதி ஆழ்ந்து கிடக்கிறது.

ஒரு நாள், மாஸ்கோ நகரிலிருந்து நடந்து திரும்பினேன். போக்கு வண்டிக்காரன் ஒருவன் தன் வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னான். பல வண்டிகள் போய்க்கொண்டிருந்தன. முன் வண்டியில் ஒரு குடியன் முழு வெறியுடனிருந்தான். ஊர் வந்தது. ஒரு கொழுத்த பன்றியை வண்டியிலிருந்து வெளியே இழுத்தான். ஆடு மாடு வெட்டு மிடத்திற்கு அதை இழுத்துப் போனான். அது இரைந்து கூச்சலிட்டது. மனிதன் கத்துவது போலவே இருந்தது. நானும் என் வண்டிக்காரனும் அந்தப் பக்கம் போகும்போது பன்றியைக் கொன்று கொண்டிருந்தார்கள். ஒருவன் அதைத் தொண்டையில் கத்தியால் குத்தினான். உரத்த சத்தம் போட்டு அப் பன்றி தொண்டை கிழியக் கத்தியது; அவர்கள் பிடியிலிருந்து திமிறித் தப்பி யோடியது; இரத்தம் ஆறாய்க் கொட்டிற்று. எனக்குத் தூரப் பார்வை கொஞ்சம் மந்தம். மனிதனைப்போல் தோன்றிய பன்றியைப் பார்த்தேன்; உயிருக்குத் தவித்தலறும் குரலையும் கேட்டேன். வண்டிக்காரன் யாவற்றையும் பார்த்தான். கவனித்தும் பார்த்தான். அவர்கள் பன்றியைப் பிடித்தனர்; கீழே தள்ளினர்; கழுத்தை அறுத்தனர்; சத்தம் ஓய்ந்தது. வண்டிக்காரன் பெருமூச்சு விட்டான்: ‘மனிதர்கள் இச் செய்கைகளின் பலனை அனுபவிக்கமாட்டார்களா?’ என்றான்.

கொலை செய்வதில் மனிதனுக்கு அவ்வளவு அருவருப்பு. பார்த்ததனாலும், பழக்கத்தாலும், ஆசையாலும், ஆண்டவனுக்கு இச் செயல் உடன்பாடு என்ற கருத்தாலும், நம் நல்லுணர்ச்சிகள் அழிந்து விடுகின்றன.

வெள்ளிக்கிழமை தூலாவுக்குப் போவதெனத் தீர் மானித்தேன். சாந்தமான நண்பர் ஒருவரைக் கூட அழைத்தேன்.

அவர் சொன்னார் : 'எனக்கும் போகவேண்டு மென்ற ஆசைதான்; வெட்டுமிடத்தில் நல்ல ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் கேள்வி. ஆனால், கொல்லும் சமயத் தில் உள்ளே போகமாட்டேன்!'

'ஏன் உள்ளே போகக்கூடாது? அதைத்தானே நாம் பார்க்க வேண்டும்? மாமிசம் தின்ன வேண்டுமானால் கொல்லத்தானே வேண்டும்.'

'நான் வரமுடியாது' என்றார் மீண்டும்.

எனது நண்பர் வேட்டையில் ஆர்வமுள்ளவர். அவரே பல பறவைகளையும் மிருகங்களையும் சுட்டிருக்கிறார்!

கடைசியாக வெட்டுமிடம் போய்ச் சேர்ந்தோம். உள்ளே நுழையுமுன்னரே ஒரு துர்நாற்றம் அடித்தது; 'வார்னிஷ்' வாசனைபோல் தோன்றியது. அக்கட்டிடம், செங்கல் கட்டிடம், செஞ்சுவர்; விஸ்தாரமானது; உயர்ந்தது; வாசற்படி கடந்தோம். வலது பக்கத்தில் நான்கு புறமும் சுற்றுச்சுவருள்ள இடமிருந்தது; அதன் விஸ்தீரணம் சுமார் முக்கால் ஏகரா இருக்கும். வாரம் இருமுறை அவ்விடத்தில் மிருகங்கள் விற்பனையாகும். இதற்கருகாமையில் வேலைக்காரனுக்கு வீடிருக்கிறது. இடது பக்கத்தில் ஒரு கட்டிடம். அதற்குமேல் வளை வமைத்த ஒரு வாயில். தரை நன்கு அமைக்கப்பட்டிருந் தது. இதுதான் வெட்டும் அறை. மிருகங்களைத் தூக்கவும் தள்ளவும் யந்திரங்களிருந்தன. வேலைக்காரன் வீட்டுக்கு முன்னர் ஒரு பலகை கிடந்தது. அதில் வெட்டுவோர் இருந்தனர். ஆறு பேரைக் கண்டோம். தங்கள் சட்டையை முழங்கைக்குமேல் தூக்கி விட்டுக்கொண்டு, உள்சட்டையில் இரத்தம் தெறிக்காமல் மேலே ஒரு சட்டை யணிந்திருந்தனர். அதிலும், அவர்கள் கைகளி லும், இரத்தம் தோய்ந்திருந்தது. அவர்கள் வேலை அரை மணி நேரத்திற்கு முன்னர் முடிந்துவிட்டதால், வெறும் வெட்டறையைத்தான் பார்க்க முடிந்தது. அக் கட்டிடத் தின் இரு பக்கத்திலும் கதவுகளிருந்தபோதிலும், இரத்த

நாற்றம் பொறுக்க முடியவில்லை. எங்கும் கறுத்த ரத்தம் பட்டை பட்டையாகக் காய்ந்து கிடந்தது.

வெட்டுவோரிலொருவன் எங்களுக்கு எல்லா விடத்தையும் காண்பித்தான். காரியம் நடக்குமிடத்தையும் காண்பித்தான். அவன் சொல்லியதெல்லாம் எனக்குச் சரியாக விளங்கவில்லை. பல சமயங்களில், நாம் நேரில் பார்ப்பதை விட எண்ணிப் பார்ப்பது அதிக பயந்தரும். இந்தச் சந்தர்ப்பத்தில் அது பொய்யாயிற்று.

மறுதடவை, முன்னதாகவே போய்ச் சேர்ந்தேன். அது, மூவர் திருநாளுக்கு முந்திய வெள்ளி. ஜூன் மாதம். குளிரில்லை; முன் முறையைவிட இன்று கெட்ட நாற்றம் அதிகமாக மூக்கைத் துளைத்தது. மும்முரமாகக் காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. காம்பவுண்டுக்குள் கணக்கில்லா மிருகங்கள்; இடம் போதாமல் வெளியிலும் மிருகங்கள்.

வீதியிலும், இக் கட்டிடத்திற்கு முன்னும் பல வண்டிகள் நின்றன. அவற்றில் எருமைகள், கன்றுகள், பசுக்கள் பல கட்டப் பட்டிருந்தன. சில குதிரை வண்டிகளில் கன்றுக்குட்டிகள் அடைந்து கிடந்தன. அவை கீழே இறக்கப்பட்டன. சில வண்டிகள் அக் கட்டிடத்திலிருந்து வெளியே சென்றன. அவற்றில் செத்த எருமைகள் பல; கால்கள் விறைத்துக் கிடந்தன. இரத்தத்தோடு குடலும் தெரிந்தது. வியாபாரிகள் கையில் சவுக்கு வைத்துக்கொண்டு அங்குமிங்கும் திரிந்தனர்; பேரம் பேசினர்; மிருகங்களை அறுக்க இட்டுக்கொண்டு போயினர். பணத்திலும் லாபத்திலும் கண்ணும் கருத்துமா யிருந்தனர். அவர்களுக்கு ரத்தத்திலுள்ள அணுக்களை ஆராயவோ, கொலை செய்தல் தவறு சரியா வென்றெண்ணவோ, நேரமில்லை!

வெட்டுவோ ரொருவரையும் வெளியே காணோம். எல்லாரும் உள்ளே வேலையா யிருந்தார்கள். அன்று, நூறு கொலை நடந்திருக்கும். அவ்வறைக்குப் போக யத்தனித்தேன்; திடீரென்று நின்றுவிட்டேன். ஏன்? கொல்லப்பட்ட மிருகங்களை வெளியே தூக்கவில்லை. மேலும், இரத்தம் சொட்டுச் சொட்டென்று மேலிருந்து

வடிந்துகொண் டிருந்தது. வெட்டுகிறவர்கள் பேரிலெல்லாம் இரத்தம். நான் உள்ளே சென்றிருந்தாலும் என் பேரிலும் இரத்தமா யிருக்கும். ஒரு மிருகத்தைத் தூக்கிலிருந்து இறக்கினார்கள். மற்றொன்றைத் தூக்கிச் சென்றார்கள். ஒரு பக்கம் ஆட்டின் தோலை உரித்தார்கள்.

எதிர்வாசல் வழியாக ஒரு சிவந்த பெரிய கொழுத்த எருதை இருவர் உள்ளே இழுத்து வந்தனர். அது வந்ததும், வெட்டுகிறவன் ஒரு கத்தியால் கழுத்தில் குத்தினான். நாலு காலும் ஒடிந்தது போல், அவ்வெருது தன் வயிறு தரையில் மோத விழுந்தது. பக்க வசமாய் திரும்பிக்கொண்டு முன் காலையும் பின் காலையும் உதறியது. மற்றொரு கொலையாளி அதன்மேல் திடீரெனக் குதித்து உட்கார்ந்து கொம்பைப் பிடித்துக் கொண்டு அதன் தலையைப் பூமியில் அழுத்தினான். மற்றொருவன் கழுத்தை அறுத்தான். இரத்தம் கழுத்திலிருந்து ஒழுகியது. ஒரு பையன் ஓடிவந்து ஒரு தட்டு வைத்து இரத்தத்தைப் பிடித்தான். இந்த நேரமெல்லாம் எருது தப்பித்துக்கொள்ள தலையை ஆட்டிப் பார்த்தது. ஆகாயத்தில் காலை உதைத்துப் பார்த்தது. தட்டில் இரத்தம் நிறைகிறது; எருதின் உயிர் இன்னும் போகவில்லை; பெருமூச்சு விடுவது போல் வயிறு மேலும் கீழும் அசைகிறது. கால் விரைவாகத் துடிக்கிறது. தட்டு நிறைந்ததும் இரத்தத்தைப் பையன் தூக்கிப் போய் விட்டான். வேறு தட்டைக் கொண்டு வந்து வைத்தான் மற்றொரு பையன். அதுவும் நிறைந்தது. இன்னும் அதன் உயிர் போகவில்லை; பின்காலாட்டமும் ஓயவில்லை.

இரத்தம் கொட்டுவது நின்றது. அதன் தலையை தூக்கிக் கட்டினான்; தோலை யுரித்தான். அதன் துடிப்பு நிற்கவில்லை. தலைத்தோலை உரித்ததும் அங்குள்ள வெள்ளை நரம்புகள் தெரிந்தன. தோலும் ஒரு பாகம் தொங்கிற்று. இன்னும் அதன் ஆட்டம் நிற்கவில்லை. வேறொருவன் கால்களை யொடித்து வெட்டினான். இன்னும் கால் நுனியும் வயிறும் அசைந்தன. வெட்டின கால்களை யெல்லாம் ஒரு பக்கமாகக் குவித்தான்; கடைசியாக, அவ்வெருது உயிரற்று அசைவற்றுக் கிடந்தது.

வாசற்படியில் நின்ற வண்ணமே இரண்டாவது, மூன்றாவது, நாலாவது கொலையையும் பார்க்கிறேன். ஒவ்

வொன்றுக்கும் இம்மாதிரியே நடக்கிறது. வெட்டும் துடிப்பும் இம்மாதிரியே. ஆனல் சில சமயங்களில், வெட்டு சரியாகப் படுவதில்லை; குறி தப்புகிறது; அது கத்துகிறது; தவ்வுகிறது; தப்ப முயலுகிறது. அப்போது, இரண்டு கம்பிக்கு நடுவில் தலையை வைத்துக் கிட்டிபோட்டு வெட்டு கிறார்கள்.

மற்றொரு கதவு வழியாகவும் வந்து பார்த்தேன். இவைகளையே கண்டேன். ஆனல் நெருங்கிப் பார்க்க முடிந்தது. தெளிவாகத் தெரிந்தது. ஒரு விஷயம் இங்குக் கூடப் பார்த்தேன். மிருகங்களை எப்படிக் கொண்டு வருகி றார்களென்பது இங்கிருந்தே தெரிந்தது. கொம்பில் கயிற் றைக் கட்டிக் கொண்டு வருவது வழக்கம். இவர்கள் முன்னல் இழுப்பார்கள். அது பின்னல் இழுக்கும், நாற் றத்தைக் கண்டு மயங்கும். செல்ல மறுக்கும், கத்தும், தயங்கும். இருவர் பலத்தாலும் இழுக்க முடிவதில்லை. ஒருவன் பின்னே வாலைப் பிடித்து, மடக்கி, வளைத்து, முறுக்கி ஒடிப்பான். வலி பொறுக்க மாட்டாமல் சிறிது நகரும்.

ஒருவன் எருதுகளைத் தீர்த்ததும், மற்றொருவன் தன் மாடுகளைக் கொண்டு வருவான். முதலில் கொண்டு வந்தது ஒரு காளை மாடு. பார்வைக்கு அழகா யிருந்தது. இளங் காளை. உறுதியான உடல். நல்ல பலம். முன்னலிழுத்த போது, தலையைக் குனிந்துகொண்டு அது நகரவே யில்லை. கொலையாளி ஒருவன் பின்னலே போனன். இயந்திரத்தின் விசையைத் திருகுவதுபோல் வாலை ஒடித்தான். வலி பொறுக்காமல், கயிறு பிடித்திருந்தவர்களையும் தள்ளிக் கொண்டு முன்னே சென்றது. இன்னொரு முறை வாலை யொடித்ததும் வேண்டிய இடத்திற்குச் சென்றது. வெட்டு கிறவன் அருகில் வந்தான். குறிவைத்தான். போட்டான். குறி தப்பிற்று. காளை குதித்தது, கதறியது; எடுத்தது ஓட்டம். யாவரும் விலகினர். கொலையாளிகள் கயிற்றை உடனே பிடித்தனர். இழுத்தனர். மாட்டை நிறுத்தினர். வாலை முறித்து வழக்கமான இடத்தில் கொண்டு போய் நிறுத்தினர். மறு போடு. மாண்டது மாடு. வெட்ட வெட்ட, தோல் உரிக்க உரிக்க, உயிர் தயங்கித் தயங்கி, கடைசியாகப் போய்விட்டது.

‘இப் பிசாசு! தடிமாடு சரியான பக்கத்தில்கூட விழவில்லை’ என்று வேலைக்காரன் முணுமுணுத்தான்.

நிமிஷம் ஐந்தாயிற்று. அழகான தோலைக் காணோம். கண்ணிலே கறுப்பு நிறம் காணோம். உயிர் ததும்பிய கண், இப்பொழுது ஆடாமல், பளிங்கு போல் வெண்மையாகக் கிடந்தது.

சிறு மிருகங்களை கொல்லும் அறை தனி. அதுவும் பெரியதா யிருக்கிறது. இங்கு, கன்றுக்குட்டிகளைக் கொல்வது. நான் இங்கு வருமுன்னரே வேலை முடிந்துவிட்டது. இங்கு வெட்டுவோர் இருவரே. ஒருவன் சுருட்டுக் குடித்துக்கொண் டிருந்தான். மற்ெறாருவன் செத்த ஆட்டின் வயிற்றை அமுக்கிக்கொண் டிருந்தான். அந்த நீண்ட இருண்ட அறையில் நாற்றம் அதிகமா யிருந்தது. எனக்குப் பின் ஒருவன் ஒரு ஆட்டுக்குட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தான். கால்கள் கட்டப்பட்டிருந்தன. அது சந்தோஷமாக வாலை யாட்டிக்கொண் டிருந்தது. அக் குட்டியை அவன் மேஜைமேல் வைத்தான். அவன் வெட்டுகிறவர்களுக்கு தெரிந்தவன்போல் தெரிந்தது. விளையாட்டாகப் பேசிக் கொண்டார்கள். சுருட்டுக் குடித்தவன் தீட்டிய கத்தியோடு வந்தான். ஓய்வுநாள்களைப் பற்றிப் பேசினார்கள். ஆட்டுக்குட்டி சத்தமில்லாமல் படுத்திருந்தது. வால் மட்டும் ஆடிற்று. ஆட்டுக்குட்டியின் சொந்தக்காரன் கஷ்டமின்றி அதன் தலையைப் பிடித்து மெதுவாக அமுக்கினான். வெட்டுகிறவன் அதன் தலையில் ஒரு கையை வைத்து கழுத்தில் கத்திவைத்து வெட்டிவிட்டான். ஆட்டுக்குட்டி சிலிர்த்தது. வால் விறைத்தது. அசைவு நின்றது. வெட்டுகிறவன் தன் சுருட்டணைந்திருப்பதைப் பார்த்து மறுபடியும் பொருத்தினான். இரத்தம் வடிந்தது. குட்டி துடித்தது. தங்கு தடையின்றி அவர்கள் பேச்சு நடந்துகொண்டிருந்தது. இதனினும் கொடுமை உண்டா?

ஆயிரக்கணக்கான அடுப்படிகளில் தினம் அறுபடும் கோழிக்குஞ்சுகளைப் பற்றி என்ன சொல்வது? இரத்தம் வடிய, குஞ்சு அசைந்து நடுங்கித் தள்ளாடிக் குதிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?

பாருங்கள்! நாகரீகம் வாய்ந்த ஒழுங்குள்ள ஒரு பெண்மணி செத்த குஞ்சை வெட்டுகிறாள். மிக ஒழுங்காக

வெட்டுகிறதாக அவளுக்கு இதில் ஒரு கர்வமுங்கூட உண்டு.

அவளுடைய டாக்டர், அவளுடம்பு மிக மெலிந்த தென்றும், அவளுக்கு காய்கறி உணவு போதாதென்றும் மாமிச உணவு தேவை யென்றும் சொன்னர். மிக்க உணர்ச்சி யுடையவளாகையால் மிருகங்களுக்கு ஒரு தீங்கும் செய்யச் சக்தியில்லாதவ ளென்றும் டாக்டர் கூறினர்.

அவள் பலமற்றவ ளென்பது உண்மைதான். மனித ருக்கு இயற்கையில் பொருந்தாத மாமிசத்தைச் சாப்பிடுவ தால்தான் இப் பலவீனம். மாமிசம் தின்பவள் மிருகங் களுக்குத் தீங்கு செய்யாமல் எப்படி முடியும்?

* * *

இவைகளெல்லாம் நமக்குத் தெரியாவென்று மழுப்ப முடியாது. நாம் நெருப்புக் கோழிகளல்ல. நம் தலையை மூடிக் கொண்டால் உலகம் இருண்டுவிடாது. நாம் என்ன எண்ணுகிறேமோ, அது எப்படிக் கிடைக் கிறதென்று பார்க்கத் தயாரில்லை. மாமிசம் அவசியமா? அது உபயோகமா? அது அவசியமில்லை. அதனல் மிருகத் தன்மை ஏற்படுகிறது; விபசாரத்தையும் குடியையும் அது வளர்க்கிறது. இதன் உண்மை அனேக பெண்களுக்குத் தெரியும். தூய்மைக்கும் மாமிசத்திற்கும் வெகு தூரம். நல்ல சிறு பெண்களையும் மாமிசம் கெடுத்துவிடும். நன் னடத்தையை நாடும்பொழுது அவர்கள் மாமிசத்தை விட்டுவிடுகிருர்கள்.

ஆகையால் நான் சொல்ல வேண்டுவ தென்ன?

நாம் நல்வாழ்க்கை நடத்த விரும்பினல், முறையாக அனுசரிக்க வேண்டிய விதிகள் சில உண்டு. நல் வாழ்க்கையில் பிரியமிருப்பது உண்மையானல், அம் முறையை விடமுடியாது. இம்முறையில் முதலிலடைவது தன்னடக்கம் அல்லது கட்டுப்பாடு. தன்னடக்கத்தை யடைவதிலே, அதற்குள் முதலில் அடைய வேண்டியது, பின்னர் அடைய வேண்டியதென்ற முறையுள்ளது. தன் னடக்கத்திற்குள் முதல்படி, சாப்பாட்டில் கட்டுப்பாடு— விரதம். அதாவது குறிப்பிட்ட நேரத்திற்கு உணவு கொள்

ளாம லிருப்பது அல்லது சில உணவுகளை எப்பொழுதும் நீக்குவது. இவ்விதத்தில், முதலிலே அனுசரிப்பது மாமிசத்தை நீக்குதல். ஏன்? மாமிசத்தால் விளையும் கெடுதல்கள் பல. இது உள்ளத்தில் அன்பை வேரோடு களைகிறது. கொடுமையை விதைக்கிறது. காமத்தைத் தூண்டுகிறது. ருசியான உணவின்மேலுள்ள ஆசையாலேயே மாமிசத்தை நாடுகிறோம்.

'உணவில் ஒழுக்கம்' என்னும் புத்தகத்தில் ஏன் மாமிசத்தை விடவேண்டுமென்பதற்குத் தக்க காரணங்கள் கூறப்படுகின்றன. எல்லா மக்களும் அல்லது நல்ல நடத்தையை விரும்பும் மக்களேனும் மாமிசத்தை விலக்க வேண்டும்.

மாமிச உணவு தவறென்றும், அஃது தூய்மைக்கு மாறுபட்டதென்றும் வெகுநாளுக்கு முன்னரே தெரிந்திருந்தும், சைவ உணவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் விதியைக் கடைப்பிடியாதது எவ்வளவு கேடானது! அறிவைக்கொண்டு விஷயங்களை ஆராயாது மக்கள் அபிப்பிராயத்தையே நாடுபவரே இக் கேள்விகளைக் கேட்பர்.

எல்லாவித முன்னேற்றத்திற்கும் ஒழுக்கமே அடிப்படை. அதில் மெதுவாகத்தான் முன்னேற முடியும். முன்னேற்றம் இடைவிடாது தொடர்ந்திருக்க வேண்டும்; எப்பொழுதாவது தோன்றி மறையக் கூடாது; வளர்ச்சி வர வர அதிகரிக்க வேண்டும்; இதுவே உண்மையான முன்னேற்றம்.

சைவ வளர்ச்சியும் இம்மாதிரியே; இதனை நூல்கள் வாயிலாக அறியலாம்; அனுபவ மூலமாகவும் அறியலாம். முதலில், கண்ட மாமிசங்களையெல்லாம் தின்னும் காலம்; பின்னர் சிலவகை மாமிசங்களையே தின்னுங் காலம்; பிறகு மாமிசங்களை விட்டுச் சைவ உணவுக்கு வருங் காலம். இப்போது இச் சைவ உணர்ச்சி பெருகி வருகிறது; பரவி வருகிறது. சென்ற பத்து வருஷமாக இவ்வியக்கத்தின் பலமதிகம். வருஷந்தோறும் இவ்விஷயமாகப் பல புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன. சைவ உணவு மட்டும் அருந்துவோரின் தொகை அதிகரித்து வருகிறது. சிறப்பாக ஜெர்மனி, இங்கிலாந்து,

அமெரிக்கா முதலிய தேசங்களில் வருஷந்தோறும் சைவச் சாப்பாட்டு விடுதிகள் அதிகரிக்கின்றன.

வானுலகத்தை இம் மண்ணுலகில் நிறுவ முயல்வோருக்கு இவ்வியக்கம் எவ்வளவு மகிழ்ச்சியைத் தரும்! இம் மகிழ்ச்சி, சைவ உணவு முக்கியமான படி என்பதனுலல்ல. எல்லாப் படிகளும் முக்கியமானவையே. இப் படியேறினுல் நம் முயற்சி உண்மையென்றும், ஒழுக்கத்தில் பூரணமடைய நாம் ஆசைப்படுவது உண்மையென்றும் புலப்படும். முதல் படியில் ஆரம்பித்து முறையே தொடங்குகிருேம்.

ஒருவன் வீட்டின் மேல்மாடியை அடைய விரும்புகிருன். சுவரில் பல இடங்களில் ஏறிப் பார்க்கிருன். ஏற முடிவதில்லை. கடைசியில் மேல்மாடிக்குப் போகும் படிகளைக் காணுகிருன். இதைத் தவிர வேறு வழியில்லையென நன்கு புலப்படுகிறது. முதல் படியில் காலை வைக்கிருன். அவன் சந்தோஷத்தை அளவிட முடியுமா?

உணர்வழிக்கும் பொருளை உண்பதேன்?

I

ஜனங்கள் உணர்வழிக்கும் பொருள்களை உண்பதன், காரணமென்ன? கள், சாராயம், அபினி, புகையிலை அதிகமாகப் பழக்கத்திலில்லாத இதர பொருள்கள் - இவைகளை உண்ணும் வழக்கம் என் ஆரம்பித்தது? என் இவ்வளவு விரைவாகப் பரவியது? நாகரிகமடைந்தோர், நாகரிகமற்றோர் - எல்லாவித மக்களிடத்தும் என் இன்னும் பரவிக்கொண் டிருக்கிறது? கள், சாராய மில்லாத விடத்து, லாகிரி வஸ்துக்களைப் பார்க்கிறோம்; புகையிலை உபயோகிப்பதை எங்கும் பார்க்கிறோம். என்?

உணர்வழிக்கும் பொருளை விரும்புவதேன்?

குடிக்க ஆரம்பித்ததன் காரணமும் இப்போது குடிக்கும் காரணமும் ஒருவனைக் கேளுங்கள். "குடித்தால் சந்தோஷமா யிருக்கிறது. எல்லோரும் குடிக்கிறார்களே" என்று பதில் சொல்வான். "எனக்குக் குடியால் ஒரு மனவெழுச்சி பிறக்கிறது" என்பதையும் சேர்த்துப் பதில் கூறலாம். குடி நல்லதா கெட்டதா வென்று ஒரு சிறிதும் யோசிக்காத சிலர், "உடலுக்கு நன்மை தருகிறது; பலம் தருகிறது" என்றும் சொல்லலாம். கள் உடலுக்கு நன்மை பயவா தென்பதை அவர்களறியார்கள்.

புகையிலை உபயோகிப்பவனை, உபயோகிக்கஆரம்பித்த தற்குக் காரணமும் இப்போது உபயோகிப்பதற்குக் காரணமும் கேளுங்கள்; "பொழுது போக்க; எல்லோரும் உபயோகிக்கிறார்களே!" என்று பதில் சொல்வான்.

"பொழுது போக்க; மனவெழுச்சிக்காக; பலர் செய்வதால்": இதுதான் காரணமானால், கைவிரல்களைப் பிசையலாம்; விசிலடிக்கலாம்; பாட்டுப் பாடலாம்; வாத்தியம் வாசிக்கலாம்; இதுமாதிரியானவற்றைச் செய்

யலாம்; அதாவது, இயற்கைப் பொருளை வீணாக்கலாகாது; தேகப் பிரயாசையால் வந்த பொருளைச் செலவழிக்கலாகாது; தனக்கும் பிறருக்கும் கெடுதல் தருவனவற்றைச் செய்யலாகாது. குடி, புகையிலை, அபினி முதலியவற்றை உண்டாக்க, லட்சக்கணக்கான மக்கள் உழைக்கவேண்டியிருக்கிறது. ஜனங்கள் குடியிருக்க இடம் போதாமல் சிரமப்படும் இடங்களிற்கூட, நல்ல நிலங்களில் லட்சக்கணக்கான ஏகராவில், புகையிலை, சணல், உருளைக்கிழங்கு, திராட்சை பயிரிடவேண்டியிருக்கிறது. மேலும், இந்தக் கெட்ட பொருள்களை உபயோகிப்பதால், பல கொடிய இன்னல்கள் விளைகின்றன; இது யாவருக்கும் தெரிந்தது; எல்லாரும் ஒப்புக்கொள்வது; சண்டையும் தொத்து வியாதியும் காரணமாக அழியும் ஜனங்களைவிட, அதிக ஜனங்கள் இவற்ருல் மாண்டு போகின்றனர். இது ஜனங்களுக்குத் தெரியும்; ஆகையால், இவைகளைப் 'பொழுது போக்கவும்,' 'மனவெழுச்சிக்கும்,' 'எல்லாரும் செய்வதாலும்' ஜனங்கள் உபயோகிக்கவில்லை.

இதற்கு வேறு காரணமிருக்க வேண்டும். எங்கும் எப்பொழுதும் குழந்தைகளிடத்து அன்பு செலுத்தும் பெற்ருேர்களைப் பார்க்கிருேம்; பிள்ளைகளுக்காக எல்லாக் கஷ்டமும் படத் தயாராயிருக்கிருர்கள்; ஆயினும், கள், சாராயம், புகையிலையில் பணத்தைச் செலவுசெய்கிருர்கள்; இதில் செலவிடும் பணம் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரம் கொடுக்கப் போதுமானது. குழந்தைகளின் பசிப்பிணியைத் தீர்ப்பதும், அவர்களை வறுமையிலிருந்து மீட்பதும் ஒன்று; உணர்வழிக்கும் பொருளை உண்பது மற்ருென்று; முன்னதைவிடுத்துப் பின்னதைச் செய்வதன் காரணமென்ன? எல்லோரும் செய்கிருர்களென்பதும், சந்தோஷத்தைத் தருகிறதென்பதும் போதிய காரணங்களாகா. ஆகையால், 'பொழுதைப் போக்கவும்,' 'மனவெழுச்சிக்காகவும்' ஒருவன் அவ்வாறு செய்யவில்லை. இதற்கு வேறு தக்க தூண்டுதல் இருத்தல் வேண்டும்.

இவ்விஷயத்தைப்பற்றிப் புத்தகங்களில் படித்தும், ஜனங்களைக் கவனித்தும், சிறப்பாக நான் குடிக்கவும் புகையிலை போடவும் எப்படி ஆரம்பித்தேன் என்பதைக் கவனித்தும், காரணம் கண்டுபிடித்தேன். அதைச் சொல்லுகிறேன்.

ஒருவன் தன் வாழ்க்கையைக் கவனிப்பானுனல், தன்னிடத்து இரண்டு தன்மைகள் இருப்பதைக்காண்பான்: ஒன்று அறிவற்ற மிருகத்தன்மை; மற்றொன்று அறிவுள்ள தெய்வத்தன்மை. ஒருவனுக்குள்ளேயிருக்கும் குருட்டு மிருகம் உண்கிறது, அருந்துகிறது, ஓய்ந்திருக்கிறது, உறங்குகிறது; குழந்தைகள் பெறுகிறது; சாவி கொடுத்த யந்திரம்போல் அசைகிறது; இக்குருட்டு மிருகத்தோடு இணைக்கப்பட்ட அறிவுள்ள தெய்வம் தானுக ஒன்றும் செய்வதில்லை; செய்யவேண்டியதை மிருகத்திற்குச் சொல்லுகிறது. தெய்வத்தன்மைக்கு உடன்பாடான காரியத்தை மிருகம் செய்யும்போது அதனேடு ஒத்துழைக்கிறது; உடன்பாடில்லாத காரியம் செய்யும்போது ஒத்துக்கொள்ளாமலிருக்கிறது.

அறியும் தன்மையைத் திசைகாட்டும் கருவியின் முனைக்கு ஒப்பிடலாம். அது ஒரு முனையால் வடக்கையே காட்டி, மற்றொரு முனையால் தெற்கையே காட்டுகிறது. அந்த முனைகளுக்குக் கீழே ஒரு மெல்லிய கோடிருக்கும் முனையும் கோடும் வடக்கே பார்த்திருக்கும்போது, கோடு தெரியாது; இரண்டும் மாறி வெவ்வேறு பக்கம் காட்டும் போது கோடு தெரியும்.

அறிவுள்ள தெய்வத்தன்மையே மனச்சாட்சியாய் நிற்கிறது. திசைக்கருவியின் முனைகள் வடக்கையும் தெற்கையும் காட்டுவதுபோல், மனச்சாட்சியும் நல்லதையும் கெட்டதையும் காட்டுகிறது. மனச்சாட்சியின்படி நடந்தால், அது இருப்பது நமக்குத் தெரிவதில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாக ஏதிலாவது நடந்துவிட்டால், தெய்வத்தன்மையான மனச்சாட்சி நன்கு புலனுகிறது; மிருகத்தன்மையானது தெய்வத் தன்மையிலிருந்து மாறுபட்டது தெரிகிறது, ஒரு கப்பலோட்டி தன் கப்பல் வழி தப்பிப் போயிருப்பதைக் கண்டான்; கண்டதும் கப்பல் போவதை நிறுத்துவான்; பாயும் விரியாது. யந்திரமும் ஓடாது. மேலும், கப்பல் ஓடுவதானல் திசைகாட்டும் கருவியை அனுசரித்து,கப்பல்போகும் திசையைத் திருத்திக்கொள்ள வேண்டும்; அல்லது, கப்பல் திசை தப்பியதென்ற எண்ணத்தை ஒழிக்கவேண்டும். மனிதனும் இப்படித்தான். மனச்சாட்சி வழியைக்காட்டுகிறது. அவ்வழியே போகும் மிருகத்தன்மை வழியைத் தவறிவிட்டால், பின்னரும்

திரும்பி நேர்வழிக்கு வந்து மேலே செல்லலாம்; அல்லது மிருகத்தன்மை போகும் வழி தவறென்று மனச்சாட்சி சொல்வதைத் தனக்கே ஒளித்துவிட்டு, மேலே செல்லலாம்.

மனித வாழ்க்கையின் நடவடிக்கைகள் இரண்டே விதமென்று கூறிவிடலாம். 1. மனச்சாட்சியை அனுசரித்துச் செய்தல்; 2. அல்லது மனச்சாட்சி சொல்வதைத் தனக்கே தெரிய விடாமல் மறைத்து முன்போலவே வாழ்தல்.

சிலர் முந்திய வழியில் நிற்பர்; பிறர் பின்வழியில். முதல்வழியை அடையும் விதம் ஒன்றுதான்: அறிவுப் பெருக்கு, உள்ளத்தின் ஒளி இவற்றைக் கவனித்து நடப்பது. இரண்டாவது வழியை அடையும் விதம்: மனச்சாட்சியைத் தெரியாமல் மறைப்பது. மனச்சாட்சியை மறைக்க இருவித உபாயங்களுண்டு. ஒன்றை வெளி உபாயமெனலாம்; மற்றொன்றை உள் உபாய மெனலாம். வெளி உபாயமாவது: மனச்சாட்சி சொல்வதைக் கேளாதிருக்கும்படி மனதைப் பல வேலைகளில் செலுத்துவது. உள் உபாயமாவது: மனச்சாட்சியைத் தொழிற்பட முடியாதபடி அழித்துவிடுவது.

ஒரு பொருளைப் பார்க்க வேண்டாமென்றால், ஒருவன் இரண்டு உபாயங்களைக் கைக்கொள்ளலாம். அப்பொருளின்மேல் கண் செலுத்தாமல், மனதைக் கவரும் வேறு பொருள்களைப் பார்க்கலாம்; அல்லது கண்ணின் ஒளி அப்பொருளிடம் செல்லாமல் தடுக்கலாம். அவ்வாறே, மனச்சாட்சியை இரு விதமாக மறைக்கலாம்; வேலையிலும் கவலையிலும் வேடிக்கையிலும் விளையாட்டிலும் கவனத்தைச் செலுத்துவது வெளி உபாயம்; கவனத்தை மனச்சாட்சியிடம் செல்லாமல் தடுப்பது உள் உபாயம். நன்னடத்தை விஷயத்தில் மந்தமான உணர்ச்சியுள்ளவர்கள் வெளி உபாயத்தால் மனச்சாட்சியை மறைக்கலாம். நன்னடத்தையில் கூரிய உணர்ச்சி யுள்ளவர்களுக்கு அந்த உபாயம் போதுவதில்லை.

மனச்சாட்சியின் வழிக்கும் வாழ்க்கைக்குமுள்ள மாறுபாட்டில் கவனம் செல்லாமல், அதை முழுதும் தடுக்க வெளி உபாயத்தால் முடிவதில்லை. இம்மனச்சாட்சி, வாழ்க்கைக்கு இடையூறு செய்கிறது; முன்புபோல் வாழ முடி

கிறதில்லை; அதற்காக, தவறாத உள் உபாயத்தை நாடி, மயக்கந்தரும் பொருள்களால் மூளையில் விஷத்தையேற்றி, மனச்சாட்சியை அழிக்கிறார்கள். கள்ளுண்டவர் நஞ்சுண்டவர்.

மனச்சாட்சிக்கு மாறுபட்டு வாழ்கிறவன் மனச்சாட்சியை அனுசரித்துத் தன் வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளத் தைரியமற்றவனாகிறான். வெளி உபாயத்தின் சக்தி போதாமையாலோ, அல்லது வெளி உபாயம் பழக்கமாகி விட்டதாலோ, மனச்சாட்சியை மறைக்கவேண்டி மூளையைக் கொஞ்சநேரமேனும் வேலை செய்யாமலிருக்கும்படி தடுக்கவிரும்புகிறான். ஒரு பொருளைப் பார்க்க வேண்டாமென்றால், கண்ணை மூடிக் கொள்ளுகிறோமல்லவா?

II

குடி, அபினி, புகையிலை — இவைகளை உலகம் முழுவதிலும் உபயோகிப்பது ருசிக்கல்ல; சந்தோஷத்திற்கல்ல; சுகத்திற்கல்ல; விளையாட்டிற்கல்ல; ஆனால், மனச்சாட்சியின் வேண்டுகோளை மறைப்பதற்கே!

ஒருநாள் தெரு வழியாகப் போனபோது, மோட்டார் ஓட்டிகள் இருவர் பேசிக்கொண்டிருக்கக் கண்டேன். ஒருவன் சொல்லுகிறான்: ‘அதற்கென்ன சந்தேகம், குடி வெறியில்லையானால் அந்தக் காரியத்தைச் செய்ய ஒருவன் வெட்கப்படுவான்.’ குடிவெறியில் செய்யும் ஒரு காரியத்தைக் குடிவெறியில்லாத போது செய்ய வெட்கப்படுகிறான். மக்கள் போதைப்பொருள்களை நாடுவதன் காரணத்தை இவ்வார்த்தைகளில் காண்கிறோம். மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்துவிட்டு, அதனால் வரும் வெட்கத்தை மாற்றவே மக்கள் போதைப்பொருள்களை நாடுகிறார்கள். அல்லது மிருகத்தன்மையால் தூண்டப்பட்டு, மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்வதற்குத் தயாராக அப்பொருள்களை உண்கிறார்கள்.

போதைப்பொருளை உண்ணாதவன் தாசி வீட்டுக்குப் போக வெட்கப்படுகிறான்; திருட வெட்கப்படுகிறான்; கொல்ல வெட்கப்படுகிறான். குடித்தவன், இச்செயல் எதற்கும் வெட்கப்படுவதில்லை. குற்றம் செய்யும்போது மனச்

சாட்சி தடுப்பதால், பேதைமக்கள் போதையை நாடுகிறார்கள். குடியென்னும் குற்றத்தைக் கொண்டாரை நாண் என்னும் நல்லாள் காண வெட்கிப் புறங்காட்டிச் செல்கிறாள்.

ஒரு சமையற்காரன் சொன்ன சாட்சியம் ஞாபகத்திற்கு வருகிறது. எனக்குச் சொந்தக்காரக் கிழவியிடம் அவன் வேலை செய்தான். அவளைக் கொலைசெய்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அவனுக்குப் பிரியமான வேலைக்காரியையும் வெளியில் அனுப்பிவிட்டான். கொலை முடிக்கும் வேளை வந்தது. ஒரு கத்தியுடன் படுக்கையறைக்குப் போக நினைத்தான். தைரியமில்லை. குடிவெறியில்லாத போது இக்காரியம் செய்ய வெட்கமாயிருந்ததாம்! படுக்கையறைக்குப் போகாமல் திரும்பினான். வாட்கா சாராயத்தில் இரண்டு புட்டி போட்டான்; கொலை செய்யத் தயாரானான். செய்தும் முடித்தான்.

பத்தில் ஒன்பது குற்றங்கள் இம்மாதிரியே செய்யப்படுகின்றன; 'தைரியத்தை விடாமலிருக்க, குடி!'

ஒழுக்கங் கெட்ட பெண்களில் பாதிப்பேர் குடியால் அந்நிலை அடைந்தவர்கள். குடிப்பவர்களே அதிகமாகத் தாசி வீட்டுக்குப் போகிறார்கள். மனச்சாட்சியை அழிக்க வல்லது குடி என்பது ஜனங்களுக்குத் தெரியும்; அதற்காகவே குடியும் தெரிந்துதான் உபயோகப்படுகிறது.

மக்கள் தங்கள் மனச்சாட்சியை மழுங்கச் செய்வதற்கல்லாமல், பிறரைக் குற்றத்தில் ஏவும் போதும் அவர்கள் மனச்சாட்சியையும் மழுங்கச் செய்கிறார்கள். யுத்தங்களில் கைச் சண்டைக்கு முன்னர், சிப்பாய்கள் குடிக்கிறார்கள். செபாஸ்தபூல் சண்டையில் பிரெஞ்சுச் சிப்பாய்கள் எல்லோரும் குடித்திருந்தார்கள்.

ஒரு கோட்டையைப் பிடித்தவுடன், சிப்பாய்கள் அதை அழிப்பதில்லை; பாலரையும் முதியோரையும் கொல்வதில்லை. அவர்களை நன்கு குடிக்கச் செய்துவிட்டால், பிறகு நினைப்ப தெல்லாம் செய்து முடிப்பார்கள்.

இழைத்த தவறுகள் மனச்சாட்சியைப் புண்படுத்துகின்றன. அப்பொழுது, மக்கள் குடிக்க ஆரம்பிக்கிறார்

களென்று ஒவ்வொருவருக்கும் தெரியும். நன்கு கவனித்தால், நடத்தை கெட்டவர்களே போதைப் பொருளை நிரம்ப நாடுகிறார்களென்பது தெரியும். கொள்ளைக்காரர் கூட்டமும், திருடர்களும், தாசிகளும், குடிவெறியில்லாமல் வாழ முடியாது.

மனச்சாட்சி புண்படுவதனாலேதான், உணர்வழிக்கும் பொருளை மக்கள் உண்கிறார்களென்பதை ஒவ்வொருவரும் அறிவர், ஒப்புக்கொள்வர். தீயநெறியில் ஒழுகுவோரும், மனச்சாட்சியை மழுங்கச்செய்ய, போதைப் பொருளை உண்கிறார்கள். வெறியினால் மனச்சாட்சி மழுங்குகிறதென்று ஒவ்வொருவருக்கும் தெரியும், ஒப்புக்கொள்வார்கள். குடிவெறியில்லாதவன் ஒரு நிமிஷங்கூட நினைக்கவும் ஒவ்வாத காரியத்தை, குடிவெறியிலுள்ளவன் செய்யக்கூடும். ஒவ்வொருவரும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், ஒரு அதிசயம். இவ்வெறியால் திருட்டு, கொலை, ஹிம்சை முதலியன நடவாதபோதும், ஒரு பெருங் குற்றத்திற்குப் பின்னல்லாமல் வேறு சமயத்தில் குடித்தபோதும், கெட்ட தொழிலல்லவென்று கருதப்படும் தொழிலை நடத்துகிறவர் குடித்தபோதும், நிறையக் குடித்து விடாமல் பல தடவைகளில் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்தபோதும், இவ்வெறி மனச்சாட்சியை மழுங்கச் செய்யாதென்று கருதுகிறோம்!

ருஷியனொருவன் சாப்பாட்டுக்குமுன்னர், ஒரு புட்டி வாட்கா குடிக்கிறான். சாப்பாட்டுடன் ஒரு புட்டி. பிரெஞ்சுக்காரன் அப்சிந்தி என்னும் மதுவைக் குடிக்கிறான். ஆங்கிலேயன் திராட்சை சாராயம். ஜெர்மானியன் பீர். காசுள்ள சீனத்தான் கொஞ்சம் அபினி தின்கிறான். எல்லோருக்கும், சுருட்டு. இவை சந்தோஷத்திற்காகச் செய்வனவென்றும், மனச்சாட்சிக்கு இவற்றால் ஒருவிதக் கெடுதலு மில்லையென்றும் கருதலாம்.

வழக்கமாகவுள்ள குடிவெறி காரணமாகக் குற்றங்களொன்றும் நடப்பதில்லை யென்றும், கொலை, களவுகள் அதனாலேற்படாதென்றும், அறிவில்லாமல் வழக்கமாகச் செய்யும் சில கெட்ட காரியங்களே நடக்கலாமென்றும், அவை தாமாக நடந்தனவென்றும், அக்குடியாலல்லவென்றும் சொல்வதுண்டு. துரைத்தனத்தார் தண்டிக்கக்கூடிய

குற்றத்தைச் செய்யாதவர்கள் மனச்சாட்சியை மழுங்கச் செய்யவேண்டிய தில்லையென்றும், வழக்கமாகவே குடிக்கிற மக்களின் வாழ்க்கையும் நல்வாழ்க்கையா யிருக்கிறதென்றும், அவர்கள் குடிக்காவிட்டாலும் அவர்கள் வாழ்க்கை அவ்வாறே யிருக்குமென்றும் கருதப்படுகிறது. போதைப் பொருள்களை அடிக்கடி உபயோகப்படுத்துவதால், மனச்சாட்சி கெட்டுவிடாதென்று கருதுகிறார்கள்.

சாராயத்தாலும், புகையிலையாலும் மனம் மாறுபடுவதை ஒவ்வொருவரும் அனுபவத்தால் அறிந்திருப்பார்கள், சிற்சில காரியங்களைச் செய்வதில் உண்டாகும் வெட்கத்தைக் குடி ஒழிக்கிறது. மனச்சாட்சி சிறிது புண்பட்ட போதும், ஒருவன் குடியை நாடுகிறான். குடி வெறியில் தன் நிலைமை தெரிவதில்லை. கொஞ்சங் கொஞ்சமாகப் பல தடவை குடிப்பினும், ஒரே தடவை அதிகமாகக் குடிப்பினும், பலன் ஒன்றுதான். இவைகளைத் தெரிந்திருந்தும், குடியோ, சுருட்டோ கொஞ்சமாக உபயோகிக்கிறவர்கள் தங்கள் மனச்சாட்சியின்படியே நடப்பதாகவும் வாசனைக்கும் சந்தோஷத்திற்குமே இவற்றை உபயோகிப்பதாகவும் எண்ணுகிறார்கள்.

விஷயத்தை உண்மையாகவும், விருப்பு வெறுப்பின்றியும் யோசித்துப் பார்க்கவேண்டும். சாக்குப் போக்குச் சொல்லலாகாது. கீழ்க்கண்ட உண்மைகள் தெரியவரும். ஒன்று: எப்போதாவது ஒரு தரம் நிறையக் குடிப்பதாலுண்டாகும் உணர்வு மயக்கம் வழக்கமாகக் குடிப்பதாலும் உண்டாகும். இரண்டு விதத்திலும் மனச்சாட்சி மழுங்கும். முதலில் குடிக்கும்போது, மூளை அதிவிரைவாக வேலை செய்வதனால், பின்னர் மூளையின் தொழில் மந்தமாகிறது. ஒரேபடியாகச் சாப்பிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் இதே பலன்தான்.

இரண்டு: உணர்வையழிக்கும் பொருள்கள் மனச்சாட்சியை மழுங்கச் செய்கின்றன; கொலை, கொள்ளை, ஹிம்சை முதலிய கொடுமைகள் குடிவெறியால் மனச்சாட்சி மழுங்கிய நிலையிலே நடக்கின்றன. அம்மாதிரியே, வெறியில்லாதபோது பேசத்தகாத வார்த்தைகள், மனச்சாட்சி மயக்கத்தில் பேசப்படுகின்றன; கெட்ட உணர்ச்சிகள் எழுகின்றன. மனச்சாட்சி மழுங்காதபோது அவை ஏற்படமாட்டா.

மூன்று: திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும், தாசிகளுக்கும் மனச்சாட்சியை அழிக்கப் போதைப் பொருள் வேண்டியிருக்கிறது. அதேபோல, கௌரவமுள்ள ஒழுங்கான தொழில் என்று கருதப்படும் தொழில் செய்வோரும் போதைப் பொருளை நாடுகின்றனர்; ஏனென்றால், அவர்கள் மனச்சாட்சி அவர்கள் தொழிலைக் கண்டிக்கிறது!

சுருங்கச் சொல்லின், ஏழைகளும், பெரும் பதவியிலிருப்போரும் அதிகமாகவோ, குறைவாகவோ, எப்பொழுதாவது அல்லது முறையாக, போதைப்பொருளை உண்கிறார்களென்றால், ஒரே காரணத்திற்காகத்தான் உண்கிறார்கள்; மனச்சாட்சியின் வார்த்தையைக் கேட்காமலிருக்கவே; நடத்தும் வாழ்க்கைக்கும் மனச்சாட்சியின் வார்த்தைக்குமுள்ள மாறுபாட்டை மறந்திருக்கும் பொருட்டே.

III

புகையிலை உள்பட எல்லாப் போதைப்பொருள்களும் மேலே காட்டிய காரணத்திற்காகவே உபயோகமாகின்றன. இதர போதைப் பொருள்களைவிட அதிகமாக உபயோகப்படுவதும், அதிகக் கெடுதல் தரக்கூடியதுமானது, புகையிலை.

புகையிலை மன எழுச்சியைத் தருகிறதென்றும், எண்ணங்களைத் துலக்குகிறதென்றும், மற்ற வழக்கங்களைப் போலவே வருகிறதென்றும், மனச்சாட்சியை அழிக்கும் தன்மை கள்ளுக்கிருப்பதுபோல் இதற்கில்லையென்றும் சிலர் கருதுகிறார்கள். முதலில் சுருட்டுக்குடிக்க ஆரம்பித்ததைக் கவனித்தால், இது தவறென்பது தெரியவரும். கள்ளைப்போலவே புகையிலையும் மனச்சாட்சியை மழுங்கச் செய்யும்; இதன்பொருட்டே புகையிலையை உபயோகிக்கிறார்கள். மனதைத் தெளிவுபடுத்துவதற்காகவும், மனவெழுச்சிக்காகவுமிருந்தால், புகையிலையில் இவ்வளவு விருப்பமிருக்க நியாயமில்லை; இவ்வதிக விருப்பமும் சில சமயங்களில்தான் ஏற்படுகிறது. மனதைத் தெளிவுபடுத்துவது காரணமாயிருந்தால்; உணவைவிடப் புகையிலையை முக்கியமாகக் கருதமாட்டார்கள்; சாப்பாடில்லையாயி

னும் பாதகமில்லை, புகையிலைதான் வேண்டுமென்று மக்கள் சொல்லமாட்டார்கள்.

எஜமானியைக் கொன்ற சமையற்காரனைப்பற்றி முன்னே சொன்னேன். அவன் எஜமானியின் படுக்கை அறைக்குப் போனான். கத்தியால் கழுத்தில் குத்தினான். அவள் அலறிக்கொண்டு கீழே விழுந்தாள். இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெள்ளமாக வந்தது. சமையற்காரன் நடுங்க ஆரம்பித்தான். தைரியத்தை இழந்தான். "காரியத்தை முடிக்க முடியவில்லை. அந்த அறையிலிருந்து வெளியே சென்றேன்; உட்கார்ந்தேன். ஒரு சிகரெட்டுக் குடித்தேன்" என்று அவன் சொல்லுகிறான். புகையிலை அவனுடைய உணர்வை அழித்தபின்னர்தான் அறைக்கு வந்து, கழுத்தை முழுதும் வெட்டி விட்டுச் சாமான்களைத் தேட ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்தில் சுருட்டுக் குடிக்க ஆசைப்பட்டதன் காரணமென்ன? மனதைத் தெளிவுபடுத்தவும் சந்தோஷமாயிருக்கவுமல்ல; தான் நினைத்த காரியத்தை முடிக்கத் தடையாயிருந்த மனச்சாட்சியின் சக்தியைக் குறைக்கச் செய்வதற்காகவே.

புகை குடிப்போர், தமக்குச் சிற்சில சமயங்களிலேயே சுருட்டு தேவையாயிருப்பதை யறிவர். நான் சுருட்டுக் குடித்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்; அக்காலத்தில் எப்பொழுதும் புகையிலை தேவையாகவே இருந்தது. என் வாழ்க்கையில் சில விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்து, அவைகளை மறக்க வேண்டுமென்று நினைத்தபோது, புகையிலை அவசியமாகத் தோன்றியது. ஒன்றும் செய்யாமல் தனியே உட்காருகிறேன். வேலை செய்ய வேண்டுமென்று தெரிகிறது. ஆனால், வேலை செய்ய மனம் வரவில்லை. ஆகையால், சும்மா உட்கார்ந்துகொண்டு சுருட்டுக் குடிக்கிறேன். ஒருவர் வீட்டிற்கு ஐந்து மணிக்கு வருவதாகச் சொல்லி யிருந்தேன்; வேறொரு இடத்தில் வெகு நேரம் தங்கி விட்டேன்; என் வாக்குப்படி போகாதது ஞாபகத்திற்கு வருகிறது; அதை நினைக்கவே எனக்குப் பிடிக்கவில்லை: ஆகையால், சுருட்டுக் குடிக்கிறேன். எனக்குக் கோபம் வருகிறது; கெட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறேன்; நான் செய்வது தப்பு என்றும் அதை நிறுத்த

வேண்டுமென்றும் தெரிகிறது; ஆனால், என் கோபத்திற்கு இடங் கொடுக்க விரும்புகிறேன்; ஆகையால், புகை பிடித்துக் கொண்டு, கோபமாயிருக்கிறேன். நான் சீட்டு விளையாடுகிறேன்; எதிர்பாராத அளவு பொருளைத் தோற்று விடுகிறேன்; ஆகையால், சுருட்டுக் குடிக்கிறேன். தப்பான வழியில் நடந்து விட்டேன்; ஒரு காரியத்தைச் சரியாகச் செய்யவில்லை; சில விஷயங்கள் அலங்கோலமாயின; என் பொறுப்பை ஒப்புக்கொள்ள இஷ்டப்படுவதில்லை; பிறர்பேரில் குற்றத்தைச் சாட்டுகிறேன்; அப்போது சுருட்டுக் குடிக்கிறேன். சில விஷயங்களை எழுதுகிறேன்; எழுதியது முழுதும் திருப்தியாக இல்லை; எழுதியதைத் திருப்பியும் திருத்தி எழுதலாம்; ஆனால், அந்த விஷயத்தை மேலே எழுதி முடிக்க நினைக்கிறேன்; ஆகையால் சுருட்டுக் குடிக்கிறேன். ஒரு விஷயத்தைப் பற்றி வாதம் செய்கிறோம்; நான் சொல்வது எதிரிக்கு புரியவில்லை; அவன் சொல்வது எனக்கு விளங்கவில்லை; என் எண்ணங்களைச் சொல்லிப் பேசிக் கொண்டேயிருக்கிறேன்; அப்பொழுதும் சுருட்டு.

புகையிலைக்கும் மற்றப் போதைப் பொருள்களுக்கும் வித்தியாசமுண்டு. புகையிலை சுலபமாக வெறி தருகிறது. கெடுதலில்லாதது போல் தோன்றுகிறது. சிரமமின்றிக் கையில் கொண்டுபோகக் கூடியது. மனதைத் தொந்தரவு செய்யும் சாதாரண சமயங்களிலும் உபயோகிக்கக் கூடியது. அபினி, கள், சாராயம் முதலியவற்றை உபயோகிப்பதற்குச் சில கருவிகள் வேண்டியிருக்கின்றன. அவைகளை எப்பொழுதும் கையில் கொண்டுபோக முடிவதில்லை. ஆனால், புகையிலையையும் அதை மடிக்கக் காகிதத்தையும் சுலபமாகக் கொண்டு போகலாம். அபினி சாப்பிடுகிறவர்களும் குடிகாரர்களும் வெறுப்புக்கு ஆளாகிறார்கள்; புகையிலை குடிப்பவர்களை வெறுப்பதில்லை. அபினும் கள்ளும் எல்லா உணர்ச்சிகளுக்கும் செய்கைகளுக்கும் தொடர்ந்த ஒரு காலத்திற்கு உபயோகப்படுகின்றன; புகையிலையை ஒரு காரியத்துக்கு மட்டும் உபயோகிக்கலாம். செய்யக் கூடாததைச் செய்ய விரும்புகிறாய்; ஆகையால் சுருட்டுக் குடிக்கிறாய். கூடாத செய்கையை முடிக்க வேண்டிய வெறியைப் பெறுகிறாய்; அல்லது செய்யக் கூடாததைச் செய்து விட்டாய். மறுபடியும்

ஒரு சுருட்டுக் குடிக்கிறாய். செய்கை தவறு என்ற தொந்தரவான எண்ணம் மறைகிறது. மற்ற வேலைகளில் அச் செய்கையைப் பின்னர் மறந்து விடுகிறோம்.

ஆகையால், சுருட்டுக் குடிப்பது வழக்கத்தாலல்ல, பொழுது போக்குவதற்கல்ல. செய்து முடித்த செய்கையாலோ, எடுத்துக்கொண்ட செய்கையாலோ மனச்சாட்சிக்கு வரும் தொந்தரவை மறக்கவே குடி ஏற்பட்டது. இதைப் பலருடைய உதாரணத்தைப் பார்த்தே தெரிந்து கொண்டோம். இனி மனிதனது வாழ்க்கைமுறைக்கும் சுருட்டுக் குடிக்கும் ஆசைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?

வாலிபர்கள் எப்பொழுது சுருட்டுக் குடிக்க ஆரம்பிக்கிறார்கள்? அனேகமாக பையன்களின் கள்ளங் கபடமற்ற தன்மை நீங்கிய பிறகு தான். நல்லவர்களுடனே கூடியிருக்கும் போது சுருட்டை விட்டவர்கள் கெட்டவர்களுடன் சேர்ந்தபோது திரும்பவும் சுருட்டை உபயோகப் படுத்துவதேன்? சூதாடுவோரில் அனேகமாக எல்லோரும் சுருட்டுக் குடிப்பதேன்? நல்ல நடத்தையுள்ள பெண்கள் ஏன் சுருட்டு அதிகமாகக் குடிப்பதில்லை? தாசிகள் யாவரும், பைத்தியக்காரர் யாவரும், புகை குடிப்பதேன்? வழக்கமென்றால், யாருக்கும் வழக்கமாயிருக்க வேண்டுமல்லவா? ஆகையால், புகையிலையும் மனச்சாட்சியை அழிக்கவே என்பதை அறிகிறோம்; புகையிலையின் உபயோகம் தெரிகிறது.

சுருட்டுப் பிடிப்போரைக் கவனித்தால், அவர்கள் எவ்வாறு தங்கள் மனச்சாட்சியை அழித்துக் கொண்டார்களென்பது தெரியும். புகை குடிப்பவன், தான் பிறரிடம் காட்ட வேண்டிய மரியாதையை மறக்கிறான். கொஞ்சமும் கவனிப்பதில்லை. குடிக்காதபோது செய்வதெல்லாம் அறவே விட்டுவிடுகிறான். பிறருடைய அமைதியையும் சுகத்தையும், தேக நலத்தையும் நம் நன்மை கருதிக் கெடுப்பது அடாத செய்கை யென்றும், நாகரிகமற்றதென்றும், மனிதத்தன்மைக் கேற்காததென்றும் சொற்ப அறிவுள்ளவனும் அறிவான். ஜனங்களிருக்கும் அறையை ஈரமாக்க மாட்டான். அருகே கூச்சல் போடமாட்டான். அவ்வறைக்குள், கெட்ட காற்றையோ

குளிர்ந்த காற்றையோ செலுத்த மாட்டான். பிறருக்கு எவ்விதத் தொந்தரவும் செய்ய மாட்டான். ஆனால் சுருட்டுக் குடிப்பவன், புகை குடியாத பெண்களும் குழந்தைகளும் இருக்கும் அறையில் புகை குடிக்க அஞ்சமாட்டான். ஆயிரத்தி லொருவன்தான் அப்படிச் செய்வது தவறென உணர்பவன்.

சில புகைக் குடியர்கள் அருகிலிருப்பவர்களைப் பார்த்து, 'நான் இங்குக் குடிப்பதில் உங்களுக்கு ஆட்சேபனையில்லை யென்று நினைக்கிறேன்' என்று சொல்வார்கள். அருகிலிருப்பவர்கள் 'பாதகமில்லை' என்பது வழக்கம். (புகை குடியாதவர்களுக்கு, சுருட்டுப் புகை பிடிக்காது. நாறும். குடித்த சுருட்டுத் துண்டுகளை கண்ணாடிகளிலும், கோப்பைகளிலும், தட்டுக்களிலும், காண்பது கஷ்டமாயிருக்கும்.) புகை குடியாத பெரியவர்களுக்குக் கூட புகையிலைப் புகைக்கு ஆட்சேபனையில்லை யென்றே வைத்துக் கொள்வோம். குழந்தைகளுக்கு இப்புகை பிடிக்காது. நன்மையுமில்லை. அவர்கள் அனுமதியை யார் கேட்டுக் கொண்டு புகை குடிக்கிறார்கள்? மற்ற விஷயங்களில் மரியாதையும் மனிதத் தன்மையு முள்ளவர்கள், சிறு அறைகளில் சாப்பிட்ட பின்னர் புகை குடித்து, அந்த அறையிலுள்ள காற்றைப் புகையிலைப் புகையால் விஷக் காற்றாக்குகின்றனர். மனச் சாட்சியை அறவே ஒழித்து இவ்வாறு செய்கின்றனர்.

மூளை வேலை செய்கிறவர்களுக்குச் சுருட்டு மிக்க ஒத்தாசை யென்று சொல்வதுண்டு. நானும் சொல்லி வந்தேன். ஒருவன் நினைக்கும் எண்ணங்களைக் கணக்கிட்டால் அவை அதிகமாகலாம்; புகை குடித்தவன், தன் எண்ணங்களைக் கணக்கிட முடியாததாலும், அளக்க முடியாததாலும் அவ்வாறு தோன்றுகிறது. புகை குடித்தவன் எதை எண்ண வேண்டுமோ அதை எண்ணும் சக்தியற்றவனாகையினாலே, அவன் மூளையில் பல எண்ணங்கள் செல்கின்றன.

ஒருவன் வேலை செய்யும்போது, அவனிடத்து இரு தன்மைகள் உள்ளன. ஒன்று வேலை செய்கிறது: மற்றொன்று செய்த வேலையைச் சரிபார்க்கிறது. வேலை நன்கு கவனிக்கப்பட்டால், வேலை மெல்ல நடக்கும்; ஆனால், நன்

ருக நடக்கும். அதே போல, கவனிக்கும் தன்மை மயங்கிக் கிடக்கும்போது, வேலை விரைவாக நடக்கும்; ஆனால், வேலைத் திறமை பாழடையும்.

'சுருட்டில்லையானால் எழுத முடியாது. ஒரு வேலையும் ஓடாது; ஆரம்பிக்கிறேன்; பின்னர்ச் செய்ய முடியவில்லை' என்று சொல்வார்கள். யானும் அவ்வாறு சொல்லியதுண்டு. அதன் பொருளென்ன? எழுதுவதற்கு விஷயமில்லாமலிருக்கலாம்; அல்லது விஷயம் மனதில் தெளிவுபடாமலிருக்கலாம். விஷயம் இப்பொழுது தான் சிறிதாகப் புலனாகிறது. புகையில்லாத போது, நம்மிடத்துள்ள சரிபார்க்கும் தன்மையும் அவ்வாறே சொல்லுகிறது. நீ புகை பிடிப்பதில்லையானால், ஆரம்பித்ததை நிறுத்திவைப்பாய். உன் எண்ணங்கள் தெளிவுபடும் வரை பொறுத்திருப்பாய். சிறிது சிறிது புலப்படும் விஷயங்களில் உன் கவனத்தைச் செலுத்தி அவைகளைத் தெளிவுபடச் செய்வாய்; தடைகளைத் தீர்ப்பாய்; எண்ணங்களை ஆராய்ந்து பார்ப்பாய். ஆனால் நீ புகை குடித்தால், சரிபார்க்கும் தன்மை மயங்கி விடுகிறது. உன் வேலைக்கு இடைஞ்சல் நீக்கப்படுகிறது. புகையில்லாதபோது சிறியதாய்த் தோன்றியது இப்போது பெரியதாய்த் தோன்றும். விளங்காதது விளங்குவதுபோல் தோன்றும். தடைகள் பறந்து விட்டன. நீ தொடர்ந்து எழுதுகிறாய். அதிகமாகவும் விரைவாகவும் எழுதுகிறாய்.

IV

ஆனால் ஒரு கேள்வி: கொஞ்சப் புகையிலையினாலோ கள்ளினாலோ நமக்கேற்படும் சிறிய மாறுபாட்டால் பல பெரிய இன்னல்களா விளையக்கூடும்? 'ஒருவன் அபினி அல்லது கஞ்சா குடித்து, அல்லது திராட்சை ரசச் சாராயம் குடித்துக் கீழே விழுந்து பொறி கலங்கி விட்டால், பெரிய இடைஞ்சல்கள் நேருவது இயல்பே. ஆனால், கொஞ்சப் புகையிலையால் பெருங் கெடுதலேற்படாது' என்று சொல்வார்கள். கொஞ்சப் போதையாலும், புத்தி மயக்கத்தாலும் ஒன்றும் பிரமாதமாய் விடப் போவதில்லையென்று தோன்றலாம். இவ்வாறு நினைப்பதை எதற்கு உவமிக்கலாம்? ஒரு கல்லின்மேல் கடிகாரத்தை விட்டெறிந்தால்தான் கடிகாரம் கெட்டு விடுமென்றும், கொஞ்

சம் தூசி அதற்குள் போனால் கெடுதலில்லை யென்றும் நினைப்பது போலாகும்.

ஒன்றை நினையுங்கள். வாழ்க்கையை இயக்கும் பெரிய வேலை கையாலும், காலாலும், முதுகாலும் செய்யப்படுவ தில்லை; ஆனால் நம் உணர்ச்சியாலே செய்யப்படுகிறது. இவ் வுணர்ச்சியில் உண்டாகும் வேறுபாடே பின்வரும் காரியங்களைத் தீர்மானிக்கிறது. ஆனால், இவ்வேறுபாடு சிறிது தான்; அறிந்து கொள்ளவும் கஷ்டமானது.

புருலோபர் என்னும் ருஷிய ஓவியக்காரர் தம் மாணவன் தீட்டிய சித்திரத்தைத் திருத்தினர். திருத்திய சித்திரத்தை மாணவன் பார்த்தான். மகிழ்ந்தான். மாண வன் கூறுகிறான்: 'ஐயனே! ஒரு சிறிய திருத்தத்தைத் தானே தாங்கள் செய்தீர்கள்? ஆனால் ஓவியம் வெகு தூரம் மாறி இப்பொழுது அழகு பொலிந்து கிடக் கிறதே!' ஆசிரியர் அதற்குச் சொல்லுகிறார்: 'சிறிய திருத்தம் எங்கே ஆரம்பிக்கிறதோ அங்கேதான் கலை ஆரம்பிக்கிறது.'

இம்மொழி, கலைக்குமட்டும் பொருந்துவதன்று: வாழ்க் கைக்கும் நன்கு பொருந்துகிறது. சிறிய செய்கை எங்கே ஆரம்பமாகிறதோ, அங்கே தான் வாழ்க்கையும் ஆரம்ப மாகிறது. நமக்கு வெகு சிறிதாகவும் அணுவளவாகவும் தோன்றும் மாறுபாடுகளே வாழ்க்கையின் ஆரம்பம். வெளியில் தோன்றும் பெரிய மாறுபாடுகளால் வாழ்க்கை நடப்பதில்லை; மனிதர்கள் அங்குமிங்கும் திரிவதும், ஒரு வரோடொருவர் முரண்படுவதும், சண்டை செய்வதும் ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்துவதும் வாழ்க்கை யன்று. அணுவினுஞ் சிறிய மாறுதல்களிலேயே நம் வாழ்வு இருக்கிறது.

இராச்கோல் நிகோபர்‡ கிழவியையும் அவள் சகோ தரியையும் கொன்றபோது அவன் உண்மை வாழ்க்கை யைக் காண முடியாது. ஒரு யந்திரம் போலவே அக் கொலையைச் செய்தான். தன்னால் தடுக்க முடியாததைச் செய்தான். வெகு காலத்திற்கு முன்னர்த் துப்பாக்கியில் போட்ட குண்டு வெடித்துத்தானே தீரும்? ஒரு கிழவி

‡ இராச்கோல் நிகோபர் ஒரு நவீனத்தின் கதா நாயகன்.

கொலையுண்டாள். வேருெருத்தி முன் நின்ருள். அவன் கையில் கோடரி இருந்தது.

இராச்கோல் நிகோபரின் உண்மை வாழ்க்கை, கிழவியின் சகோதரியைக் கண்ட போதல்ல. கிழவியைக் காண்பதற்கு முன்னர், அன்னியர் வீட்டில் கொலை செய்யப் போகுமுன்னர், கோடரியைக் கையிலெடுக்கு முன்னர், அக் கோடரியை மறைக்கச் சட்டையில் ஒரு பை ஏற்படுத்து முன்னர், அவன் தன் அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தபோது, கிழவியைப்பற்றி சிறிதும் நினைக்காதபோது, ஒருயிரைக் கொலை செய்தல் ஒருவனிஷ்டப்படி செய்யுங் காரியமாவென்ற யோசனையே எழாத போது, பீட்டர்ஸ்பர்க்கில் வசிக்கலாமாவென்று யோசித்த போது, தாயாரிடம் பணம் வாங்கலாமா கூடாதாவென்று யோசித்தபோது, கிழவியைத் தவிர்த்த பிற நினைப்புக்கள் வந்தபோது—அவன் உண்மை வாழ்க்கை நடந்தது. கிழவியைக் கொல்லலாமென்ற தீர்மானமானது மிருகத் தன்மை வேலை செய்து கொண்டிருக்கும்போது ஏற்படவில்லை. ஒரு கிழவியைக் கொன்று, கையிலேந்திய கோடரியுடன் வேருெருத்தியைப் பார்த்தபோது இத் தீர்மானம் ஏற்பட்டதல்ல. இத் தீர்மானம் செய்தது, கொலையாகிய காரியம் செய்யாதபோது; நினைத்துக் கொண்டிருந்த போது; உணர்ச்சி சுறுசுறுப்பாயிருந்தபோது. அப்போது உணர்ச்சியில் சிறு மாறுதல்கள் உண்டாயின. இத்தகைய சமயங்களில், நாம் பல விஷயங்களை நிச்சயப்படுத்தும் போது, நம் அறிவு கலக்கமற்றுத் தெளிவாயிருக்க வேண்டும். அந்தச் சமயத்தில், விஷயத்தை யோசித்து முடிவு செய்வதற்கு ஒரு புட்டி சாராயம் அல்லது ஒரு சுருட்டு தடையாயிருக்கலாம்; யோசனையைத் தள்ளி வைக்க நேரும்; மனச்சாட்சியின் சொல் கேளாது, ஒரு வேளை முடிவுக்கு வரினும், அம்முடிவு தாழ்ந்த நம் மிருகத் தன்மைக்கு ஒத்திருக்கும். இராச்கோல் நிகோபர் செய்த முடிவுபோல் ஆகலாம்.

அற்ப மாறுதல்கள்! ஆனல், அவைகளால் மிகப் பெரிய, மிகப் பயங்கரமான பயன்கள் விளைகின்றனவே! மனிதன் கட்டிய முடிவால் பல மாறுதல்கள் வரும். வீடு, சொத்து, உடம்பு பாழாகலாம். ஆனல், அவை மனிதன் மனதில் மறைந்து கிடப்பதை விடப் பெரியவைகளல்ல.

வெளியில் நடப்பதன் முடிவு மன வுணர்ச்சிக்குள்ளே வரையறுக்கப் பட்டிருக்கிறது.

மனச்சாட்சி யுலகத்தில் நடக்கும் அணுவளவு மாறுதலால், எல்லை கடந்து எண்ணறற்கரிய பெரும் பயன் நேரிடலாம்.

நாம் செய்யும் செய்கைகள் நம் அறிவால் நடக்கின்றனவா, அல்லது விதியால் விதிக்கப்பட்டனவா என்ற கேள்விக்கும் நான் சொல்லி வந்ததற்கும் தொடர்பிருப்பதாக நினைக்கலாகாது. அக் கேள்வியையோ வேறு கேள்வியையோ இங்குக் கவனிக்க அவசியமில்லை. மனிதன் தன் விருப்பப்படி நடக்க முடியுமா முடியாதா என்ற கேள்விக்கு (-என் அபிப்பிராயப்படி இக்கேள்வி சரியல்ல-) பதில் சொல்லாமல் ஒன்றை மட்டும் கவனிக்க வேண்டும். உணர்ச்சியில் ஏற்படும் வெகு நுண்ணிய மாறுதல்களால் மனிதரியக்கம் கட்டுப்பட் டிருக்கிறது. நாம் விதியை ஒப்புக்கொண்டாலும் இல்லையானாலும், மேலே சொன்னது உண்மை. இச்சிறு மாறுதல்கள் எச்சமயம் நடக்கின்றன வென்று கூர்மையாகக் கவனிக்க வேண்டும். பொருள்களைத் தராசில் நிறுக்கும்போது கவனிப்பதுபோல் இதைக் கவனிக்க வேண்டும். மனச்சாட்சி சரியாக வேலை செய்ய வேண்டும். அது வேலை செய்ய, அறிவு கலங்காதிருக்கவேண்டும். அதற்கு வேண்டிய அனுகூலங்களைத் தேடிக்கொண்டு, தடைகளை நீக்கவேண்டும். போதைப் பொருளால் மனச்சாட்சியின் வேலைக்குத் தடை செய்தலும் அதன் வேலையில் குழப்பமேற்படுத்தலும் தவறு.

மனிதன் தெய்வத்தன்மை யுடைவன்; மிருகத்தன்மை யுடையவன். ஒரு கடிகாரத்தை இரண்டுவிதமாகத் திருப்பலாம். ஒன்று, மணி காட்டும் முள்ளைத் திருப்புவது மற்றொன்று உள் சக்கரத்தைத் திருப்புவது. அவ்வாறே, மனிதனை இயக்க வழிகள் இரண்டு. ஒன்று, தெய்வத்தன்மையைத் தூண்டுவதால். மற்றொன்று மிருகத்தன்மையைத் தூண்டுவதால். ஒரு கடிகாரத்தைத் திருப்ப, உள்ளே உள்ள சக்கரங்களின் மூலம் வேலை செய்தலே நலம். மனிதன் உள்சக்கரமாகிய உணர்ச்சி மூலம் வேலை செய்தலே நலம். ஒரு கடியாரத்தில் உள்சக்கரத்தைக் கொண்டு வேலை செய்வதானல், அதிகக் கவனத்தோடு வேலை செய்ய வேண்

டும். அம்மாதிரியே, உணர்ச்சியின் துடிப்பையும் தெளிவையும் கவனிக்க வேண்டும்: உணர்ச்சியே ஒரு முழு மனிதனையும் நன்கு இயக்கவல்ல சக்கரம். இதைச் சந்தேகிக்க இடமில்லை. யாருக்கும் தெரிந்தது. ஆனால், நம்மையே ஏமாற்றிக்கொள்ளத் தேவை ஏற்படுகிறது. மனிதர்களுக்குத் தங்கள் உணர்வு சரியாக வேண்டுமென்ற ஆசை யில்லை. தாங்கள் செய்வதே சரியென்று எண்ண விரும்புவதனால், உணர்வை யழிக்கும் பொருள்களைத் தெரிந்தே நாடுகிறோம்.

V

மனிதர்கள் குடிக்கிறார்கள்; புகை பிடிக்கிறார்கள். இவை தற்செயலாய் வந்தனவல்ல, மடத்தனத்தாலன்று, மன எழுச்சிக்கன்று; சந்தோஷத்திற்கன்று; மனச்சாட்சியின் வார்த்தை கேட்காமலிருக்கும்படி செய்யவே குடியும் புகையும். இது உண்மையானால், குடியால் வரும் பயன் கோரமானது. சுவர் நேராக வைப்பதற்கு, தூக்குக் குண்டும் மூலை சரியாக வைப்பதற்கு மூலை மட்டமும் இல்லாமல், நினைத்தபடி யெல்லாம் சாய்ந்துபோகக் கூடிய ஒரு தூக்குக் குண்டும், விரியவும் குறுகவும் கூடிய ஒரு மூலைமட்டமும் உபயோகித்துச் சுவர் வைக்க ஆரம்பித்தால், அக் கட்டிடம் எப்படி யிருக்குமென்று நினைத்துப் பாருங்கள்.

ஆயினும், உலகத்தில் போதையால் இம்மாதிரிதான் நடந்துவருகிறது. மனச்சாட்சியை ஒட்டிய வாழ்க்கை யில்லை. ஆகையால், வாழ்க்கைக் கேற்ப மனச்சாட்சி வளைந்து கொடுக்கவேண்டிய திருக்கிறது.

இதைத் தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையில் பார்க்கலாம். தனிப்பட்ட மனிதர்கள் சேர்ந்த சமூகத்திலும் காணலாக.

உணர்வை மயக்கி வைப்பதன் பொருள் தெரிய வேண்டுமானால், நம் வாழ்க்கையில் பல சமயங்களில் நாம் என்ன ஆன்ம நிலையை அடைந்தோ மென்பதைக் கவனிக்க வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் யாவருக்கும் பலவித மனக் கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கும்.

அப்பொழுது தோன்றிய கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும். அப்பதிலைப் பொறுத்தது அவர்கள் பிற்கால வாழ்க்கை. அக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொருட்டுக் கூர்ந்த கவனத்தைச் செலுத்தவேண்டி யிருந்தது. அவ்வாறு கவனித்தல் ஒரு வேலை. ஒவ்வொரு வேலையின் ஆரம்பத்திலும், வேலை செய்வது சிரமமாகவும் வருத்தமாகவுமிருக்கும். மனோதிட மின்மையால் அவ் வேலையை விட்டுவிடலா மென்ற எண்ணம் தோன்றுகிறது. முதலில் தேகப் பிரயாசை வருத்தமா யிருக்கும்; மூளை வேலை அதனினும் சிரமமாகத் தோன்றும். வெஸ்ஸிங் என்பார் சொல்வதுபோல, மூளைக்கு எங்கே சிரமம் ஆரம்பிக்கிறதோ அங்கே நினைத்துப் பார்ப்பதை நிறுத்திவிடுகிறோம். ஆனால், எனக்கு அதனோடு இன்னொன்று தோன்றுகிறது. மூளைக்கு எங்கே சிரமம் தொடங்குகிறதோ அங்கிருந்து மேல் சென்றதும் பயனைப் பார்க்கலாம். தனக்கு நேர்ந்த கேள்விக்குப் பதில் சொல்வதில் ஒருவன் சிரமம் காண்கிறான்; பல தடவையில் அதிக சிரமம். ஆகையால் அதை விடுக்க நினைக்கிறான். போதைப் பொருளை உபயோகிக்காமல், உணர்வில் எழும் கேள்வியைத் தடுக்கவும், அதற்குப் பதிலளிக்காம லிருக்கவும் வழியில்லை. தன் முன் தோன்றும் கேள்விகளை விலக்க ஒரு வழி யிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளுகிறான்; அதைக் கைக்கொள்ளுகிறான். பதில் சொல்ல வேண்டிய கேள்விகள் தன்னைத் தொந்தரவு செய்தால், அமைதியற்ற அந்த நிலையிலிருந்து தப்ப இவ்வழிகளை நாடவேண்டி யிருக்கிறது. பின்னர் உணர்வு பதில் கேட்பதில்லை. அறிவு தெளிவாகும் வரை, கேள்விகளுக்குப் பதிலே இராது. அறிவு தெளிந்தபின் அக் கேள்விகள் மறுபடியும் எழும். இம்மாதிரியே மாதக் கணக்காகவும் வருஷக்கணக்காகவும் அல்லது வாழ்நாள் முழுதும் இக் கேள்விகள் பதிலடைய எழுவதும் போதையால் விலக்கப்படுவதுமாய், ஒருவித முடிவும் அடைவதில்லை. இங்ஙனமாக முன்னேற்றம் சிறிதும் ஏற்படுவதில்லை. ஆயினும், அக் கேள்வியின் முடிவினாலேயே நம் வாழ்க்கை இயக்கப் பெறும்.

கலங்கிய தண்ணீர்: தரைமட்டத்தில் விலை யுயர்ந்த பவளம் கிடக்கிறது. அதை யெடுக்க வேண்டும். எடுக்க விரும்புகிறவனுக்குத் தண்ணீரில் இறங்க இஷ்ட

மில்லை. ஆனால் வெளியில் நின்றுகொண்டு தண்ணீரைக் கலக்குகிறான்; தெளிவடைந்ததும் மறுமுறையும் கலக்குகிறான். மனிதன் வாழ்க்கை இதை ஒத்தது. வாழ்நாள் முழுதும் போதையைத் தேடுகிறான். தெளிவில்லாத முரண்பட்ட கொள்கைகளைக் கொள்ளுகிறான். கொண்டதை விடுவதில்லை. அறிவு தெளிவடையும்போ தெல்லாம் ஒரே சுவரில் மாறிமாறி முட்டிக்கொள்ளுகிறான். பத்து இருபது வருஷமாக அதே சுவரில்தான் முட்டிக்கொண்டான். அந்தச் சுவரை இடித்தெறிய முடியவில்லை. ஏன்? கூர்ந்த நினைப்பாலே அச்சுவரை இடிக்க முடியும்; ஆனால், அந் நினைப்பையே மழுப்பி விடுகிறான்.

ஒருவன் தான் குடித்த காலத்திய வாழ்வை, குடிக்காதவன் வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கட்டும்; வேற்றுமை தெரியும். போதை வாய்ப்பட்டவர்களுக்கும், அவ்வெறி பிடியாதவர்களுக்கும் உள்ள வேற்றுமை யாவர்க்கும் தெளிவாகத் தெரியும். போதைப் பொருளை அதிகமாக உட்கொள்ளுகிறவன் நல்வழியை நாடச் சிறிதும் முயல மாட்டான்.

VI

அபினியும் கஞ்சாவும் மனிதருக்குப் பயங்கரமான கெடுதல்களைச் செய்வனவாகச் சொல்லப்படுகின்றன. பற்பல குடிகளால் வரும் கெடுதல்கள் நமக்கு நன்கு தெரியும்; நாகரிகமடைந்தோ ரெனக் கருதப்படுபவரும் மக்களிற் பெரும்பான்மையோரும் மிதமாகக் கொள்ளும் திராட்சை ரசம், பீர், புகையிலை முவலியவற்றால் சமூகத்திற்கு வரும் கெடுதல்கள் மிகமிகப் பயங்கரமானவை; முன்னையவற்றிலும் பலமடங்கு அதிகமானவை.

சமூக முன்னேற்றத்திற்கு உதவியான அரசியல் வேலைகள், உத்தியோக வேலைகள், விஞ்ஞான, கலை, சித்திர வேலைகள் முதலியவை, குடித்துப் போதை யடைந்து அறிவு கலங்கியவர்களாலே செய்யப்படுகின்றன வென்பதை யோசிக்கும்போது, குடியால் வரும் தீமை எவ்வளவு பயங்கரமான தென்று தெரிகிறது.

சமூகத்தில் நடுத்தரநிலையி லிருப்பவர்கள் தினம் சாப்பாட்டுடன் குடிக்கிறார்கள்; மறுநாள் அவ் வெறி அவர்க

ளிடமில்லை யென்று நினைக்கிறோம்; இது தவறு. நேற்று ஒரு புட்டி கள், ஒரு போத்தல் சாராயம் அல்லது இரண்டு கிண்ணம் 'ஏல்' குடித்தவன் அவ் வெறியினின்றும் மறு நாள் நீங்குவதில்லை. வெறிக்குப்பின் மனத் தளர்ச்சியும் சோர்வும் ஏற்படுகின்றன. அவை புகை குடிப்பதால் அதி கரிக்கின்றன. வழக்கமாகப் புகை குடித்து அதனோடு மிதமாகக் கள் குடிப்பவன் தன் சுய அறிவுக்கு வர வேண்டுமானால், அவை யிரண்டையும் ஒரு வாரத்திற் கேனும் நிறுத்த வேண்டும். ஆனால், ஒருவரும் அங்ஙனம் நிறுத்துவதில்லை.*

ஆள்வோர் செய்கையும், அறிவுறுத்துவோர் செய் கையும், ஆளப்படுவோர் செய்கையும், அறிவிக்கப்படு வோர் செய்கையும் நம்மைச் சுற்றி நடக்கும் அனேக செய்கைகளும் போதை வெறியில் செய்தவையாகின்றன.

நான் சொல்வது வேடிக்கை யென்றோ மிகைப்படுத் திச் சொல்வதென்றோ கருதலாகாது. அனேகர் குடி வெறி யில் வாழ்வதால், ஆண்மைத்தனம் குறைந்து பேடிகளாகி விட்டார்கள். எபீல் கோபுரம் கட்டுவதுமுதல் போருக் குப் போவதுவரை, நம்மைச் சுற்றி நடக்கும் பல காரியங் களை, குடியாதவர் செய்ய முடியுமா?

தேவை யில்லாமல் கம்பெனி ஏற்படுகிறது. பணம் சேருகிறது. கூலிக்கு ஆளுண்டு. கணக்குகள் தயார். வேலை முறையும் தயார். இலட்சக்கணக்கான நாள் வேலை.

---

* ஆனால், குடிக்காதவர்களைவிட குடிக்கிறவர்கள் பல சமயங் களில் நல்ல அறிவாளிகளாய் மேல்நிலையி லிருக்கிறார்களே? குடிக்கா தவர்கள் கீழ் நிலைமையி லிருக்கக் காண்கிறோமே என்று கூறலாம்.

அதற்குப் பதில், ஒன்று: குடிக்கிறவர்கள் குடிக்காவிட்டால் எந் நிலைமைக்கு போயிருப்பார்க ளென்று நமக்குத் தெரியாது. மேலும், இரண்டு: குடித்துங்கூட அறிவாளிகள் மிகுந்த வேலை செய்கிறார்க ளென்றால், குடிக்காமல் இன்னும் அதிக நல்ல வேலைதானே செய்ய வேண்டும்? கான்ட் குடிக்காவிட்டால் விநோதமான அழகற்ற நடை யில் எழுதி யிருக்கமாட்டாரென்று எனது நண்ப ரொருவர் சொன்னார். கடைசியாக, ஒருவனுக்கு அறிவும் நல்லொழுக்க வுணர்ச்சியும் குறைந் திருந்தால், மனச்சாட்சிக்கும் வாழ்க்கைக்கு முள்ள வேற்றுமையை நன்குணர்வ தில்லை. ஆகையால் அவனுக்குப் போதை அதிகம் தேவை யில்லை. கூறிய அறிவும் ஒழுக்க வுணர்வுமுடையவன் மனச்சாட்சிக்கும் வாழ்க்கைக்குமுள்ள சிறு வேற்றுமையையும் உடனே அறிந்து, அதிக போதை கொண்டு, அதனாலே பாழடைகிறான். —லியோ டால்ஸ்டாய்.

கோபுரத்தைக் கட்ட ஆயிரக்கணக்கான டன் இரும்பு வேண்டியிருக்கிறது. மேலே ஏறுவதும் அங்கே சிறிது தயங்குவதும், பின்னர்க் கீழே யிறங்குவதும் தங்கள் கடமை யென்று கோடிக்கணக்கான ஜனங்கள் நினைக்கிறார்கள். இதனைக் கட்டியதால், அல்லது இதற்குப் போவதால் ஒரு சிந்தனையும் உண்டாவதில்லை. ஒரு வேளை, வேறு கோபுரம் கட்டலா மென்றோ அல்லது பெரிய கோபுரம் கட்டலா மென்றோ தோன்றலாம். வெறியில்லாதவர் இவ் வேலை செய்வாரா? வேறொரு உதாரணம் பார்ப்போம். ஐரோப்பிய ஜனங்கள் பற்பல வருஷங்களாக மக்களைக் கொல்லச் சிறந்த வழிகளைத் தேடுகிறார்கள். அதைக் கூடுமானவரை எல்லா இளைஞர்களுக்கும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவர்கள் வயது முதிர்ந்ததும் மக்களைக் கொல்லத் தயார். நாகரிக மற்றவர் படையெடுத்துவர முடியாதென்பது யாவருக்கும் தெரியும். நாகரிகமுள்ள ஒரு கிறிஸ்துவ தேசத்தார் மற்றொரு தேசத்தாரைக்கொல்ல இவ்வளவு வேலை. இவ் வேலை தாங்கமுடியாதது, வருத்தம் தருவது, அசௌகரியமானது, அழிவைத் தருவது, ஒழுங்கற்றது, தூய்மை யற்றது, அறிவற்றது. ஆயினும் ஒருவரையொருவர் கொலை செய்யத் தயாராகிறோம். சிலர் அரசியல் உடன்படிக்கையால், யாருதவி கொண்டு யாரைக் கொல்வதெனத் தீர்மானிக்கிறார்கள். சிலர், கொலையாளிகளை ஏவல் செய்கின்றனர். பிறர் தங்கள் விருப்பத்திற்கு விரோதமாய், மனச்சாட்சிக்கு விரோதமாய், அறிவுக்கு விரோதமாய் கொலைக்குத் தயார் செய்ய ஒப்புக்கொள்ளுகிறார்கள். வெறியில்லாதவர்கள் இக் காரியம் செய்வார்களா? தெளிவடையாத அறிவுடைய குடியர்களே இதைச் செய்வார்கள். தெளிவடையாதாரே வாழ்க்கைக்கும் மனச்சாட்சிக்குமுள்ள வேறுபாட்டைப் பொறுக்க முடியும். இவ்வாறு வாழ்கிறது சமூகம்.

மனச்சாட்சிக்கு இவ்வளவு ஒவ்வாத செய்கையோடு முற்காலத்தில் வாழ்க்கை நடத்தி யிருக்கமாட்டார்களென்றே நான் நம்புகிறேன்.

மக்கள் சமுதாயமே சேற்றில் இன்று மாட்டிக் கொண்டதுபோ லிருக்கிறது. அறிவுக்குத் தகுந்த உன்னத நிலையை மனிதன் அடையவிடாமல் ஏதோ வெளித்

தடை யிருப்பதுபோல் தோன்றுகிறது. தடையா யிருப்பது போதை மட்டுமே. வெறியுடன் வேறு காரணமிருப்பினும் இது முதன்மையான காரணம். போதை காரணமாகச் சமூகத்தில் பெரும்பாலார் கஷ்டமடைகின்றனர்.

மக்கட் சமுதாயம் இக் கொடுமையி லிருந்து தப்பும் நாள் சிறந்த நாளாகும். அந்நாள் சமீபத்தில் தெரிகிறது. தவற்றை மக்கள் உணருகிறார்கள். போதைப் பொருள்களைப்பற்றி நமக்குள்ள எண்ணங்கள் மாறி வருகின்றன. இப் பொருள்களால் விளையும் கேட்டை மக்கள் தெரிந்து கொண்டார்கள். அவைகளைப் பிறருக்கும் காட்டுகிறார்கள். இந்த உணர்ச்சி நம்மை முன்னுக்குக் கொண்டு வரும். போதையி லிருந்து காப்பாற்றும் மனச்சாட்சியின் வார்த்தை காதில் விழும். அறிவுக்கேற்ற வாழ்க்கை வரும்.

அவ் வாழ்க்கை ஆரம்பமாகி விட்டது. ஆனால் வழக்கம்போல், கீழ்வகுப்பினர் மேல்வகுப்பினரைப் பார்த்துக் கெட்ட பின்னர்தான் மேல்வகுப்பினர் திருந்த ஆரம்பித்தனர்!

ஜூன் 10, 1890

உழைப்பும் சோம்பலும்

"உன் ஜீவனத்துக்காக நெற்றி வேர்வை நிலத்தில்விழ வேலை செய்; மண்ணிலிருந்தே நீ பிறந்தாய்; மீண்டும் மண்ணுக்குப் போகும் வரை இவ்வாறு செய்": ஜெனிசிஸ் iii. 19.

திமோதி மிகாலோவித் போந்தாரர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதன் கைப்பிரதியை வாசித்தேன். முதலிலும் முடிவிலும் மேலே கண்ட வாக்கியம் வருகிறது.

அது மிக உயர்ந்த புத்தகம்; எண்ணத்தின் திண்மையும், தெளிவும், நடையழகும் உடையது. ஒவ்வொரு வரியிலும் ஆர்வம் ததும்புகிறது. அதன் கருத்துக்கள் முக்கியமானவை; உண்மையும் ஆழமும் உடையவை.

அப்புத்தகத்தின் முக்கிய கருத்தென்ன? வாழ்க்கையில் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? எது அவசியமான நல்லவிஷயம் என்பதல்ல; அவசியமான நல்ல விஷயங்கள் பலவற்றுள்ளும் எதை முதலில் செய்ய வேண்டும், எதை இரண்டாவது செய்ய வேண்டும், எதைப் பின்னர்ச் செய்ய வேண்டும் என்பதே.

லௌகிக வாழ்க்கையிலேயே இது முக்கியமென்றால், மனிதர் கடமைகளை விவரிக்கும் சமய வாழ்க்கையில் இது அதிக முக்கியமாகும்.

பழைய காலத்தில் பாதிரி தாஷியன் என்பார் சொல்லுகிறார்: 'மனிதனுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களிற் பல, கடவுளைத் தெரிந்து கொள்ளாததால் ஏற்படவில்லை; பல தெய்வங்களைக் கொள்வதாலேயே ஏற்பட்டிருக்கின்றன. ஒருவனே தேவன். மனிதர்கள் செய்ய வேண்டுமென்று ஒப்புக் கொள்ளும் கடமைகளுக்கும் இந்த எண்ணம் பொருந்தும். நம் வேலைகள் என்னவென்று தெரிந்து கொள்ளாததால் நமக்குச் சங்கடங்களும் கஷ்டங்களும் நேரவில்லை; ஆனால் பொய்யான வேலைகளை வேலையாகக் கொள்வதாலும் கடமை அல்லாததைக் கடமையாகக்

பாவிப்பதாலும், அவசியமாக முதலில் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டிய வேலையென்றே கொள்ளாமலிருப்பதாலுமே இன்னல்கள் பலவும் வருகின்றன. “உன் ஜீவனத்துக்காக நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்” என்று வேதத்தில் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறது ; அதுவே அவசியமாக முதலில் செய்ய வேண்டிய வேலை யென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதை மக்கள் மறந்தும் ஒளித்தும் வருகிறார்கள் ; சிறந்த அந்த வேலைக்குப் பதிலாக உபயோகமற்ற அல்லது கேடான வேலைகளையே மக்கள் சமயத்தொண்டென்று கொள்ளுகிறார்கள் ; அதனாலேதான் மக்கள் வாழ்க்கையில் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன.’ இவைகளைப் போந்தாரர் உறுதியாகக் கூறுகிறார்.

அதுவே வேதத்தில் கடவுள் தந்த கட்டளை ; அதற்கு மாறாக அவர் எங்கும் சொல்லவில்லை. ஆகவே, வேதம் பரிசுத்தமான தென்றும் சத்தியமான தென்றும் நம்புவோர், அவர் சொல்வது அனுசரிக்கத் தக்கதென்று ஒப்புக்கொள்வார்கள். வேதத்தை நம்பாதோருக்கும் அதன் உண்மையைக் காட்டலாம். போந்தாரர் தம் புத்தகத்தில் அவ்வாறு காட்டியு மிருக்கிறார். மனித வாழ்க்கையின் நிலையை வெறுப்பின்றி ஆராய்வார்க்கு இவ்வுண்மை மனிதனே—இறைவனல்ல—அறிந்து கொண்ட உண்மை யென்பதும் புலப்படும்.

இவ்வாராய்ச்சிக்கு ஒரு சங்கடம் உண்டு ; வேதத்திற்குப் பொருள் கூறும் பாதிரியார்களிற் பலர், முரண்பட்ட அர்த்தமற்ற பொருள்களையே சொல்லும் வழக்கமுண்டு ; ஆகையால் வேத வாக்கியம் உண்மையோடொட்டி யிருக்கிற தென்றாலே சிலருக்கு உண்மையில் அவநம்பிக்கை ஏற்படுகிறது.

“வேதத்தை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? எதற்கு வேண்டுமானாலும் அதிலிருந்து ஆதாரம் காட்ட முடியும்? அதிலிருப்பன யாவும் குப்பை” என்று சொல்வது நியாயமில்லை. மனிதர்கள் வேதத்திற்குத் தப்பான பொருள் கூறுவார்களானால், அது நிச்சயமாக வேதத்தின் குறையன்று ; ஒரு மனிதன் உண்மையைக் கூறுகிறான் ; அவ்வுண்மை வேதத்திலிருப்பின், அது அவனுடைய குறையன்று.

வேதங்கள் மனிதர் எழுதியவை என்றே வைத்துப் பேசுவோம். மனிதர் எழுதிய மற்றப் புத்தகங்களை விடுத்து, இப்புத்தகங்களை மட்டும் கடவுளே சொன்ன வார்த்தைகளாக மக்கள் நம்புகிறார்கள். இதற்குக் காரணம் என்ன ?

இதன் காரணம் வெளிப்படை.

மனிதர்களுக்குத் தெரிந்த எல்லாப் புத்தகங்களையும் விட இவ்வேதமே உயர்ந்த புத்தகமாக விருப்பதால், மூட நம்பிக்கையுள்ள ஜனங்கள் இவ் வேதம் கடவுள் சம்பந்த முடையதென்பர்; அதனாலேதான், சிலர் இவ்வேதங்களைப் புறக்கணித்த போதிலும், இவை கடவுள் தன்மை வாய்ந்தன எனக் கொண்டாடப் பெற்று வருகின்றன. வேதங்களைக் கடவுள் தன்மை பொருந்தியவை என்கிறோம்; மக்கள் அறிவின் ஒளி அதிலிருப்பதால், வேதம் அழியாது வருகிறது. பைபிள் என்று சொல்லப்பெற்ற வேதத்தில் பல பாகங்கள் இக் குணங்களை யுடையன.

வேதவாக்கை மக்கள் மறந்துவிட்டார்கள்; அதைத் தேடுவோருமில்லை; தேடினாலும், அதைத் திரித்துரைத்தார்கள். இப்படிக் கிடந்த ஒரு வேத வாக்கைப் போந்தாரர் விளக்கி, புத்தகத் தலைப்பில் அமைத்தார்.

அவ் வாக்கியத்தின் கருத்தை சிலர் அறிவதில்லை; தேவலோகக் கதை முழுவதும் அப்படியே நடந்ததாகக் கொள்வார்கள்; ஆனால், இயற்கையில் மனிதர் குணங்கள் மாறுபட்டுள்ளன என்ற உண்மையை உருவகப்படுத்திக் காட்டுவதே அக் கதையின் நோக்கம்.

இறப்பதற்கு மனிதன் அஞ்சுகிறான்; ஆனால் அவன் இறந்தே போகிறான். நன்மை தீமை தெரியாத போது, மனிதன் இன்பமா யிருப்பதாகக் காணப்படுகிறான். ஆயினும், அறிவைப் பெறத் தீவிரமாக முயலுகிறான். மனிதனுக்குச் சோம்பல் அதிகம், சிரமமின்றித் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறான்; ஆயினும், உழைப்பினால்தான் மனித சமூகம் உயிர்தாங்க முடியும்.

போந்தாரர் எடுத்துக் காட்டுகிற வாக்கு உண்மையென்பதனாலேயே அது முதன்மை யானது; அவ் வாக்கை இறைவனே ஆதாமுக்குச் சொன்னு

ரென்று கருதப்படுவதால் அல்ல. அது, மனித வாழ்க்கையிலே நிச்சயமான ஒரு விதியைச் சொல்லுகிறது. நியூட்டன் ஆகர்ஷண சக்தியைப் பற்றிய விதியைக் கண்டு சொன்னார். நியூட்டன் சொன்னதனால் அவ்விஷயம் உண்மை யாகிவிடவில்லை; ஆனால், நியூட்டனைப்பற்றி எனக்குத் தெரியும்; உலகத்தில் என்றுமுள்ள ஓர் உண்மையைக் கண்டு, அதன் மூலம் பல விஷயங்களை விளங்கச் செய்தமைக்காக அவருக்கு நன்றி பாராட்டுகிறேன்.

'உன் ஜீவனத்துக்காக நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்' என்ற விதியும் இதை யொத்தது. பல விஷயங்களை விளங்கச் செய்கிறது. இதை, ஒருதரம் தெரிந்துகொண்டபின், என்னால் அதனை மறக்க முடியவில்லை. இதை எனக்குத் தெரிவித்தவருக்கு எனது நன்றியுரியது.

இவ்விதி தெரிந்ததாகவும், எளியதாகவும் காணப்படுகிறது; ஆனால், அப்படி யன்று. நம்மைச் சுற்றிப் பார்த்தால் இவ் விஷயம் எளிதன்று என்பது தெரியும். இதைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை. மேலும் இதற்கு நேர் மாறாகவே எல்லோரும் சொல்வார்கள். தோட்டி முதல் தொண்டைமானிறுதியாக ஒருவரும் இந்த நெறியில் நிற்க முயலவில்லை; இதனின்றும் விலகவே முயல்கிறார்கள்; ஜனங்களின் நம்பிக்கையே இவ்வாறு ஒழுக அவர்களைத் தூண்டுகிறது. இவ்விதி அழியாதது; மாறாதது; அதன்படி ஒழுகாவிட்டால், நிச்சயமாகத் துன்பமே ஏற்படும். இதைப் போந்தாரர் தம் புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

இதுவே எல்லா விதியிலும் முதன்மையானதென்றும் மற்றெல்லாவற்றுக்கும் அடிப்படையானதென்றும் அவர் கூறுவார்.

இதன்படி ஒழுகாததனாலேயே, தவறுகளும், பொய்யொழுக்கமும் ஏற்படுகின்றன. ஒவ்வொருவரும் தாமே உழைத்துச் சீவிக்க வேண்டும். இதுவே மனிதர் கடமை. இவ்விதி யாவருக்கும் உண்டு. உயிர் வாழ்வதற்குச் செய்யும் எல்லாவிதமான கடின வேலைகளையும் உணவு தேடச் செய்யும் பணி என்றே கொள்வோம். உணவு என்பதால்

சாப்பாடு, பானம், ஆடை, வீடு, விறகு, முதலியவற்றைக் கொள்வோம்.

மனிதன் வாழவேண்டுமானல் வேலை செய்யவேண்டும். இந்த நியதியைத் தப்பமுடியாது; இதுவே வாழ்க்கைக்கு உறுதி பயக்குமென்றும், ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளவேண்டிய தென்றும் போந்தாரர் கூறுவார்.

ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாகக் கொண்டாடுகிருர்கள்; கோயில் கிறிஸ்துவர் பட்டினி கிடந்து விரதமிருக்கிருர்கள்; மகமதியர் தினம் ஐந்துதரம் வழிபாடு செய்கிருர்கள்; இது போலவே, இவ்விதியையும் ஒரு சமய விதியாகப் பாவிக்கவேண்டும். உணவுக் குழைப்பதைச் சமய விதியாகக் கொண்டால், சொந்த வேலைகளும் சில்லறைத் தொழில்களும் இதற்குத் தடையாக மாட்டா. ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாகக் கொண்டாடுவது அவ் வேலைகளுக்குத் தடையாகவில்லை. ஆண்டுதோறும் எண்பது விடுமுறைநாள் உண்டு; போந்தாரர் கணக்குப்படி, உணவுக்காக உழைப்பதற்கு நாற்பதுநாள் போதும்.

இவ்வுண்மையை யாவரும் தெரிந்துகொள்ளலாம். இதைத் தெரிந்துகொள்ள, கூர்மையான புத்தியோ ஆழ்ந்த அறிவோ தேவையில்லை. இந்த எளிய வழியால் மக்களை எண்ணில்லாத இடைஞ்சல்களிலிருந்து தப்புவிக்க முடியும். இது அதிசயமல்லவா? தெளிவான இந்த எளிய வழியை அறிந்திருந்தும் இதை புறக்கணித்துவிட்டு, நம் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக, பெரிய யோசனைகளையும் சிக்கலான திட்டங்களையும் தேடியலைகிருேம்; இதை நினைக்க நினைக்க இன்னும் நம் அதிசயம் அதிகரிக்கிறது. ஆயினும், இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், உண்மை தெரியும்.

ஒரு வாளி; அதனடியில் ஒரு ஓட்டை. அதை யடைப்பதற்குப் பதிலாக அவ்வழியே போகும் தண்ணீரை நிறுத்தப் பலவிதமாக முயன்ருன் ஒருவன். நமது இன்னல்களைப் போக்க நாம் முயல்வதெல்லாம் இது போலத்தான்.

கொலை, தூக்குத்தண்டனை, சிறைவாசம், சண்டை முதலிய கொடிய செயல்கள் ஒருபுறமிருக்க, வாழ்க்கையிலே மற்ற துயரங்களும் எங்கிருந்தோ வருகின்றன.

ஹிம்சையாலேற்படும் துயரங்கள் நீங்கலாக, மற்றத் துயரங்கள் பசியினாலும், விரும்பிய பொருள் கிடைக்காமையினாலும், தாங்கமுடியாத உடலுழைப்பினாலும், விளைகின்றன; அல்லது பணப்பெருக்கு, சோம்பல், இவற்றால் வரும் கேடு—இவை காரணமாக ஏற்படுகின்றன. ஒரு பக்கம் வறுமைப்பிணி, மற்றொரு பக்கம் செல்வச் செருக்கு. இவ் வித்தியாசத்தை ஒழிக்க ஒத்துழைப்பதொன்றே மனிதனுடைய புனிதமான பணி. எப்படி ஒத்துழைப்பது? மனிதனுக்கு வேண்டிய பொருளைச் செய்யும் வேலையில் ஈடுபடலாம்; தனக்கு வேண்டாத பொருளைத் தானம் கொடுக்கலாம்; மனத்தை படுகுழியில் ஆழ்த்தும் சோம்பலைக் கைவிடலாம்; அதாவது, போந்தாரர் கூறுவதுபோல், தானே பாடுபட்டுச் சீவிக்க வேண்டும்.

சமயவிதிகள், சமூக விதிகள், குடும்ப விதிகள்; இன்னும் எத்தனையோ! சட்டத்தின் மேல் சட்டம்; எங்கு பார்த்தாலும் சட்டம்; சட்டத்தால் கட்டுண்டு கிடக்கிறோம். ஆகையால், நல்லதெதுவென்றும் கெட்டதெதுவென்றும் அறிந்துகொள்ளும் உணர்ச்சியற்றுப்போய் விட்டோம்.

ஒருவன் பிரார்த்தனை செய்கிறான்; மற்றொருவன் படை திரட்டுகிறான் அல்லது அதன் செலவுக்காக வரி வசூலிக்கிறான். மூன்றாவது பேர்வழி நியாயம் வழங்குகிறான். நான்காமவன் புத்தகம் படிக்கிறான். ஐந்தாவது மனிதன் வைத்தியம் செய்கிறான். ஆறாவது ஆசாமி அவர்களைப் படிப்பிக்கிறான். இவ்வகையான காரணங்களால், இவர்கள் தங்கள் உணவின் பொருட்டு உழைக்காமல் தப்புகிறார்கள். அவ்வுழைப்பைப் பிறர்மேல் ஏற்றுகிறார்கள். உழைப்பாலும், களைப்பாலும், பசியாலும் மனிதர் இறந்து வருவதை மறக்கிறார்கள். முதல் முதலாக மக்கள் உயிர்வாழ வேண்டும்; பிழைத்திருந்தால்தான், அவர்களுக்குப் பிரார்த்தனை செய்யவும், படையமைத்துப் பாதுகாவல் செய்யவும், நியாயம் வழங்கவும், வைத்தியம் பார்க்கவும், கல்வி கற்பிக்கவும் முடியும். சுவரில்லாமல் சித்திரம் வரையமுடியுமா? பல கடமைகள் இருக்க முடியுமென்பதை நாம் மறந்துவிடுகிறோம். அவைகளில் முதலில் செய்யவேண்டியது முண்டு; கடைசியில் செய்ய

வேண்டியது முண்டு. முதலில் செய்யவேண்டியதைச் செய்யாமல் கடைசியில் செய்யவேண்டியதை முதலில் தொடங்கக் கூடாது.

நம்முடைய வேலைகளில் கைவிடக் கூடாத முதல் வேலை இதுவென்று போந்தாரர் உபதேசிக்கிறார். இக் கட்மையைச் செய்வதால் எதற்கும் இடையூறில்லை; எதுவும் இதற்கு இடையூறாகாது. இப்பணி மனிதனை வறுமையிலிருந்து மீட்கிறது; குற்றத்திலிருந்து தப்புவிக்கிறது. இவ்வுழைப்பை மேற்கொண்டோரிடையில் கட்சிப் பிளவுண்டாகாது; வெறுப்பும் போரும் ஏற்படா; அவ்வெறுப்பைப் போலிப் புகழ்ச்சியால் மறைக்க வேண்டியிராது. இதுவே செருக்கு ஆசை யென்னும் இரண்டு இறகுகளையும் அறுத்து, யாவரையும் சமநிலையில் நிறுத்துமென்று போந்தாரர் சொல்லுகிறார்.

மேன்மையான உணவு உண்டு, அழகிய உடை தரித்து, சுத்தமான கையோடு, கிணறுவெட்ட முடியாது; உழவும் முடியாது. இந்தப் பணிகளில் யாவரும் சேருவதால், ஒருவருக்கொருவர் நெருக்கமுண்டாகும். இயற்கையான வாழ்க்கையினின்றும் விலகி அதனால் அறிவிழந்தவர்கள் உணவின் பொருட்டு உழைப்பதனால் அறிவைப் பெறுவார்கள். கடவுளாலும், இயற்கை நியதியாலும் விதிக்கப்பட்ட உபயோகமான தொழில்செய்வோருக்கு வாழ்க்கையிலே திருப்தியும் ஆனந்தமும் பிறக்கும்.

இந்த உழைப்பே மனிதரைக் காப்பாற்றும் மருந்தென்பர் போந்தாரர். கடவுள் அமைத்த நியதியென்று இதைக் கொண்டால், அதாவது ஒவ்வொரு மனிதனும் உணவின் பொருட்டு உழைத்தே தீரவேண்டுமென்று கொண்டால், யாவரும் ஒரே கடவுளை வணங்குவார்கள். ஒருவரை ஒருவர் நேசிப்பார்கள்; துன்பங்கள் நீங்கும்.

நாம் பழகிய வாழ்க்கையோ இதற்கு மாறானது. செல்வத்தைக் கடவுள் தந்த நன்மையாகவும் சமூகத்தில் உயர்ந்த ஒரு நிலையாகவும் கருதுகிறோம்; போந்தாரர் சொல்லிய வார்த்தைகளை ஆராய்வதில்லை; அவை குறுகிய நோக்கம் கொண்டவை யென்றும், ஒருதலைப் பட்சமானவை யென்றும் வெறும் வார்த்தையென்றும் மக்கள் எண்ணுகிறார்கள். இது சரியன்று. அவர் சொல்

லைக் கவனித்து, ஆராய்ந்து அதிலுள்ள உண்மையைக் கொள்ளவேண்டும்.

பலவித சமயக் கொள்கைகளையும் அரசியல் கொள்கைகளையும் நாம் ஆராய்ந்து பார்க்கிறோம். போந்தாரர் சொல்லியதையும் ஒரு கொள்கையாக ஆராய்ந்து பார்ப்போம். சமயப் போதனையில் இவ்விதியை விளக்கிக் காட்டி, உணவின் பொருட்டு உழைக்கவேண்டும் என்ற இப்புனிதமான விதியை யாவரும் ஒப்புக்கொண்டால் என்ன பயன் விளையுமென்பதைக் கவனிப்போம்.

எல்லோரும் அப்போது வேலை செய்வார்கள். தங்கள் வேலையால் கிடைத்த பயனையே அனுபவிப்பார்கள். தானியத்தையும், அவசியமாகத் தேவையுள்ள பொருள்களையும், விற்பனைப் பொருளாகவோ, வாங்கவேண்டிய பொருளாகவோ ஆக்கமாட்டார்கள்.

இதனால் விளைவதென்ன?

தரித்திரத்தால் மனிதன் சாகமாட்டான். ஒருவன் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் வேண்டிய அளவு உணவுப் பொருளைச் சில காரணங்களால் பயிர்செய்து கொள்ளாவிட்டால், அதிக விளைவுடைய சிலர் அவனுக்குக் கொடுத்துதவுவார்கள். தானியத்தை வியாபாரம் செய்ய முடியாது; அதற்கு வேறு உபயோகமில்லை; ஆகவே, கொடுத்துதவ எல்லோரும் மிகத் தயாரா யிருப்பார்கள். மோசடியாலும் ஹிம்சையாலும் மனிதன் தன் உணவைத் தேடவேண்டியதில்லை. எனவே, சூதுக்கும் ஹிம்சைக்கும் இடமில்லை. குற்றம் செய்யவேண்டிய அவசியமில்லை யாதலால், குற்றமேயில்லை.

இப்படி யிருந்தும், ஒரு மனிதன் நடத்தையில் மோசடியும் ஹிம்சையும் இருக்குமானால், அவை அவனுக்கு வழக்கமாய் விட்டன என்றே சொல்லவேண்டும்.

பலமற்றவர்கள், சில காரணங்களால் உணவுக்காக உழைக்க முடியாதவர்கள், தேடிய உணவை இழந்தவர்கள் முதலியவர்கள் சோற்றுக்காகத் தங்களையோ தங்கள் உழைப்பையோ, தங்கள் ஆன்மாவையோ, விற்கவேண்டியதில்லை.

உணவின் பொருட்டு உழைக்காமல் தப்பவும், உழைப்பைப் பிறர் தலையில் சுமத்தவும் இப்போது முயலுவதுபோல் முயலமாட்டார்கள். எளியாருக்கு அதிக வேலை கொடுப்பதும், வலியாருக்கு வேலையே இல்லாதபடி விலக்குவதும் ஏற்படாது.

தொழிலாளிகளின் வேலைச் சிரமத்தை நீக்குவதில் மனிதன் தன் அறிவை உபயோகிப்பதில்லை. சோம்பேறியின் சோம்பலைச் சுகமாக்குவதிலும், அதை அதிகப்படுத்துவதிலுமே மனம் போகிறது. அறிவில்லாத மக்கள் வண்டியைத் தலைகீழாகப்போட்டு இழுக்கிறார்கள். உணவின் பொருட்டு உழைத்து, உழைப்பதன் அவசியத்தை வாழ்க்கையில் உணர்ந்தால், வண்டியை நேராக இழுத்தது போலாகும்; வண்டி உடைந்துவிடாமல் சுலபமாகச் செல்லும். இந்த உழைப்பில் வெறுப்பிருக்கும் வரை, நமது பொய் வாழ்க்கையை எவ்வளவு திருத்த முயன்றாலும் பயனில்லை. வண்டி தலைகீழாகக் கிடக்க, வண்டிச் சக்கரம் மேலே யிருக்க, நாம் எவ்வளவு தூரம் பழுது பார்த்தாலும், பயன்படாது. முதலில் வண்டியை யல்லவா திருப்பி, நேராக நிற்கச் செய்யவேண்டும்?

இதுவே போந்தாரர் கருத்து. இது எனக்கு முழுதும் உடன்பாடு. இவ்விஷயம் இன்னொரு விதமாகவும் எனக்குப் புலப்படுகிறது. முன்னே, மனிதனை மனிதனே தின்னும் காலமுமிருந்தது. மனிதருக்குள் ஒற்றுமை வளர வளர, ஒருவரை ஒருவர் தின்பது நின்றது. பின்னர், ஒருவர் உழைப்பால் உண்டான பலனை, மற்றவர் அபகரித்து, அவரைத் துன்புறுத்தியும் அடிமையாக்கியும் வந்தனர். மனிதருக்குள் நேயப்பான்மை அதிகரிக்க, மனிதரை மனிதர் அடிமையாக்குவது நின்றது. ஹிம்சை பல காரியங்களில் மறைவாகவே செய்யப்படுகின்றன; வெளிப்படையாக ஹிம்சை செய்வது நின்றுவிட்டது. பிறர் உழைப்பால் உண்டான பலனை வெளிப்படையாக இப்போது மற்றவர் அபகரிப்பதில்லை. ஆனால், பிறர் கஷ்டப்படுவதைப் பயன்படுத்திக்கொண்டு அவர் பொருளை அபகரிக்கிறோம். மக்களிடையே ஒற்றுமை அதிகரித்தால் பிறரிடத்துப் பசி, குளிர் முதலிய துன்பத்தைச் சமயமாகக்கொண்டு பொருள் பறிக்கும் வழக்கம் நின்றுவிடுமென்று போந்தாரர் கருதுகிறார். பொருள்

பறிக்கும் வழக்கத்தை நீக்கவேண்டியதுமன்றி, உணவின் பொருட்டு ஒவ்வொருவரும் தாமே உழைக்கவேண்டும்: முக்கியமான பொருள்களை விற்கக்கூடாது; உண்ணவும், உடுக்கவும், தங்கவும் பிறருக்கு உதவவேண்டும்.

இன்னொரு விதமாக இவ்விஷயத்தைக் கவனிப்போம். இதைச் செய்யவேண்டாம் என்று சொல்லுகிற விலக்கு விதிகள் மட்டும் நமக்குப்போதாவென்பதைத் தெரிந்திருக்கிறோம். எதைச் செய்யவேண்டுமென்பதையும் அறிந்திருக்கவேண்டும். கிறிஸ்து நாதரின் ஐந்து சட்டங்களை எடுத்துக்கொள்வோம். 1. ஒருவரையும் அற்பனென்றோ பைத்தியமென்றோ எண்ணாதே; ஒருவரையும் கோபிக்காதே. 2. புருடனும் மனைவியும் கூடுவதை வெறும் போகமாக எண்ணலாகாது; ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியலாகாது. 3. சத்தியம் செய்யாதே; உன் சுதந்திரத்தைக் கைவிடாதே. 4. பிறர் தரும் இன்னல்களையும் ஹிம்சையையும் பொறுத்துக்கொள்; நீ அவர்களுக்கு ஹிம்சை செய்யாதே. 5. எதிரிகளையும் நண்பராக நேசிக்கவேண்டும்; ஒருவரையும் எதிரியாகக் கருதலாகாது. இந்த ஐந்து கட்டளைகளும் செய்ய வேண்டாதனவற்றையே சொல்லுகின்றன. ஆனால் எதைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிற கட்டளை ஒன்றையும் காணோம்.

நாம் எதைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிற விளக்கமான விதி கிறிஸ்துவின் கட்டளையில் இல்லாதது வியப்பைத் தரலாம். கிறிஸ்துவின் உண்மையான உபதேசத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு அவ்வாறு தோன்றும். அவருடைய உபதேசம் அக் கட்டளைகளிலில்லை; வாழ்க்கையின் பயனைத் தெரிவிப்பதில் அவர் உபதேசம் அடங்கியுள்ளது. வாழ்க்கையின் பயன் என்ன? வாழ்க்கையும் அதன் பெரும்பயனும், மக்கள் எண்ணுவது போல், நம் சொந்த இன்பத்திலில்லை; ஆண்டவனுக்கும் அன்பர்களுக்கும் செய்யும் பணியிலுள்ளது. இது கைம்மாறு கருதி அனுசரிக்கும் சட்டமல்ல; தோன்றாத, உணர்த்தமுடியாத பொருள்களைக் காட்டாமல் காட்டுவது மல்ல; இது, மறைந்து கிடக்கும் வாழ்க்கையின் நீதியை விளக்கிக் காட்டுவதாகும். இவ்வுண்மையை அறிந்தால்தான் வாழ்க்கையின் பெரும்பயனை அடையலாம்.

இதைச் செய் என்பது விதி; இதைச் செய்யாதே என்பது விலக்கு. கிறிஸ்து விதியாகச் சொன்னதெல்லாம் ஒரே விஷயந்தான். கடவுளையும் உன் அயலாரையும் உன்னைப் போலவே நேசி. இதை விளக்கிக்காட்ட முடியாது. இது ஒரு உபதேசம்தான்; ஆனால், இதில், எல்லா உபதேசங்களும் அடங்கியிருக்கின்றன. யூதர் சட்டங்களும் பௌத்தர் சட்டங்களும், கிறிஸ்துவின் சட்டங்களைப் போல், உண்மை வாழ்க்கை வேண்டுவோருக்கு இடையூறுயுள்ள இவ்வுலகப் படுகுழிகளைக் காட்டுகின்றன. ஆகையால், விளக்குக்கள் பலவிருப்பினும், வாழ்க்கைக்கு விதி ஒன்றே இருத்தல் கூடும்; ஒன்றாகவே இருத்தலும் வேண்டும்.

ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையும் எங்கேயோ செல்லுகிறது. வாழவேண்டுமென்ற ஆசை இருக்கிறதோ இல்லையோ, நாம் வாழ்கிறோம்; வாழ்க்கையும் நடக்கிறது. ஒழுகவேண்டிய நெறியை மனிதனுக்குக் கிறிஸ்து காட்டுகிறார். அதனோடு, மற்றவர்கள் அப்பாதையிலிருந்து பிரியும் வழிகளையும் காட்டுகிறார்கள். பிரியும் சிறு நெறிகள் நேர்பாதையினின்றும் நம்மை வெகுதூரத்திற்கு கொண்டு போய்விடும். அந் நெறிகள் சேராவண்ணம் நமக்கு அவர் தந்த சட்டங்கள் பல; அவையே விலக்கு விதிகள்.

கிறிஸ்து விலக்கு விதியாகிய சட்டங்கள் ஐந்தைத் தந்தார். நம்மால் இன்றுவரை, அச் சட்டங்களோடு ஒன்றைக் கூட்டவும் முடியவில்லை, அவற்றிலிருந்து ஒன்றை நீக்கவும் முடியவில்லை. அவைகளே தேவை; அவைகள் யாவுமே தேவை. பாதையைக் காட்ட ஒரே ஒரு சட்டந்தான் தந்திருக்கிறார். ஏனென்றால், நாம் ஒரு லட்சியத்தை அடைவதற்கு ஒரே நேர் வழிதான் இருக்கமுடியும்.

ஆகையால், உண்மை தெரியாதவர்களும், அதில் நம்பிக்கை யில்லாதவர்களும், கிறிஸ்து காட்டிய நெறியை நம்பாதவர்களுமே அவர் காட்டிய வழியில் நியதி எதுவும் இல்லை யென்றும் விலக்குக்களே யிருக்கின்றனவென்றும் கூறுவார்கள். அவர் காட்டிய வழியில் நம்பிக்கையுள்ளவர்கள் அவர் உபதேசத்தில் விதிகளைத் தேடியே திரியமாட்டார்கள். வாழ்க்கையில் பினபற்றுதற்குரிய உண்மை நெறியைத் தெரிவிக்கிற உபதேசத்திலே, செய்யவேண்

டிய பலவகைச் செய்கைகளையும் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

வாழ்க்கை நெறியில் நம்பிக்கையுள்ளவர், புதுப் பிரவாகமுடைய ஜீவநதி போன்றவர். எத்தடைகளையும் பொருட்படுத்தாது நதி செல்லுகிறது. வாழ்க்கை நெறி வழி ஒழுகுவோரும் அவ்வாறே செய்வர். ஓடும் நதியானது தடை வந்தபோது என்ன செய்வது என்று தயங்கி நிற்கிறதா? கிறிஸ்துவின் உபதேசத்தில் நம்பிக்கைகொண்டோரும் இப்படியே தயங்கமாட்டார்கள். நதியோ, மண்ணுக்கும் மரத்துக்கும், புல்லுக்கும் நெல்லுக்கும், பறவைக்கும் மிருகத்துக்கும், மனிதருக்கும் தண்ணீர் அளிக்கிறது; கிறிஸ்துவின் புனிதமொழியில் நம்பிக்கை வைத்தவரும் அம்மாதிரியே நடப்பர். இது கிறிஸ்து சொல்லிய உவமை.

ஏசுவின் மொழியை நம்பினவன் 'நான் என்ன செய்யவேண்டும்' என்று தயங்கமாட்டான். அவன் வாழ்க்கையில், அன்பே சக்தியாகும். அச் சக்தி 'நீ எங்கே செய்யவேண்டும், எதை முதலில் செய்யவேண்டும், எதைப் பிறகு செய்யவேண்டும்' என்று நிச்சயமாகவும் தவறுமலும் காட்டும்.

அன்பின் முதல் வேலை மிக அவசியமான வேலை என்ன? குறிப்பாகவும், வெளிப்படையாகவும் இதற்குக் கிறிஸ்து பதிலளித்திருக்கிறார், பசித்தோர்க்கு உணவளி; தவித்தோர்க்குத் தண்ணீர் கொடு; உடலைப்போர்த்த ஆடை கொடு; ஏழைகளுக்கு உதவி செய்; துன்பத்திலிருந்தும் மரணத்திலிருந்தும், இயற்கையாக உண்டாகும் இடையூறுகளிலிருந்தும் மக்களைத் தப்புவித்து வாழச்செய். இது தான் முதலில் செய்யவேண்டிய பணி. இதனையே நம் அறிவும் போதிக்கிறது; மனச்சாட்சி கூறுகிறது; உணர்ச்சி காட்டுகிறது.

அதாவது, நிலத்தில் செய்யும் முக்கிய, கடினமான முரட்டு வேலைகளை யாவரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.

ஓர் ஊற்றுனது தன்னிடமிருந்து தண்ணீர் எங்கே போகுமென்று கேட்க முடியுமா? புல்லை மோதிவிட்டு

மரத்தின் இலைகளின்மேல் தெளித்து மேலே போகலாம்; அல்லது புல்லின் வேருக்கும் மரத்தின் வேருக்கும் கீழேயும் செல்லலாம். செம்மையான வாழ்க்கையைக் கடைப்பிடித்தவன், 'ஜனங்களுக்கு அறிவு புகட்டவா? அவர்களைப் பாதுகாவல் செய்யவா? அவர்களுக்கு வேடிக்கை காட்டவா? சுகந்தேடவா? அல்லது வறுமையால் மாளாமல் அவர்களைக் காப்பாற்றவா?' என்றெல்லாம் கேட்கமாட்டான். ஊற்றுநீர் தரையில் ஓடிக் குளங்களை நிரப்பி மிருகத்துக்கும் மனிதருக்கும் குடிக்கத் தண்ணீர் தருகிறது. ஆனால், தரைக்குள்ளே ஊறி அதை நனைத்த பின்னர்தான் இவையெல்லாம் செய்கிறது: பள்ளங்கள் தோறும் பாய்ந்து உள்ளே செல்லும் நீர்போல, உண்மை வாழ்க்கையைக் கடைப்பிடித்தவனும், முக்கியமாக வேண்டியவற்றை முழுதும் கவனித்த பின்னரே மற்றவற்றைக் கவனிப்பான். முதலில் ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். அன்பு நெறியிலும் உண்மை நெறியிலும் நடப்பவனுக்கு, பேச்சளவில் மட்டுமல்ல செய்கை அளவிலும், எது முதலில் செய்யவேண்டிய முயற்சி யென்பதைப்பற்றித் தவறான அபிப்பிராயமிராது. பிறருக்குச் சேவை செய்வதே தன் வாழ்க்கையின் பயன் என்று எண்ணுபவன் ஒருநாளும் தவறு செய்யமாட்டான். எதை முதலில் செய்யவேண்டுமென்று அவனுக்குத் தெரியும். கட்டக் கந்தையின்றி, குடிக்கக் கூழின்றித்திரியும் ஏழைகளுக்குக் குண்டுகள் செய்தும், அழகிய ஆபரணங்கள் செய்தும், யாழுங் குழலும் வாசித்தும் நிற்பாருண்டா?

அன்பானது அறிவழிந்து ஒருநாளும் அறியாமையாகாது.

ஒருவனிடத்து அன்பு கொள்ளுகிறோம். அவன் பட்டினியாய்க் கிடக்கும்போது அவனுக்குக் கதை படிப்போமா? உடுத்தத் துணியில்லாதபோது அவனுக்கு அழகிய கடுக்கன் போடுவோமா? அதுபோல், மக்கள்பால் வைத்த அன்பானது, பனியாலும் பசியாலும் கஷ்டப்படுவோரைக் கஷ்டத்தில் தவிக்கவிட்டு, வயிறார உண்டவருக்கு மேலும் சந்தோஷம் அளிக்கிற வேலையில் செல்லாது.

உண்மையான அன்பு—வாய்ச்சொல் அன்பல்ல, செய்கையில் காட்டுகிற அன்பு — அறிவழிந்து மூடத்தன

மாக இராது; உண்மை அன்பு ஒன்றே உண்மையான உணர்வையும் அறிவையும் தருகிறது.

ஆகையால், அன்பு நிறைந்த மனிதன் தவற மாட்டான். அன்பின் முதற்பணி எதுவோ அதையே நிச்சயமாகச் செய்வான். பசித்தோர், வெயிலாலும் குளிராலும் தவிப்போர், அதிக வேலை செய்து வருந்துவோர்—இவர்கள் உயிரைக் காப்பான். இயற்கையோடு போர் புரிந்தே இவ் வேலைகளைச் செய்ய வேண்டும்.

ஒருவன், பசியில் வாடுவோர் அருகிலும் போவதில்லை; அவர்கள் வேலையையும் கஷ்டத்தையும், அதிகமாக்குகிறான்; 'நான் உங்களுக்காகவே வேலை செய்கிறேன். உங்களைக் காப்பாற்றப் பல வழிகள் கண்டு பிடிக்கப் போகிறேன்' என்று தன் கண் முன்னேயே பிராணனை ஜனங்களுக்கு ~~என்று~~ சொல்லுகிறான். இது தன்னையும் பிறரையும் ஏமாற்றுகிறவன் செயல்.

பணி செய்து கிடப்பதே தன் கடன் என்று கொண்ட உண்மை மனிதன் அவ்வாறு சொல்ல மாட்டான். அப்படிச் சொல்வானானால் அவன் மனச்சாட்சி அதை ஒத்துக் கொள்ளாது. ஆனால் இதற்கு ஒரு சமாதானம் சொல்லலாம். வேலைகளை யாவரும் பிரித்துக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்யலாமே என்று மக்களுடைய அறிவின் பிரகாசத்தைக் கன்பூஷியஸ் முதல் மகமது ஈறாகப் பலர் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். கிறிஸ்து அழுத்தமாகச் சொன்ன அதே உண்மையே அவர்களும் சொல்லி யிருக்கிறார்கள்; வெவ்வேறு மக்கள் வெவ்வேறு வேலையைப் பிரித்துக் கொண்டு செய்யலாம் என்ற கொள்கையை அவர்கள் சொல்லவில்லை; நேரான, இயல்பான, தேவையான வழியில் வேலையைச் செய்ய வேண்டும்; பிணியாளர், சிறைப்பட்டோர், பசித்தோர், ஆடையில்லாதார்—இவர்களுக்கே சேவை செய்ய வேண்டும். இவர்களுக்கே உடனே நேரான தொண்டு செய்ய வேண்டும். செய்யாவிட்டால் நம் தொண்டுக்காக இவர்கள் காத்திருக்க முடியாது; இறந்து படுவார்கள்.

மக்கட் பணியையே வாழ்க்கையாகக் கொண்டவனுக்கு முதலில் சொல்லப்பட்ட முக்கிய உண்மை புலப்படும். 'உன் சீவனத்துக்காக நெற்றி வேர்வை நிலத்தில்

விழ வேலை செய்.' இச் சட்டத்தைப் போந்தாரர் முதலில் பிறந்த சட்டமென்பார். இது, என்ன செய்ய வேண்டு மென்று காட்டுகிற விதி.

இது ஒரு விதி; வாழ்க்கையின் பயன் என்னவென்று கிறிஸ்துநாதர் காட்டியதை அறியாதாருக்கே இது விதி. அவருக்கு முன்னிருந்தவர்களுக்கு இது ஒரு விதி. அவர் உபதேசத்தை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கும் இது ஒரு விதியே. கடவுள் பைபிளில் சொல்லியிருக்கிற சட்டப் படிக்கும் நம் அறிவுக்கும் பொருத்தமாகவும் நாம் ஒவ் வொருவரும் உழைத்து உணவைத் தேடிக் கொள்ள வேண்டும். இது விதியாக இருந்தது; உண்மையான உப தேசமும் அவ்வாறே யிருக்கும்.

உணவின்பொருட்டு உழைக்க வேண்டுமென்று நம் உணர்ச்சி சொல்லுகிறது. இது இப்பொழுதும் வேண் டியதே. கிறிஸ்து சொன்ன அருட்பணி என்ற ஒரே விதி யில் அடங்கி விடுகிறது. ஆகையால், உணவின் பொருட்டு உழைக்க வேண்டும் என்பதை இனி விதியாகக் கொள்ள லாகாது; ஒரு விலக்காகவே கொள்ள வேண்டும். கிறிஸ்து வர் கொள்கைப்படி, இது ஒரு சிறு நெறியே; உண்மை வாழ்க்கை யென்னும் பாதையிலிருந்து விலகாமலிருக்க என்ன செய்யக் கூடாதென்பதைக் காட்டுகிறது.

பைபிளில் பழைய ஏற்பாட்டை மட்டும் அனுசரிப்ப வர்கள் இதனுல் என்ன பொருள் கொள்ளுகிருர்கள்? 'உன்னுடைய உணவை உன் கை உழைப்பாலே தேடிக் கொள்.' ஒரு கிறிஸ்துவனுக்கு இச்சட்டம் ஒரு விலக்கா கும். அவனுக்கு இச்சட்டம் என்ன பொருள்படு மென் ருல், 'உன் கையால் உனக்கு வேண்டிய உணவையும் பொருளையும் தேடிக் கொள்ளாமல், பிறர் உழைப்பால் கிடைத்த பொருளைக் கொண்டு உண்டால், நீ ஜனசேவை செய்ய முடியுமென்று எண்ணுதே' என்றே பொருள் படும்.

மனிதர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு பழைய பயங்கரமான படுகுழியைக் கிறிஸ்துவனுக்கு இச் சட்டம் காட்டுகிறது. இப்படுகுழி பழமையானதால் அதன் பயங்கரம் தெரியவில்லை. போந்தாரர் இச்சட்டத்தை

விளக்கியுள்ளார். பழைய ஏற்பாட்டை நம்பினோரும், கிறிஸ்துவின் பைபிளை நம்பினோரும், இவைகளை நம்பாது தங்கள் அறிவையே பின்பற்றுவோருங்கூட இச் சட்டத்தை அனுசரிக்க வேண்டும்.

இச் சட்டத்தின் உண்மையை நிரூபிக்க இன்னும் அதிகம் எழுதலாம்; எழுதவும் முடியும். பல வகையான வாக்கு வாதங்களுக்கும் பதில் கூறலாம்; நம் குற்றம் நமக்கு தெரிகிறது; ஆகையால் சாக்குப் போக்குகளைத் தயாராய் வைத்திருக்கிறோம். இதை வாசிப்போர், தங்கள் உணர்ச்சியைக் கட்டித் தூரத்தில் வைத்து விட்டு, நான் சொல்லுவதில் பிழைகளே கண்டு பிடிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டால், நான் அவர்களுக்கு இச்சட்டத்தின் உண்மையை புலப்படுத்த முடியாது; நான் எவ்வளவு விரித்தெழுதினும், எவ்வளவு அழகாக எழுதினும், எவ்வளவு ஆணித்தரமாக எழுதினும் பயன்படாது.

ஆகையால் தான் நான் வாசகர்களை ஒன்று வேண்டுகிறேன்: உங்கள் அறிவின் ஓட்டம் சிறிது நிற்கட்டும்; பேசாதீர்கள்; வாதம் செய்யாதீர்கள்; நெஞ்சில் கையை வைத்து அதைக் கேளுங்கள். நீங்கள் யாராயிருப்பினும் சரி; மிக்க அறிவு படைத்தோராயினும் சரி; பிறரிடத்து அன்புடையோராயினும் சரி; எப்பதவியிலிருப்பினும் சரி; பசி, பிணி, குளிரால் வருந்தும் ஒருவனை உங்கள் வாசலில் பார்த்து விட்டு, அவன் கஷ்டக் குரலையும் கேட்ட பின்னரும், நீங்கள் பேசாமல் உண்டு கொண்டும், குடித்துக் கொண்டும், உங்கள் ராஜீய விஷயம், கலை, மருத்துவம், படிப்பு, சாஸ்திரம்—இவைகளைக் கவனித்துக் கொண்டுமா இருப்பீர்கள்? மாட்டீர்கள். இருப்பினும் உங்கள் வாசலில் ஏழைகள் எப்போதும் இருக்கிறார்கள். உங்கள் வாசலில்லாவிட்டால், பத்தடி தள்ளி யிருக்கிறார்கள்; அல்லது பத்து மைல் தள்ளி இருக்கிறார்கள்; ஏழைகள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆகையால், நீங்கள் அமைதியுடனிருக்க முடியாது; இதை அறிந்தால் உங்கள் சுகம் விஷமாகி விடும். உங்கள் வீட்டில் அவர்களைப் பார்க்க வேண்டாமென்றால் நீங்கள் அவர்களைத் துரத்த வேண்டும்; அல்லது கடுத்த முகத்தால் விலக்க வேண்டும்; அல்லது அவர்களில்லாத இடத்திற்கு

நீங்கள் செல்ல வேண்டும். ஆனால், அவர்கள் எங்கேயு மிருக்கிறார்கள்.

ஒரு வேளை நீங்கள் அவ்வேழைகளில்லாத விடத்திற்கு ஓடி விட்டாலும், அவர்க ளிருக்கிறார்களென்ற உண்மை பொய்யாகாது. ஆகையால், என்ன செய்ய வேண்டும்?

என்ன செய்ய வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும்; உண்மை உபதேசம் அதைத் தெரிவிக்கிறது.

ஏரைப்பிடி. சீரைத்தேடு. அது கேவலமாகத் தோன்றலாம். அதுவே உயர்ந்த நிலை. பசித்தோர்க்கு உணவு தேடுவோர்க்குத் துணை செய்; ஆடையற்றவர்க்கு ஆடை நெய்வோர்க்குத் துணைசெய்; அஞ்சாதே; சிறந்த தொழில் இவைகளே. உன் பதவி குறைந்து விடாது; அனேக வழியில் உயர்ந்து விடுகிறது. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர். மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்.' பலமில்லாவிட்டாலும் பழக்கமில்லாவிட்டாலும் சிறந்த இந்தப் பணியை மேற்கொள். உணவின் பொருட்டு உழைக்கத் துணிவு கொள்; இயற்கையுடன் போர்புரி. பிறகு, உலகத்தாருக்கு நீயே அச்சாணி யென்பதை அறிவாய்; மெய் வருத்தம் பழக்கமாய் விடும்; உனக்குச் சுயேச்சை ஏற்படும்: வாழ்க்கை நெறியின் முடிவை யடைகிறாய். துன்பக் கலப்பில்லாத பூரண இன்பம் அடைகிறாய். அவ்வின்பம் வேறெங்கும் காணவியலாது. கதவுகளாலும் திரைகளாலும் மூடிக் கொள்வதால் மட்டும் அவ்வின்பம் கிட்டாது.

முன்னம் அறிந்திராத ஆனந்தம் பெறுவாய். இதுவரை உன் சகோதரர்கள் தூரத்திலிருந்து உணவூட்டினார்கள்; கள்ளங் கபடமற்ற அம் மக்களை இப்போது தான் முதல் முதல் தெரிந்து கொள்ளுகிறாய், அவர்களிடம் நீ எதிர்பாராத பல நற்குணங்களையும் அடக்கத்தையும் காண்பாய். அவர்களன்புக்கு நீ பாத்திரமானவனல்ல என்று தோன்றும்படி அவ்வளவு சிறந்திருக்கும் அவர்களுடைய அன்பு.

அவர்களை ஏளனம் செய்து அவர்கள் உழைப்பைக் கொண்டு சீவித்த உன்னை அவர்கள் மதிக்க மாட்டார்களென்றும், ஆனால் அவர்கள் உன்னிடம் அன்பே காட்டு

வார்கள். உன் பிழையை விடுத்து, செய்ய வேண்டுவன வற்றை யறிந்து கொண்டு, தொழில் செய்து பழக்கமற்ற உன் கையால் செய்யும் வேலைக்கு அவர்கள் நன்றியே பாராட்டுவார்கள்.

முன்னர், கடலால் சூழப்பட்டு அதிலிருந்து தப்பிப் பிழைக்க ஒரு தீவுக்குப் போய்விட்டதாக நினைத்தாய். ஆனால், நீ தீவென்று நினைத்தது வெறும் சகதிக் குழி; நீ கடலென்று நினைத்தது சுலபமாக, சந்தோஷமாக, விழாமல் நடக்கக்கூடிய சமதரை. இருட்டுக்கு நீயாகப் போகவில்லை; அறியாமை உன்னை அழைத்துச் சென்றது. பொய்யிலிருந்து தப்பி உண்மையை நாடிச் செல்வோமாக; கடவுள் ஆணையை மாறாமல் அதைக் கடைப் பிடித்து ஒழுகுவோமாக.

சக்தி மலர்

3471

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

க. இன்னுமொரு வார்த்தை

உ. செய்யாமை

ங. முதல்படி

ச. உணர்வழிக்கும் பொருளை உண்பதேன்?

ரு. உழைப்பும் சோம்பலும்

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி, மதுரை